# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 02 திங்கட்கிழமை (19.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 297




07

கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும்



14

வரலாற்றை மாற்றிவிடுமா மாயக்கை



21

மரண தண்டனையை எதிர்த்துப் பிரசாரம்



25

பலமான நிலையில் இலங்கை

### 13ஆவது திருத்தத்தை தாண்டியும் செல்வதா?

# அதிகாரப் பகிர்வுக்கு கிளம்புகிறது எதிர்ப்பு

## அரசின் மூத்த அமைச்சர்களே போர்க்கொடி

கொழும்பு, செப்ரெம்பர் 19

தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் அரசின் முடிவுக்கு அமைச்சர்கள் சிலரே கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். சர்வதேச அழுத்தத்துக்கு அரசு அடிபணிந்து விட்டது என்ற குற்றச்சாட்டை உதயனிடம் தெரிவித்த மூத்த அமைச்சர் ஒருவர், அரசு கூறுவது போன்று அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று ஒரு தீர்வைக் காண நாம் விடமாட்டோம் என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார்.

தேசியப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் அரசுக்கும், கூட்டமைப்பினருக்குமிடையில் மீண்டும் ஆரம்பமாகியுள்ள பேச்சில் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு காண்பது தொடர்பில் இரு தரப்புகளும் இணங்கி இருந்தன.

பகிரப்பட வேண்டிய அதிகாரங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த வரைவில் தெரிவிக்கப்பட்டிருந்த 51 அதிகாரங்களில் 18 அதிகாரங்கள் 13ஆவது திருத்தத்துக்கு அப்பாலானவை என்று அரசு தெரிவித்திருந்தது. எனினும் அவை குறித்துப் பேசித் தீர்க்கலாம் என்றும் அது தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், அரசு 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு வழங்க எடுக்கும் முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்பை வெளியிடுவதன் மூலம் அரசுக்கு நெருக்கடி கொடுக்க அமைச்சர்மார் சிலர் தீர்மானித்துள்ளனர். அந்த எதிர்ப்பு அரசினால் பொருட்படுத்தப்படாத பட்சத்தில் அமைச்சர் பதவிகளையும் தூக்கி எறியவும் தாம் தயாராக இருக்கிறார்கள் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தனது பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்ற நிபந்தனையுடன் உதயனிடம் பேசிய

அரசின் மூத்த அமைச்சர் ஒருவர், "13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வு வழங்கவேண்டுமென்று சர்வதேச அழுத்தம் அரசுக்கு வந்துவிட்டது. அரசு

பக் 27

## மேலும் 1,000 தமிழ் பேசும் பொலிஸார்

கொழும்பு, செப். 19

வடக்கு கிழக்கு உள்ளிட்ட பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பேசக்கூடிய ஆயிரம் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் 22 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட உள்ளன.

தமிழ், சிங்களம், முஸ்லிம் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், இந்த இளைஞர், யுவதிகள் பொலிஸ் துறையில் இணைத்து கொள்ளப்பட உள்ளனர் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனை தவிர 50 சப் இன்ஸ்பெக்டர்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

(சி)

## சர்வதேச அழுத்தத்தை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டம்

### அரச ஆதரவு, அடிப்படைவாதச் சக்திகள் தயார்

கொழும்பு, செப். 19

இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், அதிகரித்துவரும் சர்வதேச அழுத்தங்கள் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிங்கள மக்களை ஒன்று திரட்டி பெரும் எதிர்ப்புப் போராட்டங்களை நாடு முழுவதும் முன்னெடுப்பதற்கு அரசுக்கு ஆதரவான சக்திகள் தீர்மானித்துள்ளன.

இதன் பின்னணியில் கடும் போக்குடைய அரசியல்வாதிகள் சிலர் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படும் அதே வேளை, பௌத்த அமைப்புகளும் முனைப்புடன் செயற்படுவதாகத் தெரியவருகிறது.

பக் 27

## இந்தியா, அமெரிக்காவை நம்புவதால் கிடைக்கப் போவது ஒன்றுமேயில்லை

### இடதுசாரித் தலைவர்கள் கருத்து

கொழும்பு, செப். 19

இந்தியாவையும், அமெரிக்காவையும் நம்புவதால் தமிழ் மக்களுக்கு எந்தவித விமோசனமும் கிடைக்கப் போவதில்லை; அதுதான் உண்மையும் கூட என்று தெரிவித்திருக்கிறார் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன.

இதேவேளை, தமிழர் பிரச்சினைகளைப் பயன்படுத்தி தனது நாட்டுக்கு ஆதாயம் தேட முனைபவர்களின் மாயைக்குள் தமிழ்த் தலைமைகள் சிக்கிவிடக்கூடாது என்று எச்சரிக்கிறார் ஜனநாயக சோஷலிசக் கட்சியின் தலைவர் ஸ்ரீதுங்க ஜெயசூரிய.

தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் டில்லியில் கூறியிருந்தமை குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

பக் 27

## ஐ.நா.பொதுச் சபையில் பேச நியூயோர்க் பறந்தார் மஹிந்த

கொழும்பு, செப். 19

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 66வது கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நியூயோர்க் புறப்பட்டுச் சென்றார்.

கடந்த 12ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிரான நிபுணர் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதற்கு பொதுச் சபையின் இந்தக் கூட்டத் தொடரில் ஜனாதி பதி தனது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்வார் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறியிருக்

பக் 27

## ரயில் - லொறி விபத்து; யாழ். வாசி உயிரிழப்பு

அநுராதபுரம், செப். 19

அநுராதபுரத்தில் நேற்று அதிகாலை வேளையில் லொறி ஒன்றின் மீது ரயில் மோதியதால் லொறியின் சாரதி அந்த இடத்திலேயே பலியானார்.

யாழ். நகர் சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த கிருஷ்ணர் வல்லிபுரம் (வயது-69) என்பவரே உயிரிழந்ததாக அநுராதரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து

பக் 27



மீண்டும் சுதந்திரக்கட்சிக்கே வந்துவிடுங்கள் என்று பிரதமரும், இல்லை... இல்லை... வேண்டாமென ஜனாதிபதியும், மங்களவிடம் சொல்கின்றனரா?

பிரதமர் டி.எம்.ஜயரட்னவின் புதல்வி திலினி வாசினியின் திருமண வரவேற்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. ஜனாதிபதி மஹிந்தவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் அருகில் உள்ளனர்.

## இலங்கை - இந்திய கடற்படைகளின் போர் ஒத்திகை இன்று ஆரம்பம்

### திருமலைக் கடலில் 6 நாள்கள் நடக்கும்

கொழும்பு, செப். 19

இலங்கை - இந்தியக் கடற்படைகளின் பெரும் போர் ஒத்திகை திருகோணமலைக் கடற்பரப்பில் இன்று ஆரம்பமாக உள்ளது.

கொழும்புடனான இராஜதந்திர, இராணுவ நெருக்கத்தின் ஒரு அங்கமாகவே இந்தப் போர்ப் பயிற்சி இடம்பெறவுள்ளது என்று புதுடில்லி தெரிவித்துள்ளது.

'இலங்கை - இந்திய கூட்டுப் பயிற்சி' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் கூட்டுப் போர்ப் பயிற்சி ஆறு நாள்கள் நடைபெறவுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இரு நாடுகளினதும் கடற்படைகள் சார்பில் குறைந்தது தலா நான்கு போர்க் கப்பல்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கவுள் ளன.

இலங்கையில் போர்

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படக்கூடிய சாத்தியம்.

# தமிழ் மக்களின் வாழ்விடங்களை உல்லாச புரியாக்க ராணுவம் முனைப்பு

**நாவாந்துறை மக்களுடனான சந்திப்பின் போது மாவை தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், செப்.19

தமிழ்ப் பெண்களைக் கேவலப்படுத்தி தமிழர்கள் வாழும் பிரதேசங்களை உல்லாச புரியாக்க முனைகிறது இலங்கை இராணுவம். போரினால் சிதைந்து போயுள்ள வடபகுதியையும், அவல நிலையில் வாழும் தமிழ் மக்களையும் காட்சிப் பொருளாக்கி இங்கே தென்பகுதிச் சிங்களவர்களை அழைத்து வந்து கண்காட்சி நடத்துகின்றது அரசு என்று சாடுகின்றார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளருமான மாவை சேனாதிராசா.

நேற்று முன்தினம் நாவாந்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது உரையாற்றிய மாவை சேனாதிராசா மேலும் கூறியதாவது;

கிறீஸ்பூதம் என்று ஒன்று கிடையாது. இந்த இராணுவத்தினர் தான் கிறீஸ் பூதங்களாக நடமாடுகின்றனர்.

இவர்கள் குறிப்பாகத் தமிழ்ப் பெண்களின் மீதே குறிவைத்து சேட்டைகளில் ஈடுபட முனைகின்றனர். இவ்வாறான செயல்களை எவரும் பொறுக்க மாட்டார்கள், பொங்கி எழுவார்கள் என்ற நோக்குடனேயே இப்படிக் கேவலமான செயல்களில் ஈடுபட்டுள்ளனர் இராணுவத்தினர்.

இப்படித் தரங்கெட்ட முறையில் தமிழ் மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு மீண்டும் ஒரு இன அழிப்புக்கே திட்டமிடுகின்றனர்.

இந்தக் கிறீஸ் பூதங்கள் ஏன் தென்பகுதிச் சிங்களப் பெண்களைத் தாக்கவில்லை. தீவகப் பகுதிக்குள் போகவில்லை.

சாத்தான் வேதம் ஓதுவது போல அரசின் மிலேச்சத்தனமான செயலுக்கு வக்காலத்து வாங்குகின்றார் அமைச்சர் டக்ளஸ்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படவில்லை என்று சாட்சி கூறுகின்றார். இவர் உடம்பில் ஓடுவது தமிழ் இரத்தம் தானா என்பதும் சந்தேகமாக இருக்கின்றது.

நாம் துன்பப்படுவதற்கு ஒன்றும் இல்லை. எல்லாத் துன்பங்களையும் அனுபவித்து விட்டோம். மரணத்தின் எல்லைக்கே சென்று வந்துவிட்டோம்.

எவன் ஒருவன் மிக அதிகமாகத் துன்பப்படுகின்றானோ அவன் அதிக விரைவில் அதே அளவு நன்மைகளை அடைவான் என்பது வேதவாக்கு. எதையும் தாங்கும் இதயம் எமக்கு உண்டு. வெற்றி நிச்சயம் என்று கூறினார் மாவை சேனாதிராசா.

நாவாந்துறை மக்களுடனான இந்தச் சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ. சரவணபவன் ஆகியோர் பிரசன்னமாகி இருந்தனர். (ஒ-02)

# இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், செப். 19

புதிதாக வாங்கிய மோட்டார் சைக்கிளை ஓடிப்பார்க்க வேண்டுமென்ற உத்வேகத்தில் அதனைச் செலுத்திச் சென்ற வேளை நிலைதடுமாறி மின்கம்பத்துடன் மோதிய நபர் தலையில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார்.

ஆனைக்கோட்டையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கே.கலைச்செல்வன் (வயது -18) என்ற இளைஞரே காயமடைந்தார். மோட்டார் சைக்கிளும் சிறு சேதத்துக்குள்ளாகியது.

இதேவேளை மற்றுமொரு சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் தலையில் காயமடைந்த நபர் சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். நகர் தட்டாதெருச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் நல்லூரைச் சேர்ந்த கே.மயூரன் (வயது -26) என்பவரே காயமடைந்தார். யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்கின்றனர். (ஒ-4)

# அரச ஊழியருக்கான சம்பளம்; 10 வீத அதிகரிப்பு கிடைக்கும்?

கொழும்பு, செப்.19

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்குப் பத்து சதவீத சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

நிதியமைச்சர் பொறுப்பையும் வகிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரச ஊழியர்களுக்கு ஐந்து தொடக்கம் பத்து சதவீத சம்பள உயர்வுகளை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுமாறு திறைசேரிக்குப் பணிப்புரைகள் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் தொழிற் சங்கங்கள் 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குமாறு வற்புறுத்தி வருகின்றன. வரவுசெலவுத் திட்டம் தயாரிப்பது தொடர்பான ஆலோசனைக்கூட்டத்தில் இதனை திறைசேரிச் செயலாளர் பி.பி.ஜய சுந்தர நிராகரித்து விட்டார்.

மேலும் 13 லட்சம் அரச ஊழியர்களுக்கும் 4 லட்சத்து 50 ஆயிரம் ஓய்வூதியர்களுக்கும் வாழ்க்கைச் செலவுப் படியை அதிகரிப்பது தொடர்பாகத் திறைசேரி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-க)

# வெட்டுண்ட ஈவினைவாசி யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரும் வேளை சாவு

யாழ்ப்பாணம், செப்.19

வீட்டிலிருந்து கூட்டிச்செல்லப்பட்ட நபர் வெட்டுக்காயங்களுடன் வாழைத்தோட்டத்தில் கிடக்கக்காணப்பட்டார். அவர் மீட்கப்பட்டு அவசர அவசரமாக அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரும் வழியில் மரணமானார்.

இந்த வெட்டுச்சம்பவம் ஈவினை கிழக்கு, புன்னாலைக்கட்டுவனில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் ஜெயந்திரன் (வயது-32) என்பவரே மரணமானார்.

சனிக்கிழமை இரவு இந்த நபரின் வீட்டுக்குச்சென்ற இனந்தெரியாத சிலர் அவரை வெளியே அழைத்துச் சென்றிருந்தனர். சடலம் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-86)

# புலமைப்பரிசில் பரீட்சையில் விடையளிக்காது வெற்றுத்தாளை மட்டும் கையளித்த சிறுவன்!

**தாய்க்கு பாடம் புகட்ட செய்த காரியம்**

கொழும்பு, செப். 19

தொலைக்காட்சி பார்க்க விடாமல், விளையாட விடாமல் எந்த நேரமும் படிக்குமாறு நச்சரித்த தாய்க்குப் பாடம் படிப்பிக்க நினைத்த மகன் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு விடையளிக்காமல் வெற்றுப் பேப்பரை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிட்டு வந்த சம்பவமொன்று தென்னிலங்கையில் நடந்துள்ளது.

சிறுவர்களின் அப்பட்டமான பிடிவாதத்தை எடுத்துக் காட்டும் இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

கிராமப் பாடசாலையில் கல்வி பயின்ற சுனிமல் என்ற இந்தச் சிறுவன் படிப்பில் படு கெட்டி. எனினும் விளையாடுவது, தொலைக்காட்சி பார்ப்பது போன்ற பொழுதுபோக்குகளிலும் அவனுக்கு வெகுவாக நாட்டம் இருந்தது.

ஐந்தாம் ஆண்டில் காலடி எடுத்து வைத்ததும் அவனது அம்மாவின் கெடுபிடி அதிகரித்தது. ''ரீவி பார்க்காதே, விளையாடாதே படிபடி'' என நச்சரித்துக் கொண்டே இருந்தாள். பாடசாலை முடிந்ததும் அண்மையில் உள்ள நகரில் 'ரியூசன்' வகுப்பு இரவுவரை. வீட்டுக்கு இரவில் வந்தால் சாப்பிட மட்டுந்தான் அனுமதி. ரீவியைத் தொடமுடியாது.

ஓய்வான நேரங்களில் நண்பர்களுடன் ஓடியாடி விளையாடவும் அனுமதியில்லை. இவ்வாறான கெடுபிடியை அடுத்தே சிறுவன் தான் நினைத்ததைச் செய்து முடித்துள்ளான். (ஒ-05)

# பிரபாவின் மாமியார் காலமானார்

கொழும்பு, செப். 19

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாமியாரும், திருமதி மதிவதனி பிரபாகரனின் தாயாருமான திருமதி ஏரம்பு சின்னம்மா காலமானார்.

சரவணையைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏரம்பு சின்னம்மா அண்மைக்காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் கடந்த 6 ஆம் திகதி காலமானார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நான்கு பிள்ளைகளின் தாயார் ஆவார். (ஒ-10)

# மேர்வின் பலவந்தமாக எடுத்துச் சென்ற ஆடுகள், கோழிகள் எல்லாம் எங்கே?

**கோயில் நிர்வாகம் பொலிஸில் முறைப்பாடு**

கொழும்பு, செப். 19

அமைச்சர் மேர்வின் சில்வாவினால் பலாத்காரமாகக் கொண்டு செல்லப்பட்ட ஆடு மற்றும் கோழிகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியத்தருமாறு முன்னேஸ்வரம் காளிகோயில் நிர்வாகம் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருக்கிறது.

திடீரென காளிகோவிலுக்குச் சென்ற அமைச்சர் மேர்வின் அங்கிருந்த 15 ஆடுகளையும், 25 கோழிகளையும் அகற்றி சிலாபம் பொலிஸில் ஒப்படைப்பதாகக் கூறி எடுத்துச்சென்றிருந்தமை ஆனால், இவற்றைப் பொலிஸார் ஏற்க மறுத்த காரணத்தினால் அவை எங்கிருக்கின்றன என்று தெரியாமல் கோயில் நிர்வாகத்தினரும், நேர்த்திவைத்த பக்தர்களும் தடுமாறிப்போயிருக்கின்றனர்.

ஆடுகளும், கோழிகளும் வேறு எங்காவது கொண்டு செல்லப்பட்டு இறைச்சிக்காக அறுக்கப்பட்டிருக்கலாமெனத் தகவல்கள் வெளிவந்திருப்பதால் இந்த விவகாரத்தின் உண்மை நிலையை அறிவதற்காக கோயில் நிர்வாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருக்கிறது.

கொண்டுசெல்லப்பட்ட ஆடுகளும், கோழிகளும் திரும்பி வந்தாலென்ன, வராவிட்டாலென்ன. உரியவர்களுக்கு உரிய பதிலைக் கடவுள் கொடுப்பார் என்று குறிப்பிட்டார் கோயிலின் நிர்வாகி ஒருவர்.

எவ்வாறாயினும், கோயில் நிர்வாகத்தின் முறைப்பாடு குறித்து விசாரிக்கும் சிலாபம் பொலிஸார் இதுவரை ஆடுகள், கோழிகளுக்கு என்ன ஆனது என்பதுபற்றி எந்தத் தகவல்களும் இல்லாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 3 ஆம் திகதி முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோயிலில் நேர்த்திக்கடன் பூஜைக்காக கட்டிவைக்கப்பட்டிருந்த ஆடுகள், கோழிகள் என்பவற்றை மேர்வின் சில்வா அங்கிருந்து பலவந்தமாக எடுத்துச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி-10)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வண்ணை, செப்.19

சர்வதேச சமாதான தினத்தை முன்னெடுக்கும் யாழ்- சமாதானத்துக்கும் -நல்லெண்ணத்துக்குமான பணியக ஏற்பாட்டில் நடைபெற்று வரும் விழிப்புணர்வுக் கருத்தரங்குத் தொடரின் இறுதி நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

'சமாதானமும் நல்லிணக்கமும்' என்னும் தொனிப் பொருளில் இடம் பெறவுள்ள நிகழ்வில் யாழ். கோட்ட மற்றும் வலயப் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கல்லூரி மாணவ - மாணவிகள் கலந்து கொள்வர். (ம-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்தார் கோத்தபாய முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதாக உறுதியளிப்பு

கொழும்பு, செப்.19

முஸ்லிம்கள் தற்போது எதிர்நோக்கு கின்ற பல பிரச்சினைகள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் மற்றும் அகில இலங்கை உலமாசபை ஆகிய வற்றின் பிரதிநிதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் அவசர பேச்சுகளை நடத்தியுள்ளன.

பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா வின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு கோத்தபாய ராஜபக்ஷவின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

ஹஜ் பெருநாள் தினத்தில் ஆடு, மாடுகளை அறுத்து குர்பான் தானம் கொடுப்பதற்குத் தடை ஏற்படக்கூடும் என்று கூறப்படுவது தொடர்பில் இச்சந் திப்பில் முக்கியமாகப் பேசப்பட்டது.

அவ்வாறானதொரு நிலை ஏற்படாது என்று பாதுகாப்புச் செயலாளர் உறுதிய ளித்தார். மாட்டிறைச்சியை விரும்பி உண்ணக்கூடியவர்கள் சிங்களவர்களி லும் உள்ளனர் என்றும் அவர் கூறினா ரெனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்ததாகத் தேசிய அடையாள அட்டைகளுக்கு முஸ்லிம்கள் தொப்பி அணிந்து புகைப்படம் பிடிப்பதற்குத் தடை விதித்திருப்பது பற்றியும் அங்கு பேசப்பட்டது.

அச்சந்திப்பின்போதே ஆள்பதிவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாய கத்தை தொலைபேசியில் தொடர்புகொண்டு இத்தடையை நீக்கி பழைய நிலைமைக் குக் கொண்டுவருமாறு கோத்தபாய உத்தரவிட்டார்.

அநுராதபுரத்தில் பள்ளிவாசலின் சியாரம் உடைக்கப்பட்டது தொடர்பி லும் பேசப்பட்டது. அந்த சியாரத்தை மீள் புனரமைக்க நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்புச் செயலர் உறுதியளித்தார்.

அகில இலங்கை உலமா சபைத் தலை வர் மௌலவி ரிஸ்வி முப்தி, இலங்கை முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என். எம்.அமீன், இறைச்சிக்கடை உரிமையா ளர்கள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பல முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிக ளும் இச்சந்திப்பில் கலந்துகொண் டனர். (ஒ-சி)

# ஹெலியில் உயரப் பறந்து பிரசாரம்! குப்பைத் தொட்டிகளில் பிரசுரங்கள்!!

கொழும்பு, செப். 19

தெஹிவளை - கல்கிஸை மாநகரசபைக்கு அரச தரப்பின் மேயர் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள வேட்பாளரொருவர் முற்றிலும் வித்தியாசமான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றை மிஞ்சும் வகையில் அவரது பிரசார நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பதால் பிரசார நடவடிக்கைகளுக்கு வாகனங்களைக்கூடப் பயன்படுத்த வசதியில்லாமல் வேட்பாளர்கள் தவிக்கும் நிலையில், குறித்த வேட்பாளர் ஹெலிக்கொப்டர் மூலம் பறந்து சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கின்றார்.

ஆடம்பரமாகவும், சற்று வித்தியாசமாகவும் இருக்கட்டும் என்று பறந்து பறந்து நேற்று ஹெலிக்கொப்டரிலிருந்து விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் தெஹிவளை- கல்கிஸை மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்திலுள்ள வடிகான்களிலும், குப்பைத் தொட்டிகளிலும், தரைகளிலும், வீட்டுக் கூரைகளிலும் விழுந்துள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரி விக்கின்றன. (ஒ-சி)

# அரசியல் தீர்வுக்கான பேச்சு என்ற போர்வையில் மீண்டும் நாடகத்தை ஆரம்பித்திருக்கும் கூட்டமைப்பு

## குற்றஞ்சாட்டுகிறார் பியசேன எம்.பி.

கொழும்பு, செப்.19

அரசியல் தீர்வுக்கான பேச்சு என்ற போர்வையில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு மீண்டும் தனது நாடகத்தை அரங்கேற்றத் தொடங்கியுள்ளது என நேற்று சூடாகத் தெரிவித்தார் நாடாளு மன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன .

வாய்ச்சொல்லில் மட்டும் வீரமுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அர்த் தமற்ற வகையில் அனல் பறக்கும் அறிக் கைகளை விடுக்கின்றனர். ஆனால், அவர்களின் செயற்பாடுகள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்குமிடையில் மீண்டும் ஆரம் பிக்கப்பட்டுள்ள பேச்சுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பியசேன எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு வழங்க நினைக்கும் தீர்வுத் திட்டத் தையும் முறியடிக்கும் நோக்குடனேயே கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமைந் துள்ளன.

தமிழ் மக்கள் ஏமாருபவர்கள் அல்லர். இருப்பினும், தமிழர்களின் பிரச்சி னைகளைப் பயன்படுத்தி அரசியல் ஆதா யம் தேட முனைபவர்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசுடன் ஒத்துப்போயிருந்தால் இந் நேரம் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைத் திருக்கும். ஆனால், கூட்டமைப்பின் ஆணவமும், விடாப்பிடியுமே காலம் கடந்து செல்வதற்கான பிரதான கார ணம்.

முஸ்லிம் மக்களின் இன்றைய வாழ்க் கை நிலைமைகளை ஆராய்ந்தாவது தமிழ்த் தலைமைகள் திருந்தவேண்டும். அதற்காக தமிழ் மக்களை நான் மதம்மாறச் சொல்லவில்லை.

கிடைக்கும் வாய்ப்புகளையெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தட்டிக் கழிப்பதால் எதிர்காலத்தில் தமிழினமே அழிந்துபோகும் அபாய நிலைமை ஏற்படும் என்பதை அவர்கள் புரிந்து செயற்பட வேண்டும். கூட்டமைப்பினர் அலரிமாளிகைக்குச் சென்று கோப்பி அருந்திவிட்டு வருவதால் மட்டும் பய னில்லை. அரசு வழங்க நினைப்பதைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முனையவேண்டும்" என்றார். (ஒ-சி)



# சந்தியடிச் சோமு

## பே(ய்)க் காட்டிப் பதிறாங்கள் கவனம்!

காலம் வேகமா உருண்டோடுது. முன்னமென்றா ஒரே இடத்தில இருக்க வேண்டி யிருந்தது. பாதையளை மூடினதால செக்கு மாடு மாதிரி ஒரு இடத்தில சுத்தி சுத்தித் திரிஞ்சம். இப்ப அங்க இங்க போகலாம் தானே எண்டுபோட்டு வெளிக்கிட்டு திரியிறதால நேரம் கிடைக்கிறதில்லை. அதால ஒவ்வொரு கிழமை யும் உங்கள சந்திக்க முடியாமல் கிடக்குப் பாருங்கோ. நான் ஒழுங்கா சந்திப் பக்கமும் போகாததால அந்த மெம்பர் சிப்பும் இல்லாமல் போகுமெண்டு, கதி ரண்ணை இடையில ஒருக்கா கிளினிக்கில கண்டாப்போல சொல்லிப்போட்டுப் போட்டார். ஆசுப்பத்திரி, சந்தை இடைக்கிட அங்கங்க இருக்கிற பிள்ளையளிட்ட மாறி மாறிப் போறது எண்டதோட சீவியம் போகுது பாருங்கோ.

பேப்பர்காரப் பொடியன் போன் பண்ணி எங்கயண்ணை சொல்லாமல் கொள் ளாமல் போனனீ இங்க சனம் உன்னத்தேடுது எண்டு ஒரே கரைச்சல். இதைக் கேட்டுக் கொண்டிருந்த கடைத்தம்பி, ''உங்க இருந்து வெறுவாய் மெல்லுறது களை விட்டுட்டு ஓடிப்போய் உங்கட காணியள பதியுங்கோ'' எண்டான். ''ஏன்? என்னத்துக்கு உறுதிக் காணியள நாங்கள் ஏன் திருப்பப் பதிய வேணும்?'' எண்டு நான் கேக்க, அப்பதான் சைக்கிள ஸ்ராண்டில விட்டுக் கொண்டிருந்த கந்தையர் சொன்னார் ''இஞ்ச சோமு! இப்ப பேயாட்சி நடக்குது அதில கேள்வி கேட்க முடி யுமே.சொன்னத செய்ய வேண்டியதுதான். வாயையும் பின்பக்கத்தையும் பொத் திக்கொண்டிருக்க வேணுமெண்டுதானே காலாகாலத்துக்கு ஒவ்வொரு பூதங்களா ஏவிவிடுகிறாங்கள்'' எண்டார்.

இதைக்கேட்டுக் கொண்டிருந்த கந்தையர் சொன்னார், ''உவங்கள் அறுவார் பேயளை ஏவிவிட்டு எல்லாரையும் பேய்கதை கதைக்க விட்டிட்டு பேக்காட்டி காணிகளை பதிவிக்கிறாங்கள் எண்டு சனம் கதைக்குது. உண்மையோ?'' எண்டார்.

பதிலை நடேசண்ணை சென்னார். ''விதானையிட்ட போம் வாங்குங்கோ எண்டு சொல்லுகினம். அங்கபோனா விதானை காணியுறுதியிண்ட கொப்பியத்தா எண்டுறார். கச்சேரியில கேட்டா, உறுதியெல்லாம் குடுக்கத் தேவையில்லை; ஆர்போய்க் கேட்டாலும் விதானையார் குடுக்கத்தான் வேணும் எண்டுறாங்கள். இந்தப் புடுங்குப்பாடு ஒரு பக்கத்தில எண்டால் மற்றப் பக்கத்தில, இலங்கை சட்டத்துறையின்ர அதிகாரத்தை தட்டிக் கேட்கிறமாதிரி இருக்குது உந்த பதிவு அலுவலுகள் எண்டு சட்டத்தரணிமார் எழும்பி நிண்டு கத்துகினம். உண்மை என்தெண்டு ஒண்டுமாப் புரியேல்லை. ஒண்டு மட்டும் உறுதி, நீதியும் சட்டமும் துலைஞ்சுபோன பேயாட்சியில உப்பிடியான தறிகெட்ட வேலையள் நடக்கும் அதுகளைக் கண்டுகொள்ளக் கூடாது.''

நடேசரின்ட நீண்ட விளக்கத்துக்குப் பிறகு கதிரண்ணை கேட்டார் ''சட்டப்படி சட்டத்தரணி எழுதி பதிவு செய்த காணியள என்ன கோதாரிக்கு இப்ப பதியச் சொல்லுறாங் கள்? அப்ப சனத்தின்ர கையில இருக்கிற உறுதிகளுக்கு பெறுமதியில்லையோ?'' எண்டார்.

''அது மாதிரி விசயங்களை ஒழுங்குபடுத்தி, காணியளை அரசாங்கக் காசி லேயே அளந்து, குறிச்சு காணி அனுமதிப்பத்திரம் ஒண்டு குடுக்கிறதுதானாம் இந் தத் திட்டத்தின்ர நோக்கம் எண்டு கச்சேரிக்காரர் சொல்லுகினம்'' எண்டார் நடேசர்.

அதுக்குக் கதிரண்ணை, ''பிரச்சினை அவையள் பதியினமா இல்லையா எண்டு கிடையாது கண்டியளோ! காணியப் பதிய உறுதி தேவையில்லை எண்டு கச்சேரிக்காரர் என்னதான் திருப்பித் திருப்பிச் சொன்னாலும் விதானைமார் அதக் கேக்கிறதா இல்லை. கொண்டுவா உறுதிக் கொப்பிய எண்டுதான் அவையள் நிக்கினம். ரகசியமா பாதுகாக்கப்பட வேண்டிய உறுதிக் கொப்பிய அங்க கொண்டுபோய்க் குடுத்தா, விதானையார் அவற்ற உதவிக்கு நிக்கிற சின்னுகளிட்ட அதுகளத் தூக்கிப் போடுறார். நாளைக்கு உந்த விவரங்களைத் தூக்கிக் கொண்டு உனக்கு அவ்வளவு காணி கிடக்கு இஞ்ச கொண்டா எனக்கும் கொஞ்சம் எண்டோ இல்லாட்டிக் காசைக் கொண்டா எண்டோ யாராவது வீடுகளில வந்து நிண்டாங்கள் எண்டா, விதானையார் வந்து பதில் சொல்லுவாரோ?'' எண்டு பொரிஞ்சார்.

''சொன்னதச் செய்யிற சுப்பர்மாரா நாங்களும் இருந்தா, கேள்வி கேட்காம இருந்தா தாயுறுதியில இருந்து கிடக்கிற எல்லா உறுதியையும் கொண்டுவந்து என்னட்ட தாங்கோவென்று விதானையார் சொல்லத்தானே செய்வார்'' எண்டு நக்கல் விட்டார் நடேசண்ணை.

''இத்தின காலமா எத்தின தடவை பூனை குட்டியக் காவுற மாதிரி உயிரப் படிச்சுக்கொண்டு ஓடேக்கையும் கொண்டு திரிஞ்ச உறுதியை உவையளிட்டத் தூக்கிச் சும்மா குடுக்கிறதோ? எல்லாத்துக்கும் ஒரு வரைமுறை கிடையாதோ? உந்த அதிகாரியள் சும்மா ஒவ்வொண்டையும் சொல்லுறதோட நிண்டாக் காணுமோ? தாங்கள் சொல்லுறதுகளை விதானைமார் ஒழுங்காச் செய்யினமோ இல்லையோ எண்டு கவனிச்சு நடவடிக்கை எடுக்கமாட்டினமோ? பிறகேன் அவையள் இருப்பான்?'' எண்டார் விடாக்கண்டனாகத் தொடர்ந்தார் கதிரண்ணை.

அவருக்கு பளைக்குப் பக்கத்தில ஒரு 20 ஏக்கர் வரையில தென்னங்காணி கிடக்கு. எல்லாம் ஷெல்பட்டுச் செத்துப்போன தென்னையள்தான் அதுக்குள் நிக்குதுகள் எண்டாலும், ஆரேன் வந்து அந்தக் காணியளை வெருட்டிப் புடுங்கிப் போடுவாங்களோ எண்டதுதான் அந்தாளின்ர பயம். அதுதான் அந்தாள் விடாமல் நாண்டுகொண்டு நிக்குது.

''இங்க சில விசயங்கள் ஒருவகையான சைக்கோ பிரச்சினையாத் தொடருது பாருங்கோ. போர்க் காலத்தில பதியிறது பதியிறது எண்டு பாடாப்படுத்தினாங்கள். அதிலயும் ஒரு முக்கியமான வியாதி போட்டோ கொப்பி கொப்பியா வாங்கி பதியிறது. அந்தப் பழக்க தோசத்தில பதியாம சும்மா இருக்க இந்த பேரினவாத ஆட்சிகளுக்கு விருப்பமில்லை. அதுதான் ஏதாவதொரு பதிவைச் சொல்லிச் சனத்தை மந்தை களாக்கிற வேலையை செய்யுறுங்கள். ஆள்பதிவு, வாகனப்பதிவு என்று திரிஞ்சவை இப்ப காணிப்பதிவு என்று திரியினம் போல. இனி வேற ஒண்டும் இல்லை யெண்டால் போடுற உடுப்புச் செருப்பு எல்லாத்தையும் பதியச் சொல்லி சொன்னாலும் சொல்லுவாங்கள்'' எண்டு நானும் இடையில் எடுத்து விட்டன்.

''மண்ணின் மகிமை எண்டு தொடங்கின திட்டம் மண்ணின் மைந்தர்களிட்ட யிருந்து மண்ணைப் பறிக்கிறதாத்தான் முடியுமோ?'' எண்டு இவ்வளவு நேரமாக வடிவா இருந்து கேட்டுக்கொண்டிருந்த முருகேசர் தலையில கையை வச்சார். பாவம் அந்தாள். கடைக்கு வந்த இடத்தில காதக் குடுத்ததால வந்த வில்லங்கம் பாருங்கோ.

''உந்த மாதிரி பல கேள்விகளுக்கு விடை தெரிஞ்சாலும் இறுக்கிப் பொத்துறதுதான் ஒரே வழி'' எண்டு சொல்லிக் கொண்டு நான் எழும்பி வந்திட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகர சபைத் தேர்தலில் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும்

## அமைச்சர் றிசாத் பதியுதீன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், செப். 19

நடைபெறப் போகும் கல்முனை மாநகர சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சபையை கைப்பற்றும் என தெரிவித்துள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், கைத்தொழில், வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் 11 வருட காலம் அபிவிருத்தியின்றி காணப்படும் கல்முனையில் எதிர்கால அபிவிருத்தியை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி முதல் எமது கட்சி பொறுப்பெடுக்கும் என்றும் பிரகடனப்படுத்தியுள்ளார்.

கல்முனை மாநகர சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றி சின்னத்தில் போட்டியிடும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து கல்முனைக்குடி முச்சந்தியில் இடம்பெற்ற மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநகர சபை வேட்பாளர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் தலைவிதியை மாற்றி எழுதிய பெருந்தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் பிறந்த இந்த மண்ணான கல்முனை துறைகளிலும் அபிவிருத்தி கண்டிருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக பூமியை தற்போது பார்க்கும் போது கவலை தருகின்றது. பெருந்தலைவர் அஷ்ரப்பின் மறைவை அடுத்து கட்சியின் தலைமைத்துவத்துக்கு வந்த தற்போதைய தலைவர் இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை மறந்து முஸ்லிம் சமூகத்தை கையேந்தும் சமூகமாக காட்டி அரசியல் செய்யும் வங்குரோத்து நிலைக்கு மாறிவிட்டது.

வடக்கில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு இன்று தற்போது எற்பட்டுள்ள சமாதான சூழ் நிலையால் மீண்டும் மீள்குடியமர ஆரம்பித்துள்ளனர். மக்கள் அச்சமின்றி இன்று தமது பணிகளை செய்கின்றனர். பயணங்களை மேற்கொள்கின்றனர். இந்த நிலையை ஏற்படுத்தியது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்பதை மறக்க முடியுமா. கடந்த அனைத்து தேர்தல்களிலும் இந்த அரசை தோல்வியுறச் செய்து ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவோம் என்று கங்கனத்துடன் செயற்பட்டவர்கள் தான் ரவூப் ஹக்கீம் அவர்கள் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸினர். தேர்தலின் பின்னர் அரசியல் வங்குரோத்தை மூடி மறைப்பதற்காக இந்த ஜனாதிபதியுடன் ஓடோடி வந்து பதவியை பெற்றுக் கொள்வதற்காக இந்த நாட்டில் சிறந்த தலைவர் ஜனாதிபதியே என்று இரட்டை வேடம் போடுகின்றனர்.

எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பெரும்பான்மையாக வெற்றி பெற்றுள்ளனர். யாழ். மாநகர சபையில் 4 உறுப்பினர்கள், முசலி பிரதேச சபையின் அதிகாரம் கிண்ணியா நகர சபையின் அதிகாரம் ஓட்டமாவடி, காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் மன்னார், வவுனியா சிங்கள பிரதேச அதிகாரங்கள் எமது வசம் உள்ளன. எமது நியாயத்தையும், நேர்மையையும் செயற்பாடுகளையும் அங்கீகரித்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் வாக்களித்துள்ளனர். (எ)

## மனித உரிமைகள் தொடர்பாக பிரிட்டன் இலங்கைக்கு காலக்கெடு

கொழும்பு, செப்.19

போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதன் முன்னேற்றத்தை காண்பிப்பதற்கு இலங்கை அரசுக்கு பிரிட்டன் காலக்கெடு ஒன்றை வழங்கியுள்ளதாக அந்நாட்டின் வெளி விவகார அமைச்சர் வில்லியம் ஹக்யூ தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தின் வெளி விவகாரக் குழுவுக்கே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

போரின்போது இருதரப்பினராலும் இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்த அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் விசாரிக்க அனைத்துலக போர்க்குற்ற விசாரணை ஒன்றுக்கு அழுத்தம் கொடுக்க பிரிட்டன் வெளிவிவகாரச் செயலகம் தவறி விட்டதாக அந்நாட்டு நாடாளுமன்றத்தின் வெளி விவகாரக் குழு குற் றம் சாட்டியிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக்யூ கடந்த வாரஇறுதியில் வழங்கியுள்ள பதிலிலேயே இலங்கை அரசுக்கு காலக்கெடு விதித்துள்ள விவரத்தை வெளியிட்டுள்ளார்.

முன்னேற்றத்தைக் காண்பிக்க இலங்கைக்கு இந்த ஆண்டு இறுதிவரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளதாகவும், அல்லது இலங்கைக்கு அழுத்தம் கொடுக் கும் அனைத்துலக சமூகத்தின் நட வடிக்கைகளுக்கு பிரிட்டன் ஆதரவளிக் கும் என்றும் வில்லியம் ஹக்யூ மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜினிதேவி சண்முகநாதன்



கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி சண்முகநாதன் நேற்று (18.09.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-சோதியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சண்முகநாதனின் (ஓய்வுபெற்ற கமநல சேவைத் திணைக்கள அலுவலர்) அன்பு மனைவியும் பொன்னுத்துரை, காலஞ்சென்றவர்களான சந்திரபாலன், அதிரூபவதி ஆகியோரின் சகோதரியும் சத்தியவரதன், சத்தியரூபன் (சுவிஸ்)ஆகியோரின் அன்புத் தாயும் சுமித்திரனின் அன்புப் பெரியம்மாவும் சந்திரகலா, அனுஷியா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் ஹர்சனா, ஹஜன்சியா, கௌதம், கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.09.2011) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பன் மேற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
ச.சத்தியவரதன் (மகன்)

## ஓயாத துயரின் நினைவாகும் நான்காண்டு

பிறப்பு: 27.08.1979

பிறப்பு: 09.11.1981



பறிப்பு: 15.12.2007

பறிப்பு: 03.09.2007

அமரர் சுப்பிரமணியம் கௌசிகன்

அமரர் சுப்பிரமணியம் இதயராஜ்

காலத்தின் வேகத்தில் கரைந்துபோன நாள்கள்
ஒன்று கூடி ஆண்டுகள் நான்கு ஆனது ஞாலத்தில் பாசத் திருவுருவாய் வந்த
நீங்கள் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு காலதேவன் காலடிசென்றமை இன்றும்
நெஞ்சில் ஆறாத காயங்களாய் இருக்கின்றன நாளும் உள்ளத்தில்
உங்கள் நினைவுகளே கனவுகளாய் இருப்பதை அறிவீரோ நீங்கள்!

68/2, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

அம்மா, அப்பா,
சகோதர உறவுகள்.

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த காரைநகரில் அதிரடி நடவடிக்கை

காரைநகர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கையைக் கடந்த பல வருடங்களாகத் தொடர்ச்சியாக அழித்து வரும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு காரைநகர் பிரதேச சபை அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

காரைநகரில் மேற்கொள்ளப்படவுள்ள பெரும்போக நெற்செய்கை மற்றும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கூட்டம் கடந்த வாரம் காரைநகர் பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காரைநகர் பிரதேச விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் , பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள், கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காரைநகரில் சுமார் ஆயிரத்து 400 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அவை கட்டாக்காலி கால்நடைகளால் அழிக்கப்பட்டு வருகின்றன். இதனால் விவசாயிகள் நஷ்டத்தை எதிர் நோக்கி வருகின்றனர். இந்த முறை பல விவசாயிகள் இதனால் நெற்செய்கையைக் கைவிடும் நிலையில் உள்ளனர். அத்துடன் சிறுதானியச் செய்கையை இங்கு மருந்துக்குக் கூடச்செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே பெரும்போக நெற்செய்கை விவசாயிகளுக்கு அதிக வருமானத்தையும் போஷாக்கு நிறைந்த உணவைத் தரும் சிறுதானியச் செய்கையை மேற் கொள்ள வசதியாக கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் பலராலும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உடனடியாகச் செயற்படுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* கால்நடை வளர்ப்போர் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் .மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்.
* காரைநகர் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கான பிடிகாரர்களை நியமித்தல்
* கட்டாக்காலிகளாக திரியும் மாடுகளைப் பிடிபதற்கு ஆயிரம் ரூபாவும் அதனைப் பராமரிப்பதற்கு ஒரு நாளைக்கு 250 ரூபா வீதமும் ஆடு ஒன்றைப் பிடிப்பதற்கு 500 ரூபாவும் அவற்றின் உரிமையாளர்களிடம் அறவிடுவது என்றும் தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு மேல் உரிமை கோராத கால்நடைகளை ஏலத்தில் விடுதல்.
* கட்டாக் காலி கால்நடைகளைப் பராமரிப்பதற்காக காரை நகர் வலந்தலையில் பாதுகாப்பு பராமரிப்பு நிலையம் அமைத்தல்.
* பெரும்போக நெற்செய்கையை அடுத்து சிறுதானியச் செய்கையினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

(ம-250)

## வீடு விற்பனைக்கு

மாநகரசபை எல்லைக்குள், யாழ்.புனித பொஸ்கோ பாடசாலையை அண்மித்தும், நல்லூர் ஆலயச் சூழல், யாழ்.மாவட்ட செயலகம் உட்பட அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பிரபல கல்லூரிகள் என்பவற்றை ½ km தூரத்துள் கொண்டதுமாக அமைந்த மருதடி வீதியில் 2 பரப்புக் காணியுள் சுற்றுமதில், கிணறு, குளியலறை உட்பட 4 அறைகள் கொண்ட விசாலமான வீடு விற்பனைக்குண்டு. பொருள்களைக் களஞ்சியப்படுத்தும் வசதியும் வாகனங்கள் தரித்து நிற்கக்கூடிய வசதிகளும் உண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:-0775327636

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள்
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

DMI COMPUTER EDUCATION

Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Diplima in Video Production & Multimedia
Master Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD

75% OFF



ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English
பயிற்சிமையம்.
veta®
Experts in English Training

(ISO 9001:2008) CERTIFIED

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு V - 19/09/2011 9.30 am
பிரிவு VI - 24/09/2011 9.30 am

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள இன்னும் எத்தனை காலம் செல்லும்?

இந்த நாட்டின் சிறுபான்மையினரின் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் மீண்டும் கசப்பான அனுபவங்கள் ஏற்படமாட்டா. சிறுபான்மையினர் பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வு காணாவிட்டால், அது இந்தியாவுக்கும் பிரச்சினையாகிவிடும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை இப்போது தமிழ்நாட்டு எல்லையைத் தாண்டி விட்டது. இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கும் சென்றுவிட்டது. நாட்டின் பிரதான மற்றும் முக்கிய கட்சிகள் இது விடயத்தில், பெரும் அக்கறை செலுத்துகின்றன.

இந்த யதார்த்தத்தை இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பவர், இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சியான பாரதீய ஜனதாவின் மூத்த, முக்கிய தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோசி. கொழும்பில் எமது நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸைச் சந்தித்துப் பேசியபோது, இந்திய அரசியல் பிரதானிகளில் ஒருவர் மேற்கூறப்பட்ட யதார்த்தத்தை எடுத்துரைத்தார்.

அதேவேளை-

ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை அடிப்படையாக வைத்து இலங்கையின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் -

கொடிய போரின்போது இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்தும், போர் முடிவுற்று இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னரும் மக்கள் ''தடுத்து'' வைக்கப்பட்டிருப்பது குறித்தும் இலங்கை அரசு இனியும் காலம் கடத்தாது உரிய, தகுந்த நடவடிக்கைகளை தாமதிக்காமல் மேற்கொள்ள வேண்டும் - இவ்வாறு தெரிவித்தவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு கிளைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ராஜா.

இலங்கை விவகாரத்தில், போர்க்குற்ற விசாரணை விடயத்தில், தமிழகத்தில் மட்டுமன்றி, அகில இந்திய மட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாடு வலுத்துப் பழுத்து வருவதனை நாடி பிடித்து அறிந்து கொண்டு, அந்த நிலையைத் தணிப்பதற்காக, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் அமைச்சருமான டியு. குணசேகராவை இடதுசாரித் தலைவர்களைச் சாந்தப்படுத்தும் முயற்சிகளில் ஒன்றாக கொழும்புத் தலைமைப் பீடம் அனுப்பி வைத்தது இரகசியமல்ல.

அதற்கு முன்னர், இம்மாத முற்பகுதியில் - ஏழாம் திகதியன்று - இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிரகாஷ் காரத் தலைமையில், புதுடில்லி நாடாளுமன்றத்துக்கு (லோக் சபாவுக்கு) முன்பாக இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

தமிழர்களுக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சம அந்தஸ்து, சம உரிமை, மாநில சுயாட்சி அதிகாரம் உள்ளடக்கிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இராணுவத்தின் போர்க்கால அத்துமீறல்கள் குறித்து இலங்கையில் உயர்மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வுக்கான நடவடிக்கையை உடனடியாக உறுதி செய்திட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் உறுக்கி, உரத்து வலியுறுத்தப்பட்டதையும் இங்கு நினைவுக்குக் கொண்டு வருதல் பொருத்தம்.

தமிழகச் சட்டசபையில் இலங்கை அரசுக்கு எதிராக ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கு மட்டுமன்றி புதுடில்லி வரை இதுவிடயம் பரவியதைக் கண்டு இலங்கை அரசு அதனைத் தணிக்க மேற்கொண்ட ஏற்பாடுகளில் ஒன்றே அமைச்சர் டியு குணசேகராவின் திடீர் இந்திய விஜயமும் அங்குள்ள இடதுசாரிகளைச் சாந்தப்படுத்த எடுத்த முயற்சியும்.

இவ்வாறு, அகில இந்திய மட்டத்திலான அழுத்தங்களைக் குறைக்க முயன்று, புதுடில்லி அரசுக்கு ஏனைய தரப்புகளால் அதிக அளவில் அழுத்தம் வராது தடுப்பதற்கு, தன்னால் இயன்ற மட்டத்தில் இலங்கை அரசாங்கத் தரப்பினர் முயன்று கொண்டிருக்கும் வேளையில்-

கொழும்புக்கு வந்து நியூயோர்க் திரும்பும் வழியில் அமெரிக்க உதவி அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக், புதுடில்லியில் வைத்து, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்:

தமிழர் பிரச்சினை தொடர்பில், இந்திய மத்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். தமிழ் மக்களுக்குத் தீர்வுத் திட்டங்களை வழங்கக் காத்திரமான முனைப்புகளை கைக்கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றித் தீர்வு வழங்கும் நடவடிக்கையை தாமதிக்கக் கூடாது என்றும்-

இறுதிக் கட்டப் போரின்போது, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட சகல தரப்பினரும் விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் - இடித்துரைத்திருக்கிறார்.

மொத்தத்தில்-

இலங்கை அரசு நடத்திய இறுதிப்போரின்போது, அதற்கு மறைமுகமாக - உள்ளாடும் கள்ளாடுமாக - போர்த் தந்திர (Strategy) சூழ்ச்சிகளுக்கு (Manoeuvring) உதவிய இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் தமிழர்கள் வேண்டி நிற்கும் அரசியல் உரிமைகளை வழங்குவதற்குத் தகுதியான, காத்திரமான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடமையும் பொறுப்பும் உண்டு. அதனை அவை ஆற்றுமா? எப்போது?

# இலக்கிய விழா இம்முறை குருநாகலில்

யாழ்ப்பாணம், செப். 19

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் அரச இலக்கிய விருது வழங்கும் விழா இம்முறை குருநாகல் மாவட்டத்தில் இடம்பெற உள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெற உள்ள இந்த அரச இலக்கிய விழாவில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சகல துறைகளையும் சேர்ந்த 25 பிரபல இலக்கியவாதிகள் பங்குகொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்பொருட்டு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் மேற்படி தகைமை சார்ந்த இருவரின் பெயர்களை அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் பிரதேச செயலர்களைக் கேட்டுள்ளார்.

இவர்களுக்கான பயண ஒழுங்கு, தங்குமிடம், உணவு வசதிகளை கலாசார திணைக்களம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-60)

# வடக்கு மாகாண ஆஸ்பத்திரிகளில் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், செப். 19

வடக்கிலுள்ள வைத்தியசாலைகளில் மீண்டும் தாதிய உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இந்த வருடம் பயிற்சியை முடித்து வெளியேறிய 190 தாதிய உத்தியோகத்தர்களின் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரை அனைத்து வைத்தியசாலைகளிலும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

இதனால் வைத்தியசாலைகளில் நிலவிய தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறை ஓரளவு நீங்கியிருந்தது.

இந்த நிலையில் அண்மையில் பரீட்சை முடிவுகள் வெளியானதையடுத்து பரீட்சையில் முன்னிலைப் புள்ளிகள் பெற்ற 100 தாதிய உத்தியோகத்தர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 90 தாதிய உத்தியோகத்தர் ஆகக்கூடியது இரண்டு பேர் என்னும் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அதி தீவிர சிகிச்சைக்குரிய நோயாளிகள் தவிர்ந்த ஏனைய நோயாளர்கள் அந்தந்த பிரதேச மற்றும் ஆதார வைத்திசாலைகளில் சிகிச்சை வழங்க சுகாதாரத் திணைக்களத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வேளையில் இந்த வைத்தியசாலைகளில் தாதிய உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை இருப்பின் முழுமையான சேவையை நோயாளர்கள் பெறமுடியாத நிலை ஏற்படலாமென நோயாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தாதியர் பயிற்சி வகுப்பு இன்னமும் ஆரம்பிக்கப்படாததால் இன்னும் மூன்று வருடங்களுக்கு வைத்தியசாலைகளில் தாதிய உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-207)

# சிறைச்சாலைத் திணைக்களங்களில் பதவி வெற்றிடங்கள்

கொழும்பு,செப்.19

சிறைச்சாலைத் திணைக்களத்தில் பல்வேறு பதவிகளுக்கான ஆயிரத்துக்கு மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுவதாகவும் சுமார் 26 ஆயிரம் கைதிகளை நிர்வகிக்கும் நடவடிக்கைகளை சுமார் 5 ஆயிரம் பேர் வரையிலான ஊழியர்களே தற்போது மேற்கொண்டு வருவதாகவும் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் பி.டபிள்யூ.கொடிப்புலி தெரிவித்துள்ளார்.

1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடந்த 23 வருடங்களாக மேற்படி திணைக்களத்துக்குத் தேவையான ஊழியர் தொகை குறித்த கணக்கீடு மீள்பரிசீலனை செய்யப்படவில்லை. இதன் காரணமாக இந்தத் திணைக்களச் செயற்பாடுகளில் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1988 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகளில் 4 ஆயிரம் வரையிலான கைதிகளே சிறைத் தண்டனை அனுபவித்து வந்ததாகவும் தற்போது அத்தொகை 26 ஆயிரமாக உயர்ந்துள்ள போதிலும் சிறைக்கைதிகளை நிர்வகிக்கும் ஊழியர்களின் தொகையில் இதுவரை மாற்றம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அளவ்வயில் ரயில் விபத்தால் 75 மில்லியன் ரூபா நட்டம்

கொழும்பு,செப்.19

அளவ்வ ரயில் விபத்தால், ரயில்வே திணைக்களத்துக்கு 75 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

ரயில் விபத்து தொடர்பில், விசாரணைகளை நடத்துவதற்கென விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் அளவ்வ ரயில் நிலையத்தில் மூன்று ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. இந்த அனர்த்தத்தில் தாய்லாந்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர், ரயில் சாரதி, ரயில் சாரதி உதவியா ளர், ரயில்வே ஊழியர் உட்பட ஐவர் பலியாகியுள்ளனர். மேலும் 30 பேர் காயமடைந்தனர்.

### உயிரிழந்தோர் 5 ஆக அதிகரிப்பு

காயமடைந்தோர் அளவ்வ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கவலைக்கிடமான நிலையில் உள்ளோர் குருநாகல் வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டனர்.

கொழும்புக் கோட்டையிலிருந்து கண்டி நோக்கிய பயணமான கடுகதி சொகுசு ரயிலைப் பயன்படுத்தி பழுதடைந்த ரயில் ஒன்றைத் தள்ளிச்சென்றபோது பின்னால் வந்த மற்றுமொரு ரயில் கடுகதி ரயிலுடன் மோதுண்டது. கடுகதி ரயிலின் காட்சி காண் கூடத்துக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. ரயில் இடிபாடுகளுக்குள் சிக்குண்டோர் பல மணித்தியால இடைவெளியின் பின்னரே மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# லண்டன் ஆடை அலங்கார நிகழ்வில் இலங்கை நிபுணர்

லண்டனில் நடைபெறவுள்ள பிரபலமான ஆடை அலங்கார நிகழ்வில் இந்தத் தடவை இலங்கையைச் சேர்ந்த ஆடைவடிவமைப்பு நிபுணர் சரினி சூரியஹே பங்கு பற்றவுள்ளார்.

இலங்கை பாரம்பரிய அடையலங்காரங்கள் மற்றும் நவீன அலங்காரங்கள் ஆகியவற்றை இணைத்து புதிய உடையலங்காரங்களை வடிவமைத்துள்ள சரினி சூரியஹே இந்த வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

ஆடையலங்கார விழுமியங்கள் விருதை 2010 ஆம் ஆண்டில் இவர் பெற்றிருந்தார்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் ஆடையலங்காரப் பட்டப்படிப்பைக் கற்ற இவர் முதலாவது தடவையாக இந்த வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

(ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 செப்ரெம்பர் 2011 திங்கட்கிழமை

# தினமும் 13 ஆயிரம் கிலோ பனிக்கட்டியை உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை

## வேலணை துறையூரில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப் 19

தினமும் 13 ஆயிரம் கிலோ பனிக் கட்டியை உற்பத்தி செய்யக்கூடிய பெரிய தொழிற்சாலை ஒன்று இன்று திங்கட் கிழமை தொடக்கம் வேலணை துறையூரில் இயங்க ஆரம்பிக்கவுள்ளது.

பனிக்கட்டி உற்பத்தி செய்யும் இயந்திரம் கடந்த 15 ஆம் திகதி கொழும்பிலிருந்து வேலணைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் பனிக்கட்டித் தொழிற்சாலை 7 இயங்கி வருகின்றன. யாழ். நகரில் 5 தொழிற்சாலைகளும் பருத்தித்துறையில் 2 தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன.

இவற்றில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற இயந்திரங்கள் இரண்டு கடற்றொழிலாளர் சமாசத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

யாழ். நகர், பருத்தித்துறை ஆகிய இரண்டு இடங்களில் உள்ள சமாசங்களின் கீழ் அவை இயங்கி வருகின்றன.

ஏனைய ஐந்து தொழிற்சாலைகளும் தனியாரின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன. சமாசத்தின் கீழ் இயங்கி வரும் தொழிற்சாலைகள் இரண்டும் தலா ஐந்தாயிரம் கிலோ பனிக்கட்டியைத் தினசரி உற்பத்தி செய்யக் கூடியன.

தற்போது, யாழ். மாவட்டத்தின் தினசரிப் பனிக்கட்டித் தேவை 40 ஆயிரம் கிலோ ஆகும். ஆனால் மாவட்டத்திலுள்ள ஏழு தொழிற்சாலைகள் மூலம் சுமார் 25 ஆயிரம் கிலோ பனிக்கட்டியே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

எனவே மாவட்டத்தின் தேவைக்கு, உற்பத்தி செய்யப்படும் பனிக் கட்டிகளின் அளவு போதுமானதாக இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதன் காரணமாக தென்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பனிக்கட்டிகள் இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் 25 கிலோ நிறையுடைய பனிக்கட்டி ரூபா 120 ரூபா தொடக்கம் ரூபா 140 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 50 கிலோ நிறை உடைய பனிக்கட்டி 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இது பனிக்கட்டி இறக்குமதிக்குக் காரணமாக உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் கிடைக்கும் கடலுணவுகள் பழுதடையாமல் பாதுகாப்பாக தென்பகுதிக்கு அனுப்புவதற்காகவே பனிக்கட்டிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

## சிறு குற்றச்செய்திகள்

பஸ்ஸினுள் சக பிரயாணியிடம் பத்தாயிரம் ரூபா பணத்தை அபகரித்த குற்றச்சாட்டில் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதில் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர் நாவற்குழியைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது. தனது பணம் அபரிக்கப்பட்டதை உணர்ந்த பிரஸ்தாப பயணி ஒருவரே அந்த இளைஞரில் சந்தேகம் கொண்டு உடனடியாக யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். குற்றவியல் பிரிவு பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-4)

# சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலகம் சாவகச்சேரியில்

தென்மராட்சி, செப்.19

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளை அலுவலகம் சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத் தொகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆணைக்குழுவின் ஆலோசகர் என்.கே. உடலாகம கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா, இலவச சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆலோசகர் சுந்தரலிங்கம் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், கிராம அலுவலர்கள் பிரதேச மத்தியஸ்தர்சபை பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

ஆணைக்குழு ஆலோசகர்களான என்.கே. உடலாகம, சுந்தரலிங்கம், சட்டத்தரணிகளான த.வேலாயுதம், பொ.குமாரசாமி ஆகியோர் உரையாற்றினர்.



இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் சாவகச்சேரிக் கிளை அலுவலகத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட என்.கே. உடலாகம பதிவேட்டில் கையொப்பமிடுகிறார். சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா தலைமையுரை நிகழ்த்துகிறார். ஆணைக்குழுவின் ஆலோசகர்களான என்.கே. உடலாகம, சுந்தரலிங்கம், பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சட்டத்தரணி த.வேலாயுதம் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (ம-207)

# சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பது குறித்து ஆராய்வு

தென்மராட்சி, செப்.19

தென்மராட்சிப் பிரதேசத்தில் பிரதேசமட்ட, கிராமமட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பது தொடர்பாக விளக்கக் கூட்டம் கடந்த புதன் கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

பிரதேச மட்ட சிவில் பாதுகாப்புக் குழுவின் தலைவராகப் பிரதேச செயலரும் செயலாளராகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் உறுப்பினர்களாக சமுர்த்தி முகாமையாளர் (தலைமைப்பீடம்) உட்பட பிரதேச திணைக்களத் தலைவர்கள், வணிகர் கழகம், முச்சக்கர வண்டிகள் சங்கம், தனியார் சிற்றூர்திச் சங்கம் போன்றவற்றின் தலைவர்களும் அங்கம் வகிப்பர்.

கிராம மட்ட சிவில் பாதுகாப்புக் குழுவில் கிராம அலுவலர் தலைவராகவும் பொலிஸ் உத்தயோகத்தர் செயலாளராகவும் பாடசாலை அதிபர்கள், அந்தப் பகுதிப் பொது அமைப்புக்களின் தலைவர்கள், இளைப்பாறிய படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கம் வகிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம- 207)

## பாம்பு தீண்டிய பெண் ஆஸ்பத்திரியில்

வீட்டில் உள்ளிருந்த பாம்பு கடித்து பெண் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புளியங்கூடலைச் சேர்ந்தவரும் இராசையா வீதி, வேலணை 5ஆம் வட்டாரத்தில் தற்காலிகமாக வசிப்பவருமாகிய திருமதி அருச்சுணன் நிருஷா (வயது- 25) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டார். வீட்டில் உள்ள மின்சார இணைப்பு பலகைக்குள் இருந்த பாம்பே இவரைத் தீண்டியது. (ம-167)

# தொழில் வாய்ப்புக் கொள்கை உருவாக்கம் குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம், செப் 19

தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக் கொள்கை உருவாக்கம் தொடர்பான செயலமர்வு இன்று திங்கட்கிழமை யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர்கள் செயலகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெறவுள்ள இந்த ஒரு நாள் செயலமர்வு இன்று காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை யாழ். நகர் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர் டி.ஈ. டபிள்யூ குணசேகர தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் யாழ். மாவட்ட அரச அதிபர், அரச சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், தனியார் துறைகளின் முக்கிய தொழிற் சங்கத் தலைவர்கள், தொழில் தருநர்கள் சார்ந்த அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகள் கல்விசார் துறைப் பேராசிரியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் செயலமர்வுக்கான தொழில்நுட்ப அனுசரணையை சர்வதேச தொழிலாளர் நிறுவனம் வழங்குகிறது.

செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் ஊடகவியலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-14)

# ‘தேசத்துக்கு மகுடம்’ கண்காட்சியை வடக்கிலும் நடத்துமாறு கோரிக்கை

## ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 19

பிரதேச வளர்ச்சியையும் - அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை வடக்கு மாகாணத்தில் நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்க வேண்டும்.

தேசத்துக்கு மகுடம் கண்காட்சி அடுத்த வருடம் அனுராதபுரம் - ஒயாமடுவில் மிகப் பிரமாண்டமான முறையில் இடம்பெறவுள்ளது. இதன் மூலம் அனுராதபுர மாவட்டம் பசுமைப் புரட்சியின் கீழ் அனைத்து கிராம அலுவலர் பிரதேசமும் வளர்ச்சி - அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக மாறவுள்ளது.

வடமாகாணம் கடந்த 30 வருட கால பெரும் யுத்தத்தால் 5 மாவட்டங்களும் [illegible] பட்டுள்ளன.

எனவே அபிவிருத்தியின்றியுள்ள 5 மாவட்டங்களிலும் பெரிய அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமாயின் அடுத்த தேசத்துக்கு மகுடம் கண்காட்சி வடக்கு மாகாணத்தில் உள்ள கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு மாவட்டங்களில் நடத்தப்பட வேண்டும்.

நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிதிய தலைவர் இந்தக் கோரிகையை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை முன் வைத்து கடிதம் ஜனாதிபதிக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கும் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

ஜனாதிபதியாகத் தாங்கள் பதவியேற்ற காலத்தில் இருந்து இதுவரை 5 தேசத்துக்கு மகுடம் கண்காட்சி தென்பகுதியில் உள்ள பல்வேறு மாவட்டங்களிலும் இடம்பெற்றுள்ளன.

அடுத்த கண்காட்சி 2012 இல் அனுராதபுரம் ஒயாமடுவில் இடம் பெறவுள்ளது. இதன் மூலம் அனுராதபுரம் மாவட்டம் அடுத்துவரும் ஆண்டுகளில் வளர்ச்சிப் பிரதேசமாக மாறும்.

இதேபோல் கடந்த கால யுத்தத்தால் கிளிநொச்சி, முல்லைத் தீவு , யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்கள் பிரதேச வளர்ச்சி, அபிவிருத்தி இன்றி அழிவடைந்துள்ளன.

எனவே கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை மையமாக வைத்து அடுத்து வரும் 2013 தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை வடமாகாணத்துக்கு என பிரத்தியேகமாக அறிவிக்க முன்வரவேண்டும் என்று [illegible]ள்ளது. (ம-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றமற்ற நிலையிலும் வழக்கைத் தொடர முடியாத மக்களுக்கு உதவுவதே கிளைத் திறப்பின் நோக்கம்

**சட்ட உதவி ஆணைக்குழு அலுவலகத் திறப்பு விழாவில் சாவகச்சேரி நீதிவான்**

தென்மராட்சி, செப்.19

பாமர மக்கள் தங்கள் பக்கம் குற்றமற்ற நிலையிலும் வழக்கை தொடர்ந்தும் நடத்துவதற்கு பண வசதி இல்லாததால் செய்யாத குற்றத்தை ஏற்று தண்டனை அனுபவிப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் கல்வி அறிவு குறைந்த மக்களே. இவ்வாறான மக்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை ஆணைக் குழுவின் கிளை அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச மக்கள் இந்த அலுவலகம் மூலம் தமக்கு நியாயம் கிடைக்க நீதிமன்றில் இலவசமாக வழக்காடலாம்.

இவ்வாறு சாவகச்சேரி நீதிமன்ற வளாகக் கட்டடத்தில் இலங்கை சட்ட உதவி ஆணைக் குழு கிளை அலுவலக கட்டடத் திறப்பு விழாவில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

இந்தச் சட்ட உதவிகள் நாட்டில் 8 ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த மாதாந்த வருமானம் உள்ள மக்கள் தமக்கு ஏற்படும் தேவைகளுக்கான வழக்குகளை குறிப்பாக தாபரிப்பு, விவாகரத்து, பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், சிறுவர் துஷ்பிரயோகம், முதியோர் உரிமை உட்பட பல்வேறு வழக்குகளுக்கு இந்த சட்ட உதவி மையத்தின் மூலம் இலவசமாகபெற்றுக்கொள்ளலாம்.

பிரதேசத்தில் சட்டத்தரணிகளுக்கு பற்றாக்குறை நிலவுவதால் அலுவலகத்தில் நிரந்தர உத்தியோகத்தர்கள் பணியாற்றுவர். பொது மக்கள் இந்த உத்தியோகத்தருடன் தொடர்புடைய உதவிகளைப் பெற முடியும்.

இந்த அலுவலகத்தில் மக்கள் பயன்பெற கிராம அலுவலர்களின் பங்களிப்பு மிக மிக அவசியமாகும். ஒவ்வொரு குடிமக்களின் வருமானம் பற்றிய விவரங்கள் அந்தந்தக் கிராம அலுவலர்களுக்கே தெரியும். இந்த சட்ட உதவி மையத்துக்கு அனுப்பிவைக்க கிராம அலுவலர்களே உதவி செய்யவேண்டும். அத்துடன் பிரதேச மத்தியஸ்தர் சபையினரும் ஒத்துழைப்பு வறிய மக்களுக்கு மையத்தின் ஊடாக உதவி கிடைக்க உதவவேண்டும்.

இலங்கை அரசியலமைப்பில் உயிர்வாழும் உரிமை, சட்ட உதவிபெறும் உரிமை ஆகியவை உள்ளடக்கப்படல் வேண்டும். கடந்த காலங்களில் பாமர மக்கள் பணம் இல்லாத காரணத்தாலும் பல மைல்கள் நடந்து சென்று பணத்தைச் செலவழித்தும் சட்ட உதவியை சரிவர பெற முடியாத நிலை இருந்தது.

இந்த நிலைமாறி இன்று தென்மராட்சி பிரதேச மக்களுக்கு அருகிலேயே சட்ட உதவியைப் பெறும் வாய்ப்பு முதல் முதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனைச் சரிவர நடைமுறைப்படுத்தி தொடர்ந்து அதன் செயற்பாடுகள் இடம்பெற்று மக்களின் நம்பிக்கையை பெறும் என எதிர்பார்க்கின்றேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பொதுமக்கள் இலவச சட்ட உதவிபெறும் உரிமை உள்ளடக்கப்பட்டுள்ளது. போன்று அதனை இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

இனிவரும் காலங்களில் சட்ட உதவி ஆணைக்குழுவின் உதவியுடன் ஏழை மக்கள் எந்தவித கொடுப்பனவுகளையும் செலுத்தாது வழக்குகளை தொடர்ந்து நடத்தமுடியும். அதற்கான முழு ஒத்துழைப்புக்களையும் சட்ட உதவி ஆணைக் குழு வழங்குமென நம்புகின்றேன். - என்றார்.

(ம-207)

# தனங்களப்பு மக்களுக்கு வீடமைப்பு

சாவகச்சேரி,செப்.19

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தென்மராட்சி தெற்குப் பகுதி தனங்களப்புப் பகுதியில் தற்பொழுது பொதுமக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தனங்களப்பு அறுகுவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களுக்கு வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்க சுவிஸ் அமைப்பு முன்வந்துள்ளது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 33 குடும்பங்கள் இதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு முதற்கட்டமாக வீடுகள் அமைக்க அனுமதி கிடைத்துள்ளது. பொதுமக்கள் வீடுகளை அமைக்க ஏதுவாக சாவகச்சேரி பிரதேச சபை உப அலுவலகத்தில் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கெள்ள விண்ணப்பம் செய்துள்ளார்.

அத்துடன் தமது ஆதனங்களுக்கான 'ஆதனவரியையும் செலுத்தி வருகின்றனர். (ம-131)

# மாவை கலட்டிப் பிரதேசத்தில் மீளவும் இயங்க ஆரம்பித்துள்ள முன்பள்ளி

சுன்னாகம், செப்.19

வலி.வடக்கிலுள்ள மாவை கலட்டிப் பிரதேசத்தில் முன்பள்ளி ஒன்று மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கணேசா முன்பள்ளி என்ற பெயரில் முன்னர் இயங்கிய இந்த முன்பள்ளி கடந்த கால யுத்தத்தால் அழிந்து போனது.

தற்போது இப்பகுதி மக்களின் வேண்டுகோளையடுத்து இந்த முன்பள்ளியை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பாட்டுள்ளது.

இந்த நிலையில் சர்வதேச கெயர் நிறுவனம் பல லட்சம் ரூபா செலவில் இதனை நிர்மாணித்து வழங்கியுள்ளது.

பாடசாலை அலுவலகம், மேடை, ஆண், பெண்களுக்கான தனித்தனி மலசலகூடங்கள் ஆகியவற்றுடன் அமைக்கப் பட்டுள்ள இந்தக் கட்டடம் பிரதேச சிறுவர்களின் கல்வி விருத்திக்குப் பெரிதும் உதவும் என மாவை கலட்டி சனசமூக நிலையத் தலைவர் க.ஐயாத்துரை தெரிவித்தார்.

குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு நீர்ப்பம்பியும் பொருத்தப்பட்டுள்ளதுடன் மின்சாரம் பெறுவதற்கும் இந்த நிறுவனம் உதவவுள்ளது.

அத்துடன் சிறுவர் விளையாட்டு முற்றத்தையும் இந்த நிறுவனம் அமைத்து வழங்கவுள்ளது.

(ம-38)

# யாழ். மாவட்டத்தில் மலசலகூடங்கள் அமைக்க 208 மில்லியன் ரூபா நிதி

**சமுர்த்தி அதிகாரசபை ஒதுக்கியது**

யாழ்ப்பாணம், செப்.19

இலங்கை சமுர்த்தி அதிகார சபையால் யாழ்.மாவட்டத்தில் 5,200 மலசல கூடங்களை அமைப்பதற்காக 208 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மலசல கூடங்கள் அற்ற குடும்பங்களுக்கு மலசல கூடங்களை அமைத்துக் கொடுப்பதற்காக 40 ஆயிரம் ரூபா வீதம் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் 270 மலசல கூடங்களை அமைப்பதற்கு 10.8 மில்லியன் ரூபாவும் ஊர்காவற்றுறையில் 200 மலசல கூடங்களை அமைப்பதற்கு 8 மில்லியன் ரூபாவும் காரைநகரில் 250 மலசல கூடங்களை அமைப்பதற்கு 10 மில்லியன் ரூபாவும் வேலணையில் 200 மலசல கூடங்களை அமைப்பதற்கு 8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் 200 மலசல கூடங்களை அமைப்பதற்கு 8 மில்லியன் ரூபாவும் நல்லூரில் 500 மலசல கூடங்களை அமைப்பதற்கு 20 மில்லியன் ரூபாவும் கோப்பாயில் 400 மலசல கூடங்களை அமைப்பதற்கு 16 மில்லியன் ரூபாவும் உடுவிலில் 400 மலசல கூடங்களை அமைப்பதற்கு 16 மில்லியன் ரூபாவும் தெல்லிப்பழையில் 700 மலசல கூடங்களை அமைப்பதற்கு 28 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சங்கானையில் 200 மலசல கூடங்களை அமைப்பதற்கு 8 மில்லியன் ரூபாவும் சண்டிலிப்பாயில் 280 மலசல கூடங்களை அமைப்பதற்கு 11.2 மில்லியன் ரூபாவும் பருத்தித்துறையில் 300 மலசல கூடங்களை அமைப்பதற்கு 12 மில்லியன் ரூபாவும் கரவெட்டியில் 400 மலசல கூடங்களை அமைப்பதற்கு 16 மில்லியன் ரூபாவும் சாவகச்சேரியில் 300 மலசல கூடங்களை அமைப்பதற்கு 12 மில்லியன் ரூபாவும் மருதங்கேணியில் 600மலசல கூடங்களை அமைப்பதற்கு 24 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-60)

# மாணவர் சமுதாயத்துக்கு ஏற்றவகையில் 'கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும்' நூல்

**மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு**



யாழ்ப்பாணம், செப் 19

காலத்துக்கு ஏற்ப மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்தக் கூடிய வகையில் சேர். பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும் எனும் ஆய்வு நூல் அமைந்துள்ளது. இதனால் ஒவ்வொரு ஆசிரியர்களும் இந்த நூலைப் பெற்று மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்று வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஆர்.எஸ்.நடராசா எழுதிய சேர். பொன் .இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும் எனும் ஆய்வு நூலின் அறிமுக விழா சனிக்கிழமை யாழ். இந்து மாமன்றத்தின் பொது அரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா இறை வணக்கம் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை யாழ்ப்பாணக் கல்வி வலய ஆசிரியர் கல்வி நிலைய முகாமையாளர் ஜி. இரத்தின சிங்கம் நிகழ்த்தினார். தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது.

வாழ்த்துரையை ஓய்வு நிலைக் கல்வி அதிகாரி சி.இராச நாயகமும் பிரதம விருந்தினர் உரையை வைத்திய கலாநிதி கணேசமூர்த்தியும், சிறப்பு விருந்தினர் உரையை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து நூலின் அறிமுக உரையை ஓய்வு நிலைக் கல்வி அதிகாரி சிற்பி சரவணபவன், நூல் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் புலவர் செ.திருநாவுக்கரசு, பதிலுரையை நூலாசிரியர் ஆர். எஸ்.நடராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் நூலாசிரியர் ஆர். எஸ். நடராசாவால் ஓய்வு பெற்ற ஆசிரியர் எஸ். சுப்பிரமணியம் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் ஆசிரியர்கள், அதிபர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் [illegible] கொண்டனர். (ம-313)

# அடிப்படை வசதிகள் இன்றி காரைநகர் கணேசா வித்தி.

யாழ்ப்பாணம், செப். 19

25 வருடங்களின் பின்னர் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள காரைநகர் வேரம்பிட்டி கணேசா வித்தியாசாலை அடிப்படை வசதிகள் இன்றிப் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருவதாகப் பாடசாலைச் சமூகத்தவர்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அங்கு கல்வி கற்கும் மாணவர்களும் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடு படும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பாடசாலைக்குரிய அடிப்படை வசதிகளை உரிய அதிகாரிகள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று பாடசாலைச் சமூகம் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் தலைமையில் இந்தப் பாடசாலையின் மீள் திறப்பு விழா நிகழ்வு இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து சுமார் 40 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்க இணைந்துள்ளனர்.

அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இந்தப் பாடசாலைக்குரிய அடிப்படை வசதிகளான மலசலகூடம், குடி தண்ணீர், தளபாடங்கள் இல்லை. அத்துடன் பாடசாலைக் கட்டடத்துக்கான கதவுகள், பொருத்தமான அதிபர் அலுவலகம், உபகரணங்கள் இல்லை.

பருவ மழை ஆரம்பமாகவுள்ள நிலையில் வகுப்பறைக் கட்டடங்களை சீரமைத்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர சம்பந்தபட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

(ம-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்யவேண்டுமா?

இலங்கையை கூறுபோடுவதற்கு சர்வதேச சமூகம் முனைப்புடன் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே, அரசு உடனடியாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கடந்த புதன் கிழமை 'உதயனு'க்குத் தெரிவித்திருந்தார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவரின் கருத்துத் தொடர்பாக அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களிடம் கேட்கப்பட்டபோது:-

**ஜயலத் ஜயவர்தன எம்.பி.**

அரசமைப்பிலுள்ள சட்டத்தை ரத்துச் செய்யவேண்டுமானால், நாட்டில் சட்டத்தை மாற்றியமைக்கவேண்டிய நிலை ஏற்படும். 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்குமாறு யார் கூறினாலும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிடும்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.**

தமிழ் மக்களுக்கு ஒன்றும் வழங்கக்கூடாது என்பதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் நிலைப்பாடு. அடிப்படை இனவாதமுடைய இயக்கங்கள் கூறும் கருத்துகள் தொடர்பாக நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

சமத்துவமான முறையில் வாழ்வதற்கு தமிழர்கள் விரும்புகின்றனர். ஆனால், நாட்டில் பௌத்த அடிப்படைவாதம் மேலோங்கி காணப்படுகின்றது. இனவாதமுடையவர்கள் சிந்தித்துப் பார்க்காமல் வாய்க்கு வந்ததையெல்லாம் கொட்டித் தீர்க்கின் றனர். இவ்வாறானவர்களின் கருத்துகளை நாம் உற்றுநோக்கும்போது இவர்கள் சமத்துவமான முறையில் வாழ்வதற்கு முனையாதவர்கள் என்ற நிலைப்பாடே வெளியாகின்றது. 13 ஆவது அரசமைப்புக்கமைய தீர்வுத்திட்டம் போதாது என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுதியான கருத்து. 13ஆவது அரசமைப்புக்கு அப்பால் சென்று தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதியே கூறியுள்ளார் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

**முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன் அலி**

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கூற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். 13ஆவது அரசமைப்புக்கு அப்பால் சென்று தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி மக்களுக்கு உறுதியளித்துள்ளார். அந்த உறுதிமொழியை அவர் மீறமாட்டார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அதிகாரப் பகிர்வு என்பது நாட்டைப் பிரிப்பது அல்ல என்பதை புரிந்து கொண்டு சிலர் செயற்படவேண்டும். துரதிஷ்டவசமாக இந்த அரசில் கடும் போக்குடைய தேசியவாதத்துடன் செயற்படுபவர்களும் உள்ளனர். அவ்வாறானவர்கள் ஜனாதிபதிக்கு நெருக்கடி கொடுக்கின்றனர் - என்றார்.

**கலாநிதி நல்லையா குருபரன்**

தமிழ் மக்களுக்கான நியாயமானதொரு அரசியல் தீர்வுக்கு சர்வதேச தலையீடு அவசியம் என்பதையே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் நிலைப்பாடு எடுத்துக் காட்டியுள்ளது. இந்த நாட்டின் ஜனநாயக உரிமைகளை சிறுபான்மையின மக்கள் அனுபவிப்பதற்கு இவர்களே எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அதேபோன்று அதிகாரப் பகிர்வை வழங்குவதையும் எதிர்க் கின்றனர். இவ்வாறான இயக்கங்களை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எனக் கூறுவதைவிட தேசத்துரோக இயக்கங்கள் எனக் கூறுவதே பொருந்தும்.

13ஆவது அரசமைப்புத் திருத்தம் இருந்தும் அதன் நன்மைகளைத் தமிழர் களால் அனுபவிக்க முடியாமல் போனது. மாறாக பெரும்பான்மை இனத்தவர்களே நன்மைகளை நுகர்ந்தனர். எனவே, இருந்தும் பயனில்லை. இல்லாவிட்டாலும் பயனில்லை என்ற நிலைமையே இன்று நிலவுகின்றது.

**கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன**

ஜனாதிபதியின் வலதுகைதான் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம். அந்த இயக்கத்தின் தலைவர் ஜனாதிபதிக்கு ஞான உபதேசம் போதிப்பவர்களுள் ஒருவர். எனவே, அவரின் கருத்தை தட்டிக்கழிக்க முடியாது. இதில் ஏதோ உள்நோக்கம் உள்ளது. தலைமையின் கட்டளையின்றி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எனக் கூறப்படுபவர்கள் தான் தோன்றித் தனமாக நடந்துகொள்ளமாட்டார்கள். இதன் பின்னணி அரசியல் மயம். அதேபோன்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் நோக்கத்தை திசை திருப்பும் செயல்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கூற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் -என்றார்.

# உயர் பதவிகளில் பெண்கள் முன்னணியில்

கொழும்பு, செப். 19

உயர் கல்வியிலும் உயர் பதவிகளிலும் ஆண்களை விட பெண்கள் முன்னணியில் நிற்பதாக சமகால புள்ளி விவரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இதற்கமைய 2009-2010 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானவர்களில் 12 ஆயிரத்து 533 பேர் பெண்களும், ஒன்பதாயிரத்து 16 பேர் ஆண்களும் 2008-2009 ஆம் ஆண்டுகளில் 12 ஆயிரத்து 17பேர் பெண்களும், எட்டாயிரத்து 829 பேர் ஆண்களும் தெரிவாகினர்.

இதில் கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஐயாயிரத்தி 179 பேர் பெண்களும், ஆயிரத்து 514 பேர் ஆண்களும், வர்த்தகத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் பெண்கள் இரண்டாயிரத்து 388 பேரும், ஆண்கள் ஆயிரத்து 949 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

உயிரியல் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் மூவாயிரத்து 339 பேர் பெண்களும் ஆயிரத்து 984 பேர் ஆண்களும் உள்ளனர். பௌதிக விஞ்ஞானபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஆயிரத்து111 பேர் பெண்கள் ஆவர்.

2007-2008 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட இருபதாயிரத்து 69 பேரில் பதினொராயிரத்து 584 பேர் பெண்களும், எட்டாயிரத்து 855 பேர் ஆண்களும் உள்ளனர்.

இவ்வாறான தரவுகள் பெண்கள் பல்கலைக்கழகப் பட்டங்கள் பெறுவதில் ஆர்வமாக உள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இதனைப் போல் உயர் பதவிகளில் பெண்கள் தமது அதிகார பலத்தை நிலை நாட்டி வருவதை எடுத்துக் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-313)

# ஆசிரியர்களுக்கான கணித உபகரணங்கள் தயாரித்தல் போட்டி

யாழ்ப்பாணம், செப். 19

கல்வி அமைச்சின் கணிதப் பிரிவால் வலய, மாகாண, தேசிய ரீதியில் ஆசிரியர்களுக்கான கணித உபகரணங்கள் தயாரித்தல் போட்டி நடத்தப்படவுள்ளது.

வலய மட்டப் போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாகவும், மாகாண மட்டப் போட்டி அடுத்தவருடம் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாகவும் நடத்தப்படவுள்ளது. போட்டிகள் இடம்பெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது.

தேசிய ரீதியில் தெரிவு செய்யப்படும் உபகரணங்களுக்கு பணப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. முதலாவதாகத் தெரிவு செய்யப்படும் உபகரணத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும் இரண்டாவதாகத் தெரிவு செய்யப்படும் உபகரணத்துக்கு 25 ஆயிரமும், மூன்றாவதாகத் தெரிவு செய்யப்படும் உபகரணத்துக்கு 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

மேலும், தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு உபகரணத்துக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும் உபகரணங்கள் பாடசாலைகளிலுள்ள கணித அறைகளில் பயன்படுத்துவதற்காக கல்வி அமைச்சினால் கொள்வனவு செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-14)

# பாடசாலையின் பெயர் மாற்றம்

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சித்தி விநாயகர் வித்தியாலயமாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

இந்தப் பாடசாலை தரம் 9 வரையான வகுப்புக்களைக்கொண்ட வகை 3 ஆரம்பப் பாடசாலையாக இருந்து வகை 2 பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டிருந்தது.

தற்போது தரம் 11 வரையான வகுப்புக்களுடன் இயங்கும் மேற்படி பாடசாலையை சித்தி விநாயகர் வித்தியாலயமாகப் பெயர் மாற்றம் செய்யுமாறு பாடசாலைச் சமூகம் கோரியிருந்தது. இதற்கமைய வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். (வ-38)

# நகரசபையில் சிற்றூழியர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

சாவகச்சேரி நகர சபையில் வெற்றிடமாகவுள்ள உள்ள சிற்றூழியர் பதவிகளை நிரப்புதென சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் நகரசபையின் பொது நூலகங்கள், சுகாதாரப் பகுதி, பொதுச்சந்தை, அலுவலகம் போன்றவற்றில் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படல்வேண்டும் என்று தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளையால் பிரேரணை முன் வைக்கப்பட்டது. நகர மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க இவற்றில் பணிபுரியும் சிற்றூழியர்கள் அவசியம் என்று வலியுறுத்திய உறுப்பினர்கள் வெற்றிடமாக உள்ள சிற்றூழியர் பதவிகளை நிரப்புவதற்கு முழுமையான ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்ததையடுத்து இந்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியதாக தவிசாளர் தெரிவித்தார். (வ-207)

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள்
பொதிகள் சேவை




- 72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.
- எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.

சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள், வீசா சேவைகள், கடவுச்சீட்டு புதுப்பித்தல் மற்றும் இணைந்த சேவைகள்.

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

Arrul Global Express
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

## தவறவிடப்பட்டுள்ளது

இராசேந்திரம் யோகேஸ்வரன் என்பவரது கடவுச் சீட்டு(passport)15.09.2011 அன்று வியாழன் மதியம் நெல்லியடிக்கும் நாவலடிச்சந்திக்கும் இடைப்பட்ட பிரதான வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0779499809
0774042675

குறைந்த
விலையில்
குவளைகள்



2439422

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ஜெயக்குமார் -ஜெயந்தி** தம்பதியினரின் செல்வப்புதல்வன் **ஜெயலக்ஷன்** மாகாஜனாக் கல்லூரி 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த இவரைப் பராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்வியில் பலதுறைகளிலும் சிறந்து விளங்க எமது கும்பளாவளைப் பிள்ளையாரின் அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் இவர் கல்வியில் சிறந்து விளங்க உறுதுணையாகவிருந்த அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**வாழ்த்துபவர்கள்**

அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார் அனைவரும் அன்புடன் வாழ்த்துகின்றனர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலிருந்து 5E தரத்திலிருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி 187 புள்ளிகளைப்பெற்று கொழும்பு மாவட்டத்தில் மூன்றாமிடம் பெற்றுள்ள **ஸ்ரீகாந்த் துஷித்தா** தம்பதியரின் செல்வப் புதல்வன் **கபிசாந்** அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல உயர்வுபெற வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**

மாமா (நிசு), சித்திமார் (லக்ஷி, கிரி), அம்மம்மா

8/1, B.A.தம்பிலேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## எங்களைத் தாங்கும் ஜீவன் எங்கள் வீடு

எனது நண்பனொருவன் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தான். இரண்டாண்டுக்கு முன்னரும் அவன் இங்கு வந்திருந்தான். வந்து தனது மூத்த மகளின் பூப்புனித நீராட்டு விழாவை பிரபலமான திருமண மண்டபமொன்றில் சிறப்பாக நடத்தினான். அன்பளிப்புக்களைத் தவிர்க்குமாறு கேட்டு, அழைப்பிதழ் அனுப்பியிருந்தான். பரிசுப் பொருள்களையும் வந்தவர்களுக்கு அன்பளிப்புச் செய்தான்.

வெளிநாட்டில் பக்குவமடையும் தமிழ்ப் பெண் பிள்ளைகள் அங்குள்ள காவாலிகளின் கண்ணில் படக் கூடாது என்ற நோக்குடன் அயல் நாடுகளிலோ, தாய் நாட்டிலோ கொண்டு சென்று இத்தகைய நீராட்டு வைபவங்களை நடத்தும் நிலை சில குறிப்பிட்ட நாடுகளில் வதியும் பெற்றோர் மத்தியில் உள்ளது. எமது கலாசாரத்துக்கும், மேலைத்தேய கலாசாரத்துக்கும் இடையிலான அல்லாடல் பல பெற்றோர்கள் மத்தியில் இவ்வாறுதான் உள்ளது.

தமது உற்றார்,உறவினர்களின் பிரசன்னத்துடனும்,ஆசீர்வாதத்துடனும் தமது வீட்டு நிகழ்வுகளை நடத்த எண்ணுவதும் இத்தகைய விழாக்களை அவர்கள் ஒழுங்கு செய்வதற்குக் காரணமாகும். தமது விலாசத்தை வெளிப்படுத்துவதற்குரிய ஒரு களமாகவும் இதை அவர்கள் கொள்கின்றனர். அதைவிட இன்னொரு விடயம் வெளிநாட்டில் பிள்ளைகளின் திருமணம் பொதுவாக பெற்றோர் விருப்பப்படி நடப்பதில்லை.பெற்றோர் தமது விருப்பப்படி செயற்படுத்தக் கூடிய ஒரு நிகழ்ச்சியாக பூப் புனித நீராட்டு விழாவே அமைகின்றது.

அதே நண்பன் இம்முறையும் வந்திருந்தான்.அதே பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழோடு என்னைத் தேடி வந்தான். இம்முறை அவனது இரண்டாவது மகளின் பூப்புனித நீராட்டு விழா. அவனை வரவேற்று அமர்த்தி விட்டு, அதே மண்டபமா? எனக் கேட்டேன். இல்லை. வீட் டில் என்றார். அவனது வார்த்தைகள் ஆச்சரியமாயி ருந்தன. இங்கு மண்டபங்களில் நிகழ்ச்சிகளை நடத்தும் கலாசாரத்தைத் தோற்றுவித்தவர்களே புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் நம்மவர்களே!

அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கலாசாரத்தை நம்பியே பல ஆலயங்களும், அமைப்புக்களும், தனி நபர்களும் தமது வருமானத்தைத் தேடும் மூலோபாயத்துடனும், மக்களுக்கு உதவியளிக்கிறோம் என்ற வெளிப் பிரச்சாரத் தந்திரோபாயத்துடனும் பல மண்டபங்களை நிறுவியுள்ளன(ர்). வீடுகளில் சிறப்பாக நடைபெற்ற திருமண விழாக்களும், பூப்புனித நீராட்டு விழாக்களும்,31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளும், பிறந்த நாள் விழாக்களும் இப்போது மண்டபங்களுக்கு இடம்மாறியுள்ளன.

மண்டபங்களிலென்றால் முன்னாயத்தம் ஏதும் தேவை யில்லை.காசைக் கொடுத்தால் போதும். எல்லாம் நடக்கும்.குறிப்பிட்ட நேரத்துக்குள் கொண்டாட்டம் முடிந்துவிடும். ஏதாவது குறைகள் வந்தால் மண்டபக்காரன் தலையில் பொறித்து விடலாம். இப்படி மண்டப நன்மைகள் பலவாகும்.

வந்த நண்பனிடம் போன முறை மண்டபத்தில் செய்தாய்.இந்த முறை ஏன் வீட்டிற்கு மாற்றிவிட்டாய்? எனக் கேட்டேன்.

அவன் சொன்னான்:

இந்த வீடு நாங்கள் வாழ்ந்த வீடு.எங்கடை திருமணங்கள் கூட இங்கை நடக்கவில்லை. வீடு என்பது வாழ் வதற்கு மட்டுமல்ல.அந்த வீடு எங்களைத் தாங்கும் ஒரு ஜீவன்.அம்மா,அப்பா வாழ்ந்து, எங்களைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய இடம். இந்த வீடு எங்களைச் சிறப் பாக வாழ வைச்சுது. பதிலுக்கு நாங்கள் இந்த வீட்டைச் சிறப்பாக வாழ வைக்கவேணும்.

மண்டபத்துக்கென்று அநியாயமாகச் செலவழிக்கிற காசிலை எங்கடை வீட்டைத் திருத்தி, அந்த வீட்டிலையே சந்தோசமாய் நிகழ்ச்சியளை நடத்துறது நல்லது எண்டு போனமுறையே யோசிச்சிட்டன்.

புலம் பெயர் உறவுகளே! எனது நண்பனது உணர்வு உண்மையானதுதான்! ஆனால், இப்படி நீங்களெல்லாம் எண்ணுவீர்களாயின் பல மண்டபங்கள் கட்டாக்காலி கால்நடைகளின் புகலிடமாகிவிடும்.பாவம், அவர்களும் வாழட்டுமே!

விழிச்சான் குஞ்சு.

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் தடுப்பு

கொழும்பு,செப்.19

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி விட்டதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜெனிவா சென்ற இலங்கைக் குழுவில் இடம்பெற்றிருந்த நிமால் சிறிபால டி சில்வா கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு திரும்பிய பின்னரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நா பொதுச்செயலர் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமித்த குழுவின் அறிக்கையை, ஐ.நாவோ, ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையோ விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்று உறுப்புநாடுகளின் பிரநிதிநிதிகளிடம் எடுத்துக் கூறியிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

### இலங்கைக் குழு தகவல்

இலங்கையின் தற்போதைய நிலைமையை நேரில் வந்து அவதானிக்குமாறு பல நாட்டு தூதர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும், நிபுணர்குழு அறிக்கை குறித்து ஜெனிவாவில் ஆராயப்படாது என்றே முழுமையாக நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மனிதஉரிமைகள் பேரவையில் நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக ஆராய்வதற்கு எதிராக, பெரும்பாலான உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டியுள்ளதாக இலங்கைக் குழுவின் தலைவர் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதனால்,ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்த விவகாரம் குறித்து ஆராயப்படாது என்ற நம்பிக்கை உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் 18 ஆவது கூட்டத்தொடரின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்காமல் பின்கதவால் புகுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதிகமான நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க தயாராக உள்ளதாகவும், நிபுணர்குழு அறிக்கையை மனிதஉரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்க அவை எதிர்ப்புத் தெரிவிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பக்கசார்பான செயற்பாடுகளுக்கு மத்தியிலும் பெரும்பாலான நாடுகள் தமக்கு உதவ முன்வந்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

(ச)

## மிருகபலி கூடாது

கொழும்பு, செப்.19

மிருகப் பலி கூடாது என்பதே எமது உறுதியான நிலைப்பாடு. அதனையும் மீறி செயற்பட்டால் அது தவறு என்றே கருதப்படும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னரே அமைச்சர் மேர்வின் சில்வா காளி கோயிலுக்குச் சென்று நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார் எனத் தெரியவந்துள்ளதென்று இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார்.

மிருகப்பலி கூடாது என்பதே எமது ஆணித்தரமான கருத்து. இதற்கு மேல் எதுபற்றியும் கருத்துக் கூறிப் பயனில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அமைச்சரால் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது

கொழும்பு, செப்.19

இந்துசமய மற்றும் பூஜைவழிபாடுகளில் மாற்றத்தைக் கொண்டுவர இந்துக்களால் மட்டுமே முடியும். அமைச்சர் ஒருவரால் அவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது - என்று பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

மிருகபலி பூஜையை இனிமேலும் நடத்துவதா அல்லது நிறுத்துவதா என்பது தொடர்பாக இந்து உயர்பீடத்தவர்கள் தீர்மானிக்க வேண்டும்.

தமிழ் நாட்டிலும் மிருகபலி பூஜை தொடர்பாக சர்ச்சைஏற்பட்டு உயர்நீதிமன்றம் வரை பிரச்சினைகள் சென்றன.

எனவே, இதனை இந்துக்கள் தான் தீர்மானிக்க வேண்டும் - என்றார்.

## ஜெனிவா மாநாடு இலங்கைக்கு வெற்றியா?, தோல்வியா?

ஜெனிவா மாநாட்டில் இலங்கை விடயம் தொடர்பான சர்வதேசத்தின் போக்கு குறித்து கருத்துத் தெரிவித்த அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் :-



### அறிக்கை சென்றதே தமிழருக்கு வெற்றிதான்

**பொன்.செல்வராஜா**

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்குச் சென்றதே தமிழர்களுக்கு கிடைத்த பெரும்வெற்றி. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் என்று நான் நம்புகின்றேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜா தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கையை விவாதிக்க விடமாட்டோம். கடும் எதிர்ப்பைத் தெரிவிப்போம் என்று ஜெனிவா சென்றுள்ள இலங்கைக் குழு அறிவித்துள்ளது. ஆனால், அறிக்கை தன்னிடம் உள்ளதாக நவநீதம் பிள்ளை தெரிவித்துள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### இலங்கையைத் தாக்கத்தான் முயற்சி



**அமைச்சர் வாசு**

நீதிக்காக விவாதம் நடைபெறும் ஓர் இடத்தில் இலங்கையைக் களமாகப் பயன்படுத்தி சர்வதேச அமைப்புகள் எமக்கு எதிராக செயற்படுகின்றன என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். தமது தரப்பு நியாயங்களைத் தெளிவுபடுத்துவதே பிரதானமாகக் கருதப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.



### பொறுத்திருந்துதான் பார்ப்போமே!

**கபீர் ஹாசிம்**

ஜெனிவா மாநாட்டை இலங்கை அரசு வெற்றிகரமாக சமாளித்துள்ளதா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

ஏனென்றால், ஜெனிவா மாநாடு தொடர்பில் முன்னுக்குப் பின்முரணான தகவல்கள் வந்தவண்ணமுள்ளன. வெற்றியடைவோம் என அரச தரப்பினர் கூறுகின்றனர். ஆனால் அங்கு என்ன நடக்கின்றது என்பது தொடர் பாகத் எமக்கு முழுமையாக எதுவும் தெரியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

### அரசு மண்டியிட்டுவிட்டது



**சிறிதுங்க ஜயசூரிய**

ஜெனிவாமாநாட்டில்இலங்கை அரசு மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டதால்தான் சர்வதேச நாடுகள் தனது இறுக்கமான கெடுபிடிகளைத் தளர்த்திக்கொண்டன என்று ஐக்கிய சோஷலிஸ கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு என்று அவர் தெரிவித்துள்ளார்.



### அவலங்களுக்குப் பதில் வேண்டும்

**-ராஜேந்திரன்**

ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத் தொடரில் இதுவரை எந்த விதமான அழுத்தமும் வரவில்லை என நினைத்து அரசு பெருமிதம் அடைவதை விடுத்து இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற அவலங்களுக்குப்பதிலளிக்க வேண்டும். இதுவே அனைவரினதும் எதிர்பார்ப்பு என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மேல்மாகாணசபை உறுப்பினருமான ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மாநாடு முடிவடைந்து நாடு திரும்பியதும் அமைச்சர்கள் பட்டாளம் அனல் பறக்கும் வீர வசனங்களைப் பேசாது, சர்வதேசம் சொன்னதைச் சரிவரச் செய்யவேண்டும். 18ஆவது கூட்டத்தொடர் இலங்கைக்கு வெற்றி எனக் கருதமுடியாது. அது தோல்வியைத் தவிர்த்துக்கொள்வதற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பமாகும். நழுவவிட்டால் தோல்வி உறுதிதான் என்று அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முள்ளிக்குளம் மக்களை வேறு இடத்தில் குடியேற்ற முயற்சி

மன்னார், செப்.19

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முள்ளிக் குளத்தைத் தவிர ஏனைய அனைத்துக் கிராமங்களிலும் மீள்குடியமர்வு நடைபெற்றுள் ளது. இதனால் இந்தக் கிராம மக்கள் மன்னார் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு மன் னார் அரச அதிபர் என். வேத நாயகன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இவர்கள் தம்மை மீண்டும் தமது சொந்த இடமான முள்ளிக்குளம் கிராமத் தில் மீள்குடியமர்த்துமாறு கோரும் மனுவொன்றை ஜனாதிபதியி டம் வழங்கும் பொருட்டு என் னிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இதேவேளை அக்கிராமத் தைச் சேர்ந்த சில மக்களினால் காயாக்குளி என்ற கிராமம் அடையாளம் காணப்பட்டதனைத் தொடர்ந்து குறித்த காயாக்குளிக் கிராமத்தில் குடியமர்த்த நடவ டிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இது தொடர் பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளோம்.

அனுமதி கிடைத்தவுடன் காயாக்குளி என்ற கிராமத்தில் விரும்பி மீளவும் குடியேறவுள்ள குடும்பங்களை மீள்குயமர்வு செய்யவுள்ளோம் என அரச அதிபர் என். வேதநாயகன் தெரி வித்தார்.

குறித்த காயாக்குளி என்ற கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்தால் தங்களால் விவசாயம் செய்ய முடியும் என ஒரு பகுதி மக்கள் தெரிவிப்பதாகவும் ஏனையோர் முள்ளிக்குளம் கிரா



மத்துக்கு அருகில் உள்ள பகுதி களில் மீள் குடியமர்த்துமாறு கோருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தரர். (க-601)

## 12 மாவட்டங்களிலும் சர்வ மதப் பேரவைகள்

மன்னார், செப்.19

இலங்கையில் வாழுகின்ற தலைவர்கள் மற்றும் மக்களுக் கிடையில் மிக நெருக்கமாகச் செயற்படும் நோக்கில் தேசிய சமாதானப் பேரவையானது தெரிவு செய்யப்பட்ட 12 மாவட் டங்களில் சர்வ மதப் பேரவை களை ஆரம்பித்துள்ளது.

மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையின் இரண்டாவது பொதுச் சபைக் கூட்டம் நாளை மறுதினம் 20 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு மன்னாரில் இடம் பெறவுள்ளது. (க-60)

# விஞ்ஞானியாக வருவதே இலட்சியம் முதலிடம் பெற்ற மாணவன் தெரிவிப்பு

மன்னார், செப்.19



நான் எதிர்காலத்தில் ஒரு விஞ்ஞானியாகி எனது மன்னார் மாவட்டத்துக்கும் மக்களுக்கும் சேவை செய்வதே எனது நோக்கமும் இலட்சி யமும் என நடந்து முடிந்த தரம் - 5 புமைமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்ற மன்/சித்திவிநா யகர் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் மோகன்குமார் அன்ரனி றினோசன் தெரி வித்தார்.

இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தின் மன். சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை முதலாம், இரண்டாம் மற்றும் நான்காம் இடங்களைப் பெற்றுள்ளது. இந்த நிலையிலேயே செல்வன் மோகன்குமார் அன்ரனி றினோசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

றினோசன் தொடர்ந்தும் தெரிவிக்கையில்:

கடந்த மாதம் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 188 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளேன். இதற்குக் காரணம் எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் கஜன் ஆவார். பாடசாலை அதிபர் சண்முகலிங் கன் பல வழிகளிலும் எனக்கு உதவி செய்தார்.

இவர்களைப்போன்று எனது பெற்றோரும் பல வழிகளிலும் எனக்கு ஊக்கங்களை வழங்கியுள்ளனர். நான் எதிர்காலத்தில் ஒரு விஞ்ஞானியாகி மன்னார் மாவட்டத்துக்கும் மக்களுக்கும் சேவை செய் வதே எனது நோக்கமும் இலட்சியமும் ஆகும் எனத் தெரிவித்தார்.

## நாடக நிகழ்வு

மன்னார் முருங்கன் கிராமத்துக் கலைஞர்களினால் அரங் கேற்றம் செய்யப்படும் புனித சந்தியோகுமையோர் நாடக நிகழ்வு நேற்று ஆரம்பமானது.

குறித்த நாடகம் தொடர்ந்து இன்றும் நாளையும் இரவு 8 மணிக்கு முருங்கன் கிராமத்தில் முருங்கன் பங்குத் தந்தை அருட் தந்தை க.அ.அருள்ராஜ் தலைமையில் இடம்பெறும்.

## முள்ளியவளையில் சந்தியில் மூன்று வாரமாக தடைப்பட்டிருக்கும் மின்சாரம்

யாழ்ப்பாணம், செப்.19

முள்ளியவளை, பூதன்வயல் சந்தியில் மின்கம்பம் முறிந்து மின்கம்பிகளும் அறுந்து மின் சாரம் தடைப்பட்டு மூன்று வாரத்துக்கு மேலாகியும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக் கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மின்சார சபை யினரிடம் இதுபற்றிப் பலமுறை பொதுமக்களால் முறையிடப் பட்ட போதும் உரிய நடவ டிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட அந்தக் கிராமத் தில் தற்போது 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதோடு பத்துக்கும் மேற் பட்ட வர்த்தக நிலையங்களும் உள்ளன. மூன்று வாரகாலமாக அங்கு மின்சாரம் தடைப்பட் டுள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு மின் சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கேட் டுக்கொண்டுள்ளனர். (க-4)

# வித்தியானந்தாக் கல்லூரியின் மணி விழாவில் பழைய மாணவர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப்.19

முல்லைத்தீவு, முள்ளிய வளை வித்தியானந்தாக் கல் லூரியின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கல் லூரியின் பழைய மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள் ளார்கள்.

கல்லூரியின் பழைய மாண வர்களாக இருந்து தற்போது அறுபது வயதைக் கடந்த மூத்த பழைய மாணவர்கள் 21, 22 ஆம் திகதிகளில் நடைபெற வுள்ள பாடசாலையின் அறுபதா வது நிறைவு நிகழ்வில் கௌர விக்கப்படுகின்றமை சமகாலத்தில் முன்னோடியான செயற்றிட்டமாக பலரினாலும் பேசப்படுகின்றது.

கல்லூரி அதிபர் ரி.கே.சிவ லிங்கம் தலைமையில் நடை பெறும் இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் அறுபது வயதைக் கடந்த இருநூறுக்கும் மேற் பட்ட பழைய மாணவர்கள் நினைவுப் பரிசில்களுடன் கௌர விக்கப்படவுள்ளார்கள். (க-82)

## கால்களுக்கு ஓய்வேது



கடத்தப்படும் கால்நடைகள்: கிளிநொச்சி பிரமந்தனாறு, வட்டக் கச்சி, கல்மடுநகர் ஆகிய பகுதிகளிலிருந்து முல்லைத்தீவு, ஐயன் கன்குளம் பகுதியிலுள்ள குளத்தினூடாகக் கால்நடைகள் கொண்டு செல்லப்படுகின்றன. (6)

# 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் நூலகங்களுக்கு அன்பளிப்பு

கிளிநொச்சி, செப்.19

கிளிநொச்சி கரைச்சிப் பிர தேச சபையின் கீழ் இயங்கும் கிளிநொச்சிப் பொது நூலகம், ஸ்கந்தபுரம் நூலகம் ஆகியவற் றுக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

பிரதேச சபைத் தலைவர் நா.வை. குகராஜா தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ் வில் பிரதேச சபை உபதலை வர் வ.நகுலேஸ்வரன், உறுப் பின்ர்கள், சபைச் செயலாளர் தவசோதி இலங்கை செஞ்சிலு வைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளைச் செயலாளர் சு.தர்மரட் ணம், நூலகர்கள் மற்றும் வாசகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப் பினர் சிறிதரன்; மனித வாழ் வில் அறிவு பூர்வமான வளர்ச் சிக்கு வாசிப்பு என்பதும் அதற்குக் களமாக இருக்கக் கூடிய நூல் களும் முக்கியமாக அமைகின் றன. இன்றைய பரீட்சைகளில் கூட வாசிப்பும் தேடலும் உள்ள மாணவர்களே. அதிகம் சித்தி பெறுகின்றார்கள் இணையத் தளங்களால் பின்னப்பட்ட இந்த உலகத்தில் எமது சமூகமும் இணைந்துகொள்வதற்கு மிக அடிப்படையாக நூல்களுடனான விருப்பும் வாசிப்பும் தேவை யாக இருக்கின்றன. இன்று எமது வரலாற்றையும் பயன் பாடுகளையும் நூல்களே பெட்ட கங்களாகத் தங்களுக்குள் தேக்கி வைத்திருக்கின்றன. சொல்லப் போனால் பல நல்ல மனிதர் களையும் தலைவர்களையும் புத்தகங்களே வழிநடத்தின என்று சொல்லலாம். போர்க் காலத்தில் பல நூலகங்களும் நூல்களும் அழிக்கப்பட்டுள் ளன. ஆக்கிரமிக்கப்பட்டுள் ளன. இந்த நிலையில் ஜன நாயக வழியில் எமது தேசியக் கோட்பாடுகளுக்குக் கிடைத்த வெற்றியும் ஒரு வழியுமான கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் இருக்கின்ற நூலக்ங்களின் வளர்ச்சியில் நாம் மிகவும் அக்கறையுடன் இருக்கின்றோம்.

நவீன கணினி மயப்படுத்தப் பட்ட நூலகங்களாக அவற்றை மாற்றியமைக்க நாம் எலலோ ரும் சேர்ந்து முயற்சிசெய்ய வேண்டும் ஏனெனில் எமது போராட்ட இலட்சியத்தை அடை வதற்கு அறிவாயுதத்தைப் பயன்படுத்த வேண்டியவர்க ளாக இருக்கின்றோம். அதற்குத் தகுதி வாய்ந்தவர்களைப் பொருத் தமான இடங்களில் அமர்த்து கின்ற சூழலை உருவாக்க நூல் களும், நூலகங்களும் கூட நிச்சயம் பங்காற்றும். நூலகங்க ளினூடாக கட்டியெழுப்பப் படு கின்ற வாசகர் வட்டங்கள், எழுத்தாளர்களின் கருத்தாடல் கள் தேசியம் பற்றிய சிந்தனை கள் எமது இனத்தின் விடுதலை நோக்கிய போராட்டத்துக்குப் பக்கபலமாக இருக்கும். நாம் எதை எடுத்துக்கொண்டாலும் எமக்குப் பின்னால் எமக்காக ஆயிரக்கணக்கான தியாகிகள் உயிர் கொடுத்துள்ளார்கள் இலட்சக்கணக்கான மக்கள் இரத்தம் சிந்தி உயிர்கொடுத் துள்ளார்கள். அந்த நினைவுகளின் தடத்தில் நின்று கொண்டு தான் இனத்துக்கான செயலூக் கங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டும். அதிலிருந்து யாரும் விலகியிருக்க முடியாது.

இன்று சுயநிர்ணய கோட் பாடுகளில் சிலருக்குத் தளம் பல்கள் ஏற்பட்டுள்ளன. அது பற்றிக் கேட்டால் சிலர் மௌன மாக இருக்கிறார்கள். ஆனால் சுயநிர்ணய உரிமை, தேசியம் தாயகம் என்ற கோட்பாடு களுக்காகவே மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அவர்கள். தமிழர்களின் அபிலாஷை களைப் பற்றிச் சொல்வதற்கு சிலர் வெட்கப்படுகிறார்கள். சிலர் மௌனிகளாக இருக்கி றார்கள். அரசியல் கோமாளி களாக இருந்து கொண்டு மக் களை ஏமாற்ற முடியாது. எம் மைப் பொறுத்தவரை எமது மக்களினுடைய ஆழ்நெருப்பாக இருக்கக் கூடிய சுயநிர்ணய உரிமை, தாயகம் தேசியம் உரி மைக் கோட்பாடுகளில் இருந்து நாம் ஒருபோதும் மாறப்போவ தில்லை. அதை எமது மக்கள் தெளி வாகப்புரிந்து கொள்ளவேண்டும் - என்றார். (426-301-06)

## கிளிநொச்சி நகரில் வாகன நெருக்கடி

கிளிநொச்சி, செப்.19

கிளிநொச்சி நகரப் பகுதி களிலுள்ள ஏ9 பாதையில் காப் பெற்போடும் பணிகள் நடைபெறு வதால் பெரும் போக்குவரத்து நெருக்கடி தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாதை ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ள தால் சமகாலத்தில் இரு பகுதி களில் இருந்தும் வரும் வாக னங்கள் இதனூடாகச் செல்லும் போது பெரும் போக்குவரத்து நெருக்கடிக்குள் சிக்கி நிற்கின் றன. மேலும் வாகனங்கள் எந்த விதக் கட்டுப்பாடுகளுமின்றி ஒரு குறுகிய இடத்தினூடாகச் சென்று ஒன்றையொன்று முந் துவதற்கு முயல்வதனால் அடிக் கடி போக்குவரத்துத் தடைகளும் ஏற்படுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்துவ தில் கிளிநொச்சிப் பொலிஸார் அக்கறை காட்டாமையே இத்த கைய தடைகளுக்குக் காரணம் என வாகனச் சாரதிகளும், பொது அமைப்பினரும் குற்றம் சாட்டு கின்றனர்.போக்குவரத்துப் பொலி ஸார் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே அனைவர தும் வேண்டுகோளாகும். (க-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணிப் பிரதேசத்தில் தடைசெய்யப்பட்ட காணிகளில் பயிர்ச்செய்கைக்கு அனுமதியுங்கள்

## அரசிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினுள் அபகரிக்கப்பட்ட தனிக்கல்லு, இலுப்பைக்குளம், ஒதியமலை மற்றும் வெடிவைத்தகல்லு ஆகிய விவசாய நிலங்களில் ஒலுமடு, பட்டிக்குடியிருப்பு மற்றும் கற்குளம் கிராமங்களில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட மக்களை விவசாயத்திற்கு அனுமதிக்குமாறு அரசாங்கத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

**விவசாயமும் கால் நடை வளர்ப்பும்**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பினையும் மட்டுமே தமது வாழ்வாதாரமாகக் கொண்டுவாழும் மீளக்குடியமர்ந்த மக்களை அப்பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றப்படவில்லை என்று வழமையாகக்கூறும் காரணத்தைக் காட்டியே பாதுகாப்புத்தரப்பினர் இதுவரை மீளக்குடியமர மறுத்து வந்தனர்.

சென்றவருடம் டிசெம்பர் முதலாம் திகதி அன்று மணலாறு (வெலிஓயா) உதவி அரசாங்க அதிபர், இராணுவ பொறுப்பதிகாரி, மற்றும் ஒரு சிவில் அதிகாரி ஆகியோரினால் மேற்குறிப்பிட்ட நெற்காணிகளின் சொந்தக்காரர்களுள் 17 விவசாயிகள் அழைக்கப்பட்டு இந்தக் காணிகள். யாவும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்காக உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் இந்தக் காணிகளின் சொந்தக்காரர்கள் அனைவரும் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவிற்குள் வருமாறும் அவ்வாறு சம்மதிக்காவிட்டால் இந்தக் காணிகளின் அனுமதிப்பத்திரங்கள் யாவும் இரத்து செய்யப்படும் எனவும் மிரட்டப்பட்டுள்ளனர். இதன் பின்னர் அந்தப்பகுதிக்கு 26.12.2010 அன்றும் இறுதியாக 07.09.2011 அன்றும் நேரில் சென்று அந்தப்பிரதேச மக்களிடம் உண்மை நிலவரங்களைக் கேட்டறிந்தோம்.

**வெலிஓயாவுடன் இணையுமாறு மிரட்டல்**

இதனடிப்படையில் 28.12.2010 அன்று மேற்குறித்த கிராம மக்களின் வயல்காணிகளை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இணைப்பது தொடர்பாகவும் அந்தக்காணிகளை வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் பலாத்காரமாக இணைக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கையைத் தடுக்குமாறு கோரியும் அவர்களை அவர்களது சொந்தக்காணிகளில் விவசாயத்தை மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு கோரியும் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி, ஜனாதிபதியின் செயலாளர் இதுவிடயம் குறித்து தெளிவுபடுத்தும்படி காணி ஆணையாளர் நாயகத்திற்கு 11.01.2011 அன்று கடிதம் எழுதியுள்ளார். காணி ஆணையாளர் நாயகம் 11.03.2011 அன்று இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திடம் கடிதம் மூலம் விவரம் கோரியுள்ளார். அதற்கமைவாக அவரால் 06.09.2011 திகதியிடப்பட்டு காணி ஆணையாளர் நாயகத்துக்கு முகவரியிட்டு எனக்கும் பிரதியிடப்பட்ட சிங்களமொழிக் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:

ஒலுமடு, பட்டிக்குடியிருப்பு, இலுப்பைக்குளம், கற்குளம் ஆகிய விவசாய கிராமங்கள் அமைந்துள்ள மூன்று பிரதேசங்களுடன் தனிக்கல்லு, இலுப்பைக்குளம், ஒதியமலை ஆகிய மூன்று குளங்கள் அமைந்துள்ள பிரதேசங்களும் இலங்கை மகாவலி அதிகாரசபையின் சரத்து 3(1)இன்கீழ் 15.04.1988 அன்றைய வர்த்தமானி இலக்கம் 1487/32 மற்றும் 09.03.2007 ஆம் திகதியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானியின் மூலமும் மகாவலி விசேட அபிவிருத்திப் பிரதேசங்களாக (எல் வலயம்) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட பிரதேசங்கள் அனைத்திற்கும் மொரகஹகந்த நீர்த்தேக்கம் (அணைக்கட்டு) மற்றும் வடமத்திய மாகாணத்தின்; அந்தர் நிம்ன கால்வாயை நிர்மாணிப்பதன் மூலம் மகாவலி நீரினை வழங்க முடியும். ஆனால் தற்பொழுது, நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கால்வாய் கட்டுமானப் பணி இன்னமும் ஆரம்பிக்கப் படவில்லை எனவும் இப்பிரதேசங்களுக்கு மகாவலிநீர் வந்து சேர பல வருடங்கள் ஆகும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. அதுவரை இப்பிரதேசத்தின் சிறிய குளங்களைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். அவ்வகையில் தனிக்கல்லுக் குளம் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் இதன்கீழ் வரும் விவசாய காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளன எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்டுள்ள பிரதேசங்கள் தற்பொழுது இலங்கை மகாவலி அதிகாரசபையினால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமலிருப்பதுடன் இந்தக் காணிகள் மகாவலி அபிவிருத்தி உத்தேச திட்டங்களுக்கு உட்படுத்துவதற்கான திட்டம் எதுவும் இல்லை என்பதனை அறியத்தருகின்றேன். எனினும், எதிர்காலத்தில் இந்த இடங்கள் அபிவிருத்தி அடையும்பொருட்டு அரசாங்கத்தினால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அதனை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு மகாவலி அதிகாரசபையிடம் வழங்கப்பட்டால் அதனை மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்குள் உட்படுத்தி நிறைவேற்றுவோம் என்றும் அந்தக் கடிதத்தில் மகாவலி அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, பட்டிக்குடியிருப்பு மற்றும் ஒதியமலை கிராம விவசாயிகள் தனிக்கல்லில் உள்ள தமது வயல்நிலங்களுக்கு பத்துக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களில் உழவு நடவடிக்கைகளுக்காகச் சென்ற பொழுது அங்கு காவலில் இருந்த இராணுவத்தினரால் காணி அனுமதிப்பத்திரத்தில் பிரதேச செயலாளரின் ஒப்பம் பெற்றுவருமாறு கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

09.09.2011 அன்று தனிக்கல்லு மற்றும் வெடிவைத்த கல்லு ஆகிய பகுதிகளில் மக்களை அனுமதிக்குமாறு வவுனியா அரசாங்க அதிபருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளேன்.

மகாவலி அதிகாரசபையினர் தற்போது மேற்குறிப்பிட்ட இடங்கள் எவ்வகையிலும் மகாவலி அபிவிருத்திக்கு உட்படாது என தமது கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதுடன் தனிக்கல்லுகுளம் திருத்தப்பட்டு பாசனக்காணிகளில் விவசாயிகள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் அவ்வாறு எதுவும் இடம் பெறாததுடன் தற்போதும் பாதுகாப்புத் தரப்பினர் அந்த மக்களை அனுமதிக்க மறுத்துவருகின்றனர்.

**காணி சுவீகரிப்பு வர்த்தமானியில் மட்டுமே**

மகாவலி அதிகாரசபையினால் இந்தப்பிரதேசத்தில் எவ்விதப்பணிகளும்; மேற்கொள்ளப்படவில்லை அத்துடன் மகாவலித் திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு வர்த்தமானியில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி மற்றும் நீர்ப்பங்கீடு என்பவை அரசியல் தீர்வுடன் தொடர்பு பட்டிருப்பதால் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு எட்டப்படும்வரை இத்தகைய திட்டங்கள் எதனையும் அரசாங்கம் முன்னெடுக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இதனைப் போன்றே சமீபத்தில் வடக்கு-கிழக்குக்கென்று பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காணிப் பதிவுமுறைமையையும் இரத்து செய்ய வேண்டும்.

விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பையும் மட்டுமே நம்பி வாழும் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து மீளக்குடியமர்ந்த இந்த மக்களைத் தமது வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்பக்கூடியவாறு தமது பூர்வீகப் பூமியில் சென்றுவாழ அனுமதிக்க வேண்டும்.

# ஒரு வைத்தியராக வேண்டும் இதுவே எனது இலட்சியம்

### வவுனியா மாவட்டத்தில் முதலாமிடம் பெற்ற மாணவி



வவுனியா, செப்.19

ஒரு வைத்தியராக ஆகி ஏனையோருக்குச் சேவைபுரிய வேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியமாக உள்ளது. இவ்வாறு அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் 193 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய மாணவி சர்மிகா சர்வானந்தன் தெரிவித்தார்.

இவர் மாகாண மட்டத்தில் இரண்டாவது இடத்தையும், மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தனது சிறந்த பரீட்சை முடிவுகள் தொடர்பாக சர்மிகா தொடர்ந்து கூறுகையில்:

எனது வகுப்பாசிரியையான திருமதி கோமதி ரீச்சர் நான் சிறந்த பெறுபேறைப் பெறுவதற்கு முக்கியமானவர். மற்றும் ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் எனக்குச் சிறந்த வழிகாட்டிகளாக இருந்துள்ளனர். குறிப்பாக எமது பாடசாலை அதிபர் எனக்கு வழங்கிய ஊக்கமும், வழிகாட்டலும் பெரிதும் உதவின.

எனது பெற்றோர்கள் வவுனியா ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்தியர்களாக உள்ளனர். இவர்கள் எனக்கு எப்போதுமே நல்ல ஊக்கத்தை வழங்கி வந்தனர்.

மேலும் உதயன், சுடர் ஒளிப் பத்திரிகைகளில் வெளிவந்த முன்னோடிப் பரீட்சை வினாக்களும் எனக்குப் பெரிதும் உதவின.

எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக இருந்து ஏனையோருக்குச் சேவை புரியவேண்டும் என்பதே எனது இலட்சியமாக உள்ளது என்றார். (க)

# "மீன் எழுச்சித் திட்டம் மக்களின் பங்களிப்பு மிகவும் அவசியம்"

அக்கராயன் மீன் எழுச்சித் திட்டங்களுக்கு பயனாளிகளான மக்கள் கூடுதல் பங்களிப்பு செய்ய வேண்டும். கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என மீன் எழுச்சித் திட்டத்தின் சமூக வலுவூட்டலாளர் செ.குகதாசன் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் கிராமிய அபிவிருத்தி அமைப்பு அலுவலகத்தில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் அதனைத் தெரிவித்தார்.

கூட்டங்களில் பயனாளிகள் கலந்துகொண்டு கிடைக்கின்ற பயன்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பொருள்கள் வழங்கும் போது மட்டும் கூட்டங்கள் கூடக் கூடாது.மீன் எழுச்சித் திட்டத்தின் பிற அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களில் எல்லோரும் கலந்துகொள்ள வேண்டும். மக்கள் ஒத்துழைப்பு இல்லை எனில் உதவிகள் கிடைப்பதும் தாமதமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.அக்கராயன் கிராமிய அபிவிருத்தி அமைப்புத் தலைவர் இ.[illegible] தலைமையில் இந்த மாதக் கூட்டம் நடைபெற்றது. (410)

# அக்கராயன் மத்திய பகுதியில் பொது மண்டப வசதியில்லாத நிலை

அக்கராயன், செப்.19

கிளிநொச்சி, அக்கராயன் மத்திய பகுதியில் பொது மண்டப வசதி இல்லாத நிலை காணப்படுகின்றது.

மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ள 600 வரையான கிராம மட்ட குடும்பங்களுக்கு என கிராம மட்டத்தில் நடைபெறும் கூட்டங்கள், விழாக்கள் என்பவற்றை நடத்த வசதி கொண்ட இடமில்லாத அவலம் தொடர்கின்றது.

பொதுநோக்கு மண்டபம் இருப்பின் கிராம அலுவலர் தமது பணிகளை மேற்கொள்ள முடியும்.

தற்போது அக்கராயனில் நடைபெறும் கூட்டங்கள் அனைத்தும் வைகறை முன்றலில் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் அக்கராயன் மத்திய பகுதியில் பொது நோக்கு மண்டபத்தினை அமைக்குமாறு அக்கராயன் பகுதி மக்கள் வேண்டுகை விடுத்துள்ளனர்.

(க-410)

# மன்னார் நகரத்தில் திடீர் பரிசோதனைகள்

மன்னார் நகரப்பகுதியில் அமைந்துள்ள உணவகங்கள் உட்பட பல வியாபார நிலையங்களில் மன்னார் பொது சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது சுகாதாரத்துக்கு அமைவாகக் காணப்படாத உணவகங்கள் சந்தைப் பகுதி ,பலசரக்குக்கடைகள்,இறைச்சிக் கடைகள் ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன.

**பாவனைக்குதவாத உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.**சில வர்த்தக நிலையங்கள் மீது சட்டநடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சில உணவகங்கள் மற்றும் மாடு கொல்களம் ஆகியவற்றை மூடுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் மன்னார் நகர்ப் பகுதியில் உள்ள உணவகங்கள் சுத்தமான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வீண் பழிகள் அகன்று நிம்மதி பெறும்நாள். மனதில் இனம் புரியாத சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும். பெரிய பிரச்சினையாகுமோ என நினைத்த விடயம் ஒன்று சுமூகமாக முடிவுக்கு வரலாம். மற்றவர்களை பரிகாசம் செய்து பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

**இடபம்:**
பெரியோர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். காலையில் மேற்கொண்ட முயற்சி ஒன்று தடைப்பட்டு மாலையில் முடிவுக்கு வரலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என கவலை அடையலாம். குடும்ப உறுப்பினர்களிடம் கூட சில ரகசியங்களை சொல்லாமல் தன்னிச்சையாகச் செயற்படுவீர்கள்.

**மிதுனம்:**
அதிக விலை கொடுத்து சில பொருள்களை வாங்கலாம். ஓய்வு எடுக்க முற்பட்டாலும் அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். வாடகை வீட்டில் குடியிருப்போர் வீட்டு உரிமையாளர்களின் குடைச்சல்களுக்கு ஆள்படலாம். கணவன் அல்லது மனைவி உடல் நலக்குறைவால் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:**
நண்பர்களின் பாச மழையில் நனைவீர்கள். உதாசீனம் செய்த சிலரே உங்களின் செயற்பாடுகளை கண்டு பெருமை அடைவர். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கலாம். நீண்ட நாள்களாக செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்வீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி பெருமை அடைவீர்கள்.

**சிங்கம்:**
சோர்வின்றி தெம்பு, உற்சாகமாகச் செயற்படுவீர்கள். பணப் பிரச்சினை தீரும் வகையில் புதிய வரவுகள் வந்து சேரும். பெண்கள் கணவனின் மனம் கோணாமல் நடந்து பாராட்டுக்களைப் பெறுவர். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். பயணங்களால் நினைத்த காரியம் நிறைவுக்கு வரும்.

**கன்னி:**
சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள். மனதில் இனம் புரியாத கவலைகள் குடிகொள்ளும் நாள். வீண் செலவுகளால் அவதிப்படலாம். வயிறு உபாதைகளைச் சந்திக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**துலாம்:**
உறவினர்கள் சிலர் உங்கள் மூலம் வேலைகளை முடிக்க முற்படுவர். பெரிய அளவில் மனக்கோட்டை கட்டியிருந்த காரியம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். உங்களைப் பார்க்க வரும் சிலரை உபசரிக்க கணிசமான பணத்தை செலவிடலாம். கடன் மிகுதிகளைக் கொடுப்பீர்கள். வீண் பிடிவாதம், வறட்டுக் கௌரவம் என்பவற்றைத் தவிர்க்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்:**
புதிய உத்வேகம், தெம்புடன் செயற்படும் நாள். கலைஞர்கள், நண்பர்கள் உதவியுடன் புதிய வாய்ப்புகளைப் பெறலாம். பெண்கள் உடன் பிறப்புக்களின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். நடக்குமோ நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று திடீரென நடந்து விடும். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணத்தை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள்.

**தனுசு:**
வியக்க வைக்கும் சம்பவங்கள் நடக்கலாம். உங்களின் மனக் குறைகளை குடும்ப உறுப்பினர்களிடம் கூட சொல்லாமல் அமைதியாக நடந்து கொள்வீர்கள். உறவினர்கள் சிலருக்கு பண உதவிகள் செய்வீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். மனைவி, குழந்தைகளுடன் உல்லாசமாக பொழுது போக்குவீர்கள்.

**மகரம்:**
கடைகளில் பொருள்களை வாங்கும் போது அல்லது வாகனங்களில் செல்லும் போது, மீதி பணத்தை பெறாமல் மறதியாக வந்து விடலாம். காலை நேரத்தில் பால்ய நண்பர் ஒருவரைச் சந்தித்துப் பேசலாம். ஒரு விடயத்திற்காக மற்றவர்களின் உதவியை எதிர்பார்ப்பீர்கள்.


**கும்பம்:**
புத்திசாலித்தனமாகச் செயற்பட்டாலும், மற்றவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் சிறிய அளவில் பலன் கிடைக்கலாம். நடந்து முடிந்த சம்பவம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். வெளியூர் பயணம் செல்லலாம். தாய் வழியில் தொல்லைகள் நேரலாம்.


**மீனம்:**
பகட்டான ஆடைகள் அணிவதில் நாட்டம் செல்லும். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டம் தள்ளிப் போகலாம். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள். இரண்டு நாள்களாக வராமல் இழுத்தடித்த பணவரவு ஒன்று இன்று கிடைக்கலாம்.

# வரலாற்றையே மாற்றிவிடுமா மாயக்கை?

**இலங்கையின் வடபாகம் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட கால வரலாற்றையுடையது என்பதை இதுவரை கிடைக்கப்பெற்ற தொல்லியல் ஆதாரங்கள் நிரூபித்துள்ளன.**

**ஆனால் இதற்கு முன்னரே பல லட்சம் வருடங்களுக்கு அப்பாலான தொல்லியல் ஆதாரங்கள் அண்மைக்காலங்களாகக் கிடைத்து வருகின்றன. யாழ்ப்பாணத்தின் வட கடற்கரையை அண்டிய கிராமங்களிலிருந்து மீட்கப்படும் இந்தத் தொல்பொருள்கள், வரலாற்றுக்கு முற்பட்ட கால பண்பாடுகளின் எச்சங்களாக விதந்துரைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக வடமராட்சியின் மாயக்கை பகுதிகளிலிருந்து 1990 ஆம் ஆண்டு மீட்கப்பட்ட தொல்பொருள்கள் இற்றைக்கு 6 லட்சம் வருடங்களுக்கு முற்பட்டது என்று கூறுகிறார் தொல்லியலாளர் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா.**





ஹரிஸ்

மனித இனம் வாழ்ந்ததற்கான தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படையில் அதன் தொன்மை நிலை நாட்டப்பட்டிருக்கிறது.

அந்தவகையில் மாயக்கை பிரதேசமும் அதன் சூழலும் வரலாற்றுக்கு முற்பட்டகால, வரலாற்றுக் கால தொல்லியல் மூலாதாரங்களை நிறையவே கொண்டிருப்பதைத் தற்போது யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா கண்டுகொண்டார். அதன் நிமித்தம் 1990 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இருந்து அந்தப் பகுதியில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கினார்.

அந்த ஆய்வு மனித இனத்தின் தொன்மையை வெளிப்படுத்தும் பெரிய ஓர் ஆய்வாக மேற்கொள்ளப் பட்டது. அந்த வகையில் அந்தப் பிராந்தியத்திலுள்ள இயற்கையான குகைகளுக்குள் இருந்து கற்காலத்துக் குரியதென கருதப்படும் கற்கருவிகள் மீட்கப்பட்டன. இது பெரும் வரலாற்று ஆய்வு வெற்றியை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது. அங்கிருந்த கற்கருவிகள் தொடர்பாக அந்தக் காலத்தில் பல பத்திரிகைகளிலும் கட்டுரைகளை எழுதியிருந்தார்.

அந்தக் கட்டுரைகளின் ஊடாக மாயக் குகையில் இருந்து மீட்கப்பட்ட கல்லால் ஆன கருவிகள் அவற்றின் உருவ அமைப்பை பொறுத்தவரையில் யாழ்ப்பாண வரலாற்றுக்கு மட்டுமல்லாத முழு இலங்கையின் வரலாற்றுக்குமே முற்பட்ட கால வரலாறு தொடர்பாக முக்கியத்துவம் பெறுகிறது என்று அவர் அப்போது எழுதிய கட்டுரைகளில் குறிப்பிட்டிருந்தார்.

மாயக்கை பகுதியானது இயற்கையாகவே தரை மேல் வளர்ச்சிபெற்றுக் காணப்படும் வெள்வைர பாறைத் தொடர்களால் நிரப்பப்பட்டது. ஆங்காங்கு பல்வேறு குகைகளும் காணப்படுகின்றன. இயற்கையாகவே 50 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்திணிவு நீரினால் நிரம்பப்பட்டதாகவும் அவற்றின் நீரோட்டமானது கீழே அமைந்துள்ள நிலக்குகைகளின் ஊடாக கடற்கரையை நோக்கி பாய்ந்து செல்வதாகவும் காணப்படுகிறது.

இந்த நீர்ப்பரப்பின் மேல் நிலத்தில் காணப்படுகின்ற குகைகளில் மனிதர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்களாகக் காணப்படும் குறிப்பிட்ட கற்கருவிகள் முதன்முறையாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இத்தகைய வரலாற்று முக்கியத்தவம் பெற்ற பழங்கற்கால தடயங்கள் முதன்முறையாக இனங் காணப்பட்டன. அவற்றின் பின்னணி அடிப்படையிலும் கருவிகளின் உருவவியல் அடிப்படையிலும் முக்கியத்துவம் பெறுகின்றன எனப் பேராசிரியர் கிருஷ்ணராஜா 1992 ஆம் ஆண்டு தனது கட்டுரைகள் மூலம் குறிப்பிட்டிருந்தார். இருந்த போதிலும் பேராசிரியர் இந்திரபால, பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஆகியோர் இது தொடர்பாக எதுவித கருத்தையும் தெரிவிக்கவில்லை. அதுபோலவே பேராசிரியர் ரகுபதி இது கற்குவாரிப் பரப்பில் இருந்து மீட்கப்பட்டதால் அது உண்மையாகவே கற்கால மனிதன் பாவித்த கருவியாகவே இருக்க முடியாது எனத் தனது ஆய்வுக் கட்டுரையொன்றின் மூலம் ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் கால இந்திய அரசால் மேற்கொள்ளப் பட்ட பவான் படை நடவடிக்கை உச்சக் கட்டத்தை அடைந்ததால் மேலும் ஆய்வுகளை நடத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

ஆனால் போர் முடிவடைந்து தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் 2011 ஆம் ஆண்டு கந்தரோடையில் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வு நடவடிக்கைகளை கண்காணிக்க வந்த தொல்லியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரேவுக்கு ஓர் ஆலோசனைக்காக மாயக்குகையில் இருந்து மீட்கப்பட்ட தொல்லியல் எச்சங்களைக் காட்ட வேண்டிய தேவை பேராசிரியர் செ. கிருஷ்ணராஜாவுக்கு ஏற்பட்டது. இந்தக் கற்கருவிகளை தொல்லியல் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரே தொல்லியல் திணைக்கள முக்கியஸ்தரும் ஆய்வாளருமாகிய கலாநிதி சிராண் தெரணியகல ஆகியோரும் கந்தரோடையில் ஆய்வுகளை நடத்திய ஆய்வுக் குழுத் தலைவர்களும் பார்வையிட்டனர். இவர்கள் எல்லோரும் மாயக்குகையில் இருந்து மீட்கப்பட்ட தொல்லியல் பொருள்கள் பழங்கற்காலத்துக்கு உரிய கருவிப் பாவனையில் எழுந்த சுவட்டு எச்சங்கள் என ஏற்றுக் கொண்டனர்.

இதன் நிமித்தம் இந்தப் பொருள்கள் யாவும் பேராசிரியர் கிருஷ்ணராஜாவால் தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

இதனைப் பார்வையிட்டு ஆய்வு நடத்திய தொல்லியல் திணைக்கள உயர் குழாமைச் சேர்ந்த கலாநிதி கிராண்தெரணியகல இந்தப் பொருள்கள் இற்றைக்கு 6 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஹோமோ எரக்ட்ஸ் மனித இனத்துக்கு உரியதாக இருக்க வேண்டும் என முடிவெடுத்திருக்கின்றனர்.

இந்தக் கற்கருவிகள் சேட் இன கற்களால் ஆக்கப்பட்ட பொருள்கள் என்று கூறியுள்ளனர்.

இது தொடர்பாக பேராசிரியர் கிருஷ்ணராஜா தெரிவித்தபோது இந்தப் பகுதியில் தொல்லியல் ஆய்வுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் இந்தப் பகுதியில் மனிதச் சுவட்டு எச்சங்கள் மீட்கப்பட்டால் யாழ்ப்பாணத் தொல்லியல் வரலாறு மட்டுமல்ல இலங்கை முழுவதன் வரலாறும் மாற்றமடையும் எனவும் நம்பிக்கை பொங்கத் தெரிவித்தார்.

எனவே, இலங்கையில் மாயக்கைப் பகுதியின் ஆய்வு முழு இலங்கையின் வரலாற்றையும் மாற்றியமைக்குமா? அல்லது பெரும்பான்மை இனப் பார்வையோடு கைவிடப்படுமா? என்பதை இனிவரும் காலங்களில் நடைபெறுகின்ற தொல்லியல் ஆய்வுகள் தான் நிரூபிக்கும். ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளங்களை இழக்கும் இலங்கைத் தமிழினம் மீட்சிபெறுமா?

ராஜராஜன்

ஓர் இனத்தின் அடையாளங்களை அழித்துப் பலவீனப்படுத்துவதன் மூலம் அதன் இருப்பையே தகர்த்துவிட முடியுமெனக் கூறுவார்கள். இதனையே இலங்கை அரசுகள் வெகு கச்சிதமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன.

இலங்கைத் தமிழர்கள் தமக்கெனத் தனியான சில அடையாளங்களைக் கொண்டிருக்கின்றனர். மொழி, பூர்வீக நிலம், தனியான கலாசாரம், சுதந்திரமான மத அனுட்டானம் என்பன இவற்றுள் முக்கியமானவை. அந்நியரின் வருகைக்கு முன்னர் ஆட்சி அதிகாரங்களும் தமிழ் மக்களின் கரங்களில் இருந்துள்ளன.

கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னனாகிய ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஒரு தமிழ் மகன் என்பது வரலாறு தந்த உண்மை. இதைப் போன்று அனுராதபுரத்தை ஆட்சிசெய்த எல்லாளன் முதல் வன்னி அரசன் பண்டார வன்னியன், யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனாகிய சங்கிலியன் ஆகியோரும் தமிழர் களே. ஆனால் அந்நியரின் வருகை தமிழ் மக்க ளைப் பொறுத்த வரை நீங்காத இருளைத் தோற்றுவித்துள்ளது.

அந்நியர்கள் தமது வசதிக்காக முழு இலங்கையையும் ஒரே குடைக்குள் கொண்டு வந்தனர். ஆனால் வேறுபட்டுக் கிடந்த இனங்களை அவர்களால் இணைக்க முடியவில்லை. வன்மமும் குரோத உணர்வும் அமைதி காக்கும் எரிமலை போன்று அடங்கிக் கிடந்தன. அந்நியர் ஆட்சியில் அதிகாரச் செல்வாக்கின் உச்சிக்குச் சென்று இலங்கையின் ஏனைய இனங்களுக்கு வழிகாட்டிய தமிழினம் மீதான பொறாமை உணர்வு பெரும்பான்மையினத் தலைவர்களின் இதயங்களில் மண்டிக்கிடந்தது. இதன் காரணமாக இன விகிதாசாரத்தில் மலை போன்று உயர்ந்து நிற்கும் எமக்குக் காலடியில் அமர்ந்து சேவகம் புரிய வேண்டியவர்கள் எம்மை வழி நடத்திச் செல்வதற்கு நாம் அனுமதிப்பதா? என்ற கேள்வி பேரவையாக அவர்களின் மனங்களில் மோதியது. சிங்கள, முஸ்லிம் இனத்தவர்களுக்கிடையே தோன்றிய பூசலை அணைப்பதற்காக வெளிநாடு சென்று சிங்களவர்களுக்குச் சார்பாகக் குரல் கொடுத்த சேர்.பொன். இராமநாதன் நாடு திரும்பியபோது குதிரை வண்டியில் வைத்துக் குதிரைகளுக்குப் பதிலாகச் சிங்களத் தலைவர்களே இழுத்துச் சென்றதாகப் பெருமையாகக் கூறுவர். அப்போதைய தமிழ்த் தலைவர்களும் நாட்டின் தலைநகரில் சௌகரியமாக வாழ்ந்து தமது வசதி வாய்ப்புக்களை பெருக்கும் நினைவில் ஆழ்ந்திருந்தனர். சிங்களத் தலைவர்களின் உண்மையான எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இவர்களிடம் அப்போது இருந்திருக்கவில்லை. இத்தகைய பலவீனங்கள், சிங்களத் தலைவர்களால் மிகவும் சிறப்பான முறையில் தமக்குச் சாதமாகக் கையாளப்பட்டன.

தமிழர்கள் தமது தாயகமெனக் கொண்டாடி வந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நாட்டின் மொத்தப் பரப்பளவில் மூன்றிலொரு பங்கைக் கொண்டிருந்தது. மொத்தச் சனத் தொகையில் அண்ணளவாகப் பத்து வீதமே உள்ள தமிழர்கள் மூன்றிலொரு பங்கு நிலத்தை ஆள்வதா என்ற வினா சிங்களத் தலைவர்களின் மனங்களில் முளைவிட ஆரம்பித்தது. இதை எப்படியும் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற வெறியுடன் உரிய சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தனர். அந்தச் சந்தர்ப்பமும் கிட்டியது.

1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அங்கிருந்து அப்போது ஆட்சி செய்த ஆங்கிலேயர்கள் வெளியேறினர். அதன் பின்னர் சுண்டைக்காய் அளவிலிருந்து இலங்கையில் அவர்களுக்கு என்ன வேலை?

1948 பெப்ரவரி நான்காம் திகதி இலங்கையும் அந்நியராட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது. இந்த நாளே இலங்கைத் தமிழர்களைக் கொடிய துன்பத்தில் ஆழ்த்தப் போகும் நாள்களுக்கான ஆரம்பச் சுழியாகவும் அமைந்தது.

அதிகம் படித்திராத டி.எஸ். சேனநாயக்கா நாட்டின் முதலாவது பிரதமரானார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர். அப்போது ஐக்கிய தேசியக் கட்சியே மிகவும் செல்வாக்குப் பெற்ற கட்சியாக இருந்தது. நாட்டின் முக்கிய பிரமுகர்கள் பலரும் அப்போது அந்தக் கட்சியிலேயே இணைந்திருந்தனர். இதில் இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்குக் காரணமாக இருந்த இனவாதப் பிதாமகன் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவும் அடக்கம். வெளிநாடு சென்று உயர் கல்வி பெற்றாலும் பண்டாரநாயக்காவின் மனம் செம்மையடையவில்லை. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக எதைச் செய்யவும் அவர் தயாராக இருந்தார். சாதாரணப் பாமர சிங்கள மக்களின் மனதில் எதையாவது பிரச்சினையைப் பதிய வைத்தால் போலும். அவர்கள் எமது பக்கமே திரும்பி விடுவார்களென்ற தாரக மந்திரம் பண்டாவுக்கு நன்கு தெரிந்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து தனிக் கட்சியை ஆரம்பித்தார். நான் ஆட்சி பீடமேறினால் 24 மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் என மேடைகள் தோறும் முழங்கினார். வெற்றியும் கண்டார். ஆட்சிபீடத்தில் ஏறினார். பண்டாவால் அன்று ஏற்றி வைக்கப்பட்ட இனவாதப் பொறி பல ஆண்டுகளாக அணைந்துவிடாமல் பெருந் தீயாக மாறி இந்த நாட்டையே சீரழித்தமை பழைய கதைகள்.

டி.எஸ். சேனநாயக்க சிங்களக் குடியேற்றங்கள் என்ற போர்வையில் தமிழர் பிரதேசங்களைக் கபளீகரம் செய்தார்.பண்டாரநாயக்க தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் தமிழ் மொழிக்குக் குழி தோண்டினார். யுத்தத்தின் பின்னரான தமிழர் பிரதேசத்தில் கலாசாரச் சீர்கேடுகள் விதைக்கப்பட்டன. தமிழர் தாயகத்தில் மூலைக்கு மூலை அரச மரங்களும் புத்த பெருமானும் தற்போது பல்கிப் பெருகும் நிலை தாராளமாகவே காணப்படுகின்றன. தற்போது தமிழர் பிரதேசங்கள் மகாவலி வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

ஓர் இனத்தின் அடையாளங்களான நிலம், மொழி, கலாசாரம், மதப் பண்புகள் என்பன விழுங்கப்பட்டு வருகின்றனமை அதன் இருப்பையே தகர்த்து விடுமென்ற கூற்று தமிழர்களைப் பொறுத்தவரை மிகச் சரியாக அமைந்து விடுமோ என்ற அச்சம் தமிழர்கள் தரப்பில் மெல்ல மெல்ல அரும்பத் தொடங்கியுள்ளது.

தற்போதைய அரசு எல்லா வகையிலும் தமிழர் தரப்பைச் சின்னாபின்னமாக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. சர்வதேச சமூகத்தின் கருத்துக்கள் இலங்கையரால் புறம் தள்ளப்பட்டுள்ளன. சில பெரிய நாடுகள் துணைக்கு இருக்கும் வரை எதையும் செய்து முடிக்கலாமென்ற எண்ணம் அதனுள் குடிகொண்டுள்ளது.

இந்த நிலையில் தமிழர் தலைமைகளும் ஒவ்வொரு திசையில் தமது மனம் போனபடி பயணம் செய்கின்றன. பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தங்கள், யுத்தம் என்று பல்வேறு கோணங்களில் பரிணாம வளர்ச்சி பெற்ற இலங்கைத் தமிழர் பிரச்சினை மீண்டும் பேச்சுவார்த்தை என்ற குண்டுச் சட்டிக்குள் சிக்கி நிற்கின்றது. இதில் தமிழ் மக்களுக்கு எவ்வித நம்பிக்கையும் கிடையாது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

தந்தை செல்வாவின் வார்த்தைகள்தான் இப்போது நினைவுக்கு வருகின்றன. ''இனிமேல் கடவுள்தான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்.'' ✱

# விரதத்தை விடலாமா?



என்னுடைய நண்பர் ஒருவர் கடுமையான விரதங்களை மேற்கொள்ளுகிறவர்.

சில நாள்களில் உண்ணா விரதம், சில நாள்களில் மௌன விரதம், அந்தந்த விரதத்துக்குரிய விதிமுறைகளை கொஞ்சம்கூட மீறமாட்டார். அவரிடம் ஒரு நாள் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தேன்.

''ஏன் சேர் இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்?''

''எப்படி?'' என்றார் அவர்

''நீங்கள் தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கிறீர்கள்: ஒரு பெரியவர் சிறிது தூரத்தில் போய்க் கொண்டிருக்கிறார். அவருக்குப் பின்னால் ஒரு மாடு முட்ட வருகிறது. அதை நீங்கள் பார்த்துவிடுகிறீர்கள். அன்றைக்கு நீங்கள் மௌனவிரதம்... என்ன செய்வீர்கள்?''

அந்தப் பெரியவரை அவசரமாக அழைத்து...

'ஐயா பெரியவரே, விலகிக் கொள்ளுங்கள் மாடு முட்ட வருகிறது! என்று எச்சரிக்கை செய்வீர்களா? இல்லை பேசாமல் இருந்து விடுவீர்களா? என்றேன் ''எனக்கு என் விரதம் தான் முக்கியம்!'' என்றார் அவர்

''அப்படியானால் உங்களுக்குத்தான் இந்தக் கதை!'' ''எந்தக் கதை?''

''இப்படி உட்காருங்கள்... சொல்கிறேன்!''

நான் உட்கார்ந்தேன். நான் சொல்ல ஆரம்பித்தேன் -

''ஓர் ஊரிலே ஒரு துறவி இருந்தார். அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் விதிமுறைகளை மீறாதவர். கடுமையான விரதங்களைக் கடைப்பிடித்துக் கொண்டு வருபவர். ஆதவன் உதயமான பிறகு ஆகாரம் எதையும் தொடமாட்டார். தண்ணீர்கூடக் குடிக்க மாட்டார். அவருடைய நெறிதவறாத தன்மை கடவுளையே ஆச்சரியப்பட வைத்தது. அவருக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தார் கடவுள். என்ன செய்வது? யோசித்தார்! உடனே செயல்படுத்தினார். அதாவது-

அவருடைய நெறிதவறாத தன்மையைப் போற்றக்கூடிய வகையிலே ஆகாயத்தில் ஒரு விண்மீனை உண்டாக்கினார். அதுவும் எந்த நேரத்தில்? பகல் நேரத்தில்!

அந்தத் துறவி மேற்கொள்ளும் விரதத்தின் பெருமைக்கு அடையாளம்... ஆகாயத்தில் பகல் நேரத்தில் தோன்றியிருக்கிற அந்த ஒரே ஒரு நட்சத்திரம்!

ஒரு நாள் அந்தத் துறவி... பக்கத்திலே இருந்த ஒரு மலையின் உச்சிக்குப் போக வேண்டியிருந்தது. ஆகவே அன்று காலை நேரத்திலேயே புறப்பட்டார்.

அப்போது அந்த ஊரிலேயே இருந்த ஒரு சிறுமி - 'எங்கே போறீங்க தாத்தா?' என்று விசாரித்தாள்.

'அதோ அந்த மலை உச்சிக்குப் போறேனம்மா!' என்றார்.

''அப்படி என்றால் நானும் வருகிறேன்!' என்று அடம்பிடிக்க ஆரம்பித்தாள்.

துறவி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். கேட்கவில்லை. வேறுவழியில்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

'சரி வா...' என்று அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

இரண்டு பேரும் ஓர் ஒற்றையடிப்பாதை வழியாக மலை மீது ஏற ஆரம்பித்தார்கள் சிறிது தூரம் போயிருப்பார்கள். வெயில் அதிகம், தாகம் எடுத்தது.

'தாத்தா... தண் ணி வேணும்!' என்றாள். 'இந்தா குடி!' என்றார். 'நீங்க குடிச்சாதான் நான் குடிப்பேன்!'

என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்துவிட்டாள். துறவி தனது விரதப்படி பகல் நேரத்தில் எதுவும் சாப்பிடமாட்டார்.

'இல்லை அம்மா... இப்போ நான் விரதத்துலே இருக்கிறேன். சூரியன் உதயமான பிறகு நான் எதுவும் சாப்பிடமாட்டேன், நீ சாப்பிடு!' என்றார்.

'அதெல்லாம் முடியாது... நீங்க தண்ணீர் குடிதே ஆகணும்!' என்று சிறுமி அழுது அடம்பிடிக்கத் தொடங்கிவிட்டாள்.

துறவி என்னென்னவோ சொல்லிப் பார்க்கிறார். எதையும் அவள் கேட்கத் தயாராக இல்லை. அவருக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது, என்ன செய்வது?

ஒரு பக்கம் விரதம், இன்னொரு பக்கம் சிறுமியின் தாகம்! எது முக்கியம்? சிறிது நேரம் குழப்பம். அப்புறம் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். தண்ணீரைப் பருகினார். அதன் பிறகு சிறுமியும் தண்ணீர் குடித்தாள் அவள் தாகம் தணிந்தது.

மறுபடி அவர்கள் பயணம் தொடர்ந்தது. மேலே நடக்கத் தொடங்கினார்கள்.

துறவி தலைகுனிந்தபடியே நடந்தார். ஆகாயத்தை நிமிர்ந்து பார்க்கத் துணிவில்லை அவருக்கு.

'விரதத்தை விட்டுவிட்டோம்... எனவே, அந்த விண்மீன் இனி இருக்காது!' என்கிற முடிவுக்கு வந்துவிட்டார்.

உச்சிக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

'அப்பாடா!' என்று களைத்துப் போய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள்.

அதன் பிறகு துறவி மெல்லத் தலைநிமிர்ந்து அச்சத்தோடு ஆகாயத்தைப் பார்க்கிறார். என்ன ஆச்சரியம்?

அங்கே-

இப்போது இரண்டு விண்மீன்கள் இவருக்காக ஒளிவீசிக் கொண்டிருந்தன!.

கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 செப்ரெம்பர் 2011 திங்கட்கிழமை

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் சில

**சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலை**
ஜெ.நிறோஜி-162, அ.ஜிவிதா-151.

**நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்**
செ.தமிழ்க்குமரன்-165, ஜெ.கிருத்திகன்-155, இ.தாட்சாயினி-155.

**கிளிநொச்சி மகாவித்தியாலயம்**
ஜெ.லியான்சியா-174, இ.நிலாந்தன்-171, பா.தரணிகா-170, நி.நிலுக்ஷன்-170, ச.நகுலசேகரி-169, சி.சர்மிதா-169, க.யனுசயா-168, கு.சீனுகா-168, ப.கிருஷிகாந்-166, ஜெ.விதுசாயினி-165, தே.சஜீந்தன்-164, த.நிஷா-164, பா.கஜலக்ஸ்மனன்-164, ச.மதுஷா-162, சி.சங்கவை-160, ஜே.கவியரசன்-160, ந.கீர்த்திகா-159, ச.யுகன்- 155, ல.பிரணியா-155, சு.பவித்திரா-155, சி.அபிசா-153, சு.லவன்-152, க.பிரணவன்-152, கௌ.கனியகன்-151, ர.ஷரத்வீகன்-148, த.பவித்திரா-147.

**கிளி/புனித பற்றிமா றோ.க.வித்தியாலயம்**
ச டர்கன்-190 (மாவட்ட நிலை 01), ஜீ.இலக்ஷனா-164, ஜெ.சகானா-161, ஜெ.சிந்துஜமோகன்-153.

**உடுத்துறை மகாவித்தியாலயம் தாளையடி**
சி.சரணியா-176, இ.நிறைமதி-157, க.விதுஷா-151.

**வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்**
பி.பிறின்சிகா-161, கி.ஜனார்த்தன்-154.

**காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி**
சு.புயலிசை-178, சி.ரகுராமன்-165, கி.காருன்யன்-155, ச.லக்ஷசன்-155, செ.நாகதீபா-154, சி.திலக்ஸ்சி-153.

**கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்**
இ.நிமல்-172, அ.ஜசிந்தினி-165, பா.சிவராசினி-162, கி.கீர்த்திகா-158, ஏ.கோபிநாத்-154.

**வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை**
கி.சிந்துஜன்-161,ஜெ.விதுர்சனா-158.

**சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்**
அ.பிரணவரூபன்-155.

**மெய்கண்டான் வித்தியாலயம்**
இ.ஜனனி-156



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 26 மாணவர்களும் அதிபர், ஆசிரியர்களுடன் . (ம)

# நீண்ட இடைவெளியில் கிடைத்துள்ள வெற்றி



வலி.வடக்கு, செப்.19

கடந்த பல வருடஇடைவெளியின் பின்னர் காங்கேசன்துறை நடேஸ்வராக் கனிஷ்ட வித்தியாலய மாணவி தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளார்.

இன்பராசா மதிஸ்ரா என்ற மாணவியே இவ்வாறு சித்தி அடைந்துள்ளார்.

இந்த மாணவி இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-86)

# பின் தங்கிய பிரதேச எழுத்தறிவை மேம்படுத்த வேண்டியது அவசியம்

## யாழ்.மேலதிக அரச அதிபர் உரை

யாழ்ப்பாணம், செப்.19

பின்தங்கிய பிரதேசங்களில் எழுத்தறிவை மேம்படுத்த வேண்டியது அவசியம். மனிதனின் வாழ்க்கைப் படிநிலையில் எழுத்தறிவு இன்றியமையாதது.

இவ்வாறு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி.ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

சிறுவர் உரிமைகளுக்கான பரிந்துரைத்தல் வலையமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச எழுத்தறிவு தின நிகழ்வுகள் யாழ்.கலைத்தூது கலையகத்தில் அமைப்பின் தலைவர் ரி.யசோதரன் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தாவது:

இந்த எழுத்தறிவு தினம் போன்ற நிகழ்வுகள் இனிவரும் காலங்களில் பின்தங்கிய பிரதேசங்களில் நடத்தவுள்ளோம்.

மாணவர்கள் எழுத்றிவு தினத்தின் முக்கியத்துவத்தை உணரவேண்டும்.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரையில் கல்வி அறிவு என்பது எல் லோராலும் விரும்பத்தக்கதாக உள்ளது.

யாழ்.மாவட்ட எழுத்தறிவு வீதம் 90 வீதமாகவே உள்ளது.


மிகுதி 10 வீதம் எழுத்தறிவு குறைந்த நிலைமையையே காட்டுகின்றது. அந்தக் குறையை இல்லாது செய்ய வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் இந்த எழுத்தறிவு என்பது குறைவாகவே உள்ளது.

எனவே இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.- என்றார்.

(ம-319)

# மன்னார் மாவட்டத்தில் 3 இடங்களை பெற்றது சித்தி விநாயகர்



தற்போது வெளியாகியுள்ள தரம் 5 பெறுபேறுகளில் மன்னார் மாவட்டத்தில் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி முதலாம், இரண்டாம், நான்காம் இடங்களைப் பெற்றுள்ளது.

இந்தப் பாடசாலையைச் சேர்ந்த மோகன்குமார் அன்ரனி ஜினோசன் 188 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தவராஜா யுவிதா 186 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் கேதீஸ்வரன் கரிகரன் 182 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இதே வேளை இந்தப் பாடசாலையில் 12 மாணவர்கள் இந்த முறை சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-601)

# தீவக வலயத்தில் முதலிடம்



யாழ்ப்பாணம்,செப்.19

''எனது பாடசாலை அதிபர் இ.சிறிதரன் மற்றும் வகுப்பாசிரியை செல்வி பி.தனயந்தி ஆகியோரின் விடா முயற்சியே என்னை தீவகவலயத்தில் முதன் நிலை மாணவனாக சித்தி யடைய வைத்தது'' என்று தரம் 5 புல மைப் பரிசிலில் 181 புள்ளிகளைப் பெற்று தீவக வலயத்தில் முதலிடம் பெற்றகாரை நகர் ஊரி-அ.மி.த.க பாடசாலை மாணவன் சுதாகரன் விதுஷன் கூறுகிறார்.

''நான் கல்வி கற்பதற்காக தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்லவில்லை. அவ்வாறு சென்று கற்பதற்கும் வசதி இல்லை. எனினும் பாடசாலையில் மேலதிக வகுப்புகளை அதிபரும், வகுப்பாசிரியரும் நடத்தினர். அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டேன்'' என்று அந்த மாணவன் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-250)

# கற்றலில் பிள்ளைகளின் ஆர்வம் சாதனையை நிலைநாட்டக் காரணம்

## காரைநகர் ஊரி அ.மி.த.க.அதிபர்

காரைநகர், செப்.19

பெற்றோரின் ஒத்துழைப்பும் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டிலும் காட்டிவரும் ஆர்வமே 152 வருட கால பாடசாலை வரலாற்றில் பாடசாலை சாதனை நிலைநாட்டக் காரணமாக அமைந்தது.

இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் ஊரி அ.மி.த.க பாடசாலை அதிபர் சி.சிறிதரன். கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தீவக வலயத்தில் முதன்னிலை மாணவனாகவும் ஊரி அ.மி.த.க பாடசாலை வரலாற்றில் முதற்தடவையாக புலமைப் பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவன் சுதாகரன் விதுஷனைப் பாராட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் இ.சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன், காரைநகர் பிரதேச சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ்.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவனைப் பாராட்டிப் பரிசில் வழங்கினர்.

இந்த நிகழ்வில் அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

பெற்றோர்கள், பிள்ளைகள் மீது காட்டும் அக்கறையே மாணவர்கள் கல்வியில் உயர்வதற்கும் ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்தி போதிப்பதற்கும் காரணமாக அமைகின்றது. கடந்த எட்டு வருடங்களுக்கு முன் இந்தப் பாடசாலையை மீள ஆரம்பித்தபோது மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள இந்தப் பாடசாலைக்கு வர மாணவர்களும் ஆசிரியர்களும் தயக்கம் காட்டினர். இங்குள்ளபெற்றோர்கள்காட்டிய ஒத்துழைப்பால் பாடசாலை வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளது.

எமது மாணவர்கள் பலர் வலய மட்ட மற்றும் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளை நாட்டி வருவது மகிழ்வைத் தருகின்றது. பெற்றோர்களும், அதிகாரிகளும், பாடசாலைச்சமூகமும் இந்தப் பாடசாலை மீது அதிக அக்கறை காட்டினால் இந்தப் பாடசாலையின் கல்வித்தரத்தை மேலும் அதிகரிக்க முடியும்.- என்றார். (ம-250)

# யாழ்ற்ரன் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

காரைநகர், செப்.19

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபராக வேலுப்பிள்ளை முருகமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ற்ரன் கல்லூரி, அதிபராகக் கடமையாற்றிய தி.சோமசேகரம் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்து கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் மகாவித்தியாலயத்தின் பிரதி அதிபராகக் கடமையாற்றிய வே.முருகமூர்த்தி யாழ்ற்ரன் கல்லூரி அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (ம-250)

# சித்திரப் போட்டியில் முதலிடம்

காரைநகர், செப்.19

மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான சித்திரப் போட்டியில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 4 மாணவன் செல்வன் ரமேஸ் சுயுவண்ணன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய தரம் 5 மாணவி செல்வி இராசேந்திரம் ஜனனி சித்திரப் போட்டியில் ஐந்தாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஆளும் கட்சிக்கே எமது ஆதரவு

## முடிவில் மாற்றமில்லை என்கிறார் ம.ம.மு.தலைவி

நுவரெலியா, செப். 19

நடைபெறவுள்ள கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர்களையே ஆதரிப்பது என்ற ம.ம.முன்னணியின் நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவி திருமதி சாந்தினிதேவி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

மலையகத்தில் பிரதான தொழிற்சங்கமாகவும், தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகவும் இயங்கி வருகின்ற நாம், தோட்டத் தொழிலாளர்களின் நலனில் காட்டும் அதே அக்கறையையும், ஈடுபாட்டையும் கொழும்பில் வாழும் தமிழ் மக்களின் நலனிலும் காட்ட வேண்டிய பொறுப்பில் உள்ளோம். நடைபெறும் எல்லாத் தேர்தல்களிலும் ம.ம .மு. ஒரு பக்கம் தனது சக்தியை வெளிக் காட்டுவதாகவும், மறு பக்கம் மக்களின் சமூகத்தின் நலன்களுக்கு அழுத்தம் கொடுக்கவும், இன்னொரு பக்கம் நாம் யாரை எதற்காக ஆதரிக்கின்றோம் என்பதிலும் தெளிவு டன் இருந்தே வந்திருக்கின்றோம்.

எந்த ஒரு தேர்தலையும் வெறுமனே வாக்குத் தேடும் களமாகவோ அல்லது சந்தர்ப்பவாத எதிர்பார்ப்புகளுடனோ ம.ம.மு. சந்தித்தது இல்லை. இதன் காரணமாகவேதான் நாம் இன்னும் தெளிவான கொள்கையுடைய அமைப்பாக இயங்கி வருகின்றோம்.

எந்தவொரு தேர்தலிலாவது நாம் எமது சொந்தச் சின்னத்தில் போட்டியிட்டாலும் கூட ஆளும் கட்சியுடனான நல்லுறவுடனும், புரிந்துணர்வுடனும் தான் போட்டியிட்டுள்ளோம். இதன் மூலமாக எமது சமூகத்திற்காக நிறையவே சேவையாற்றியும் உள்ளோம்.

இதன் அடிப்படையிலேயே இந்த முறையும் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ம.ம.மு. ஆளும்கட்சி வேட்பாளர்களை ஆதரிப்பது என்று முடிவெடுத்துள்ளது. - என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# இந்தியா- இலங்கைக் கடற்படைகளின் போர்ப்பயிற்சி இன்று முதல் திருமலையில்

இந்திய- இலங்கைக் கடற்படைகள் திருகோணமலைக் கடற்பரப்பில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் போர்ப் பயிற்சி ஒன்றில் ஈடுபடவுள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தப் போர்ப் பயிற்சி கொழும்புடனான இராஜதந்திர, இராணுவ நெருக்கத்தின் ஓர் அங்கமாகவே இடம்பெறவுள்ளது.

இந்தக்கூட்டுப் போர்ப் பயிற்சி ஆறு நாள்கள் நடைபெறவுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சியில் இரு நாடுகளினதும் கடற்படைகள் சார்பில் குறைந்தது தலா நான்கு போர்க்கப்பல்கள் பங்கேற்கவுள்ளன.

இலங்கைக் கடற்படையுடன் ஏற்கனவே இந்தியக் கடற்படை போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டபோதும், இது அவற்றை விட சற்றுப் பெரியளவிலானது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கான இலங்கைப் படையினருக்கு கடந்த பல ஆண்டுகளாக இந்தியா, பல்வேறு பயிற்சி நிலையங்களில் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பதை முறியடிக்க ஆயுதம் மற்றும் இராணுவப் பயிற்சி, புலனாய்வு பகிர்வு, கூட்டுக் கடல்ரோந்து போன்ற நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபட்டுள்ளதாகவும் ரைம்ஸ் ஒவ் இந்திய பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (ச)

# மிளகுச் செய்கை 44 ஹெக்ரயர் மேட்டு நிலத்தில்

தியத்தலாவை, செப். 19

மொனராகலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 44 ஹெக்ரயர் மேட்டு நிலத்தில் மிளகு பயிரிடுவதற்கு இலங்கை ஏற்றுமதி அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்த மாவட்டத்தில் மேட்டு நிலங்களில் மிளகு ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் பிபிலை, மெதகம, நன்னப்புராவ, மடல்கும்புர, மொனராகலை, மடுல்ல போன்ற கிராமங்களில் காணிகள் அடையாளமிடப்பட்டுள்ளன.

இந்தத்திட்டத்தின்கீழ் இந்தப்பகுதிகளிலுள்ள மிளகு உற்பத்தியாளர்களுக்கு இலவசமாக மிளகு நாற்றுகள் மற்றும் உரவகைகள் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (ச)



கண்டியில் தீயணைப்பதற்கான ஒத்திகை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த ஒத்திகையை தீ அணைப்புப் பிரிவினர் சுமார் 30 நிமிடங்கள் வரையில் மேற்கொண்டனர்.

# சிறைக் கைதிகள் தினம்; மட்டு.கைதிகள் விடுதலை

மட்டக்களப்பு, செப்.19

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 13 பேர் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

சிறைக்கைதிகள் தினம் கடந்த 12 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இந்தநிலையில் இந்தத் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சிறுகுற்றங்களுக்காகத் தண்டனை அனுபவித்து வந்த கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 13 பேர் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். இந்தப் 13 பேருக்கும் போக்குவரத்து கொடுப்பனவு வழங்கி மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் கிச்சிறி பண்டார, பிரதான சிறையதிகாரியான எஸ்.இந்திரகுமார், சிறைச்சாலை அதிகாரி ஆர்.மோகனதாஸ் ஆகியோர் தத்தம் வீடுகளுக்கு அனுப்பிவைத்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மட்டு நகரில் 21 வருடங்களின் பின் மக்கள் பாவனைக்கு வீதித் திறப்பு

மட்டக்களப்பு,செப்.19

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு 21 வருடங்களுக்கு மேலாக பொலிஸாரினால் மூடப்பட்டிருந்த மட்டக்களப்பு லேடி மனிங் றைவ் வீதி நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த வீதியைக் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதிலும், அண்மையில் ஏற்பட்ட மர்ம மனிதர்கள் பிரச்சினையால் இந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்குச் சென்ற பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோனிடம், லேடிமனிங் றைவ் வீதியை மக்கள் பாவனைக்காக திறந்துவிடுமாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா வேண்டுகோள் விடுத்தார். இதனையடுத்தே இந்த வீதி மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. (ச)

# திருமலையில் நூறு வீடுகள் நிர்மாணம்

மூதூர், செப்.19

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை கிளை ஐ.எவ்.ஆர்.சி. செஞ்சிலுவை செம்பிறைச் சங்கத்தின் சம்மேளன நிதி ஒதுக் கீட்டில் நூறு வீடுகளை நிர்மாணித்து வருகிறது.

மூதூர், கந்தளாய், பதவி சிரிபுர ஆகிய பகுதிகளில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வீடும் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியானது. பயனாளிகளின் மேலதிக ஒத்துழைப்பைக் கொண்டே இந்த வீடுகள் அமைக்கப்படுகின்றன என்று நிறைவேற்று உத்தியோகத்தர் வ.சந்திரகுமார் அறிவித்துள்ளார்.

திருகோணமலையில் 10 பாடசாலைகளுக்கு மலசல கூடங்களும், மாகாணக் கல்விப்பணிப்பாளரின் சிபார்சுக்கமைவாக தலா முப்பதாயிரம் ரூபா பெறுமதியான திருத்த வேலை அல்லது புதிய கட்டடம் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# தேயிலைச் செடியைப் பாதிக்கும் வட்டப்புழு

நுவரெலியா,செப்.19

தேயிலைச் செடியைப் பாதிக்கும் ஒருவகை வட்டப் புழுக்கள் காலி மாவட்டத்தில் தீவிரமாகப் பரவி வருவதாக இரத்தினபுரி தேயிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட செடிகளில் கொழுந்து அறுவடை மிகவும் வீழ்ச்சி அடைவதாகவும் பூக்களும் காய்களும் அதிகமாக உருவாகுவதாகவும் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய் அதிகமாகப் பரவியுள்ள கோரலேகம பகுதிக்குச் சென்ற இரத்தினபுரி தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட தேயிலை ஒன்றை வேரோடு பிடுங்கி மேலதிக ஆராய்ச்சிக்காக எடுத்துச் சென்றனர்.

வெவ்வேறு இடங்களில் இருந்து எடுத்துவரப்படும் தேயிலை நாற்றுக்கள் மற்றும் மண்மூலம் இந்த நோய் பரவுவதாக சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு இந்த அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

# மூங்கிலாற்றைக் கடப்பதற்கு பாலமின்றித் தவிக்கும் மக்கள்



மட்டக்களப்பு,செப்.19

மட்டக்களப்பு மாவட்டத்தின் ராணமடு, 16ஆம் கொலனி பகுதியிலுள்ள மூங்கில் ஆற்றினைக் கடந்து செல்வதற்கான பாலம் இல்லாமையால் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக இந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு, போரை தீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட இந்த மூங்கில் ஆற்றினைக் கடந்து செல்லும் வகையில் 1965ஆம் ஆண்டு பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அது காலப் போக்கில் அழிவடைந்து போயுள்ளது.

பின்னர் 1970ஆம் ஆண்டளவில் இந்த இடத்தில் பாலமொன்றை நிர்மாணிப்பதற்கான அத்திபாரங்கள் இடப்பட்ட போதும் இன்று வரை பாலம் அமைக்கப்படவில்லை.

16ஆம் கொலனியினையும் மாலையர்கட்டு பகுதியினையும் ஊடறுத்துச் செல்லும் இந்த ஆற்றினை இணைக்கும் வகையில் பாலமொன்று அமைக்கப்படுமாயின் இந்தப்பகுதியில் நெற்செய்கையில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான விவசாயிகளும் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, மூங்கில் ஆற்றினைக் கடக்கும் வகையில் பாலமொன்றினை அமைத்துக் கொடுப்பதற்கு இந்தப்பிரதேச அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்.ம
# பேக்கரி உரிமை
# 20 ஆவது ஆண்டு நிறைவு எ

## அருள் ஆசிச் செய்தி



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் இன்று தனது 20ஆவது ஆண்டு நிறைவை அடைந்திருப்பதையிட்டு மகிழ்வடைந்தோம். மக்களின் தேவைகளில் மிக முக்கியமான உணவு.இத் தேவையை பூர்த்திசெய்யும் வகையில் இது முக்கிய இடத்தை வகிக்கிறது. சுவையும் சுத்தமும் போசாக்கும் கொண்ட இடை நேர உணவுகளை மக்களின் தேவைகளை நிறைவுசெய்யும் பணியில் 20 ஆண்டுகள் நிறைவான சேவையையும் ஆற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது. வரப்போகிற காலங்களும் சுத்தமானதும் சுகாதாரமும் போசாக்குள்ள உணவுகளைத் தயாரித்து வழங்குவதில் முன்னிலை வகிப்பதற்கும் இறையருள் கிடைப்பதாகவும் இப்பணியில் ஈடுபட்டிருக்கும் தலைவர், செயலாளர் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

## வெறுமனே வியாபார நோக்கம் இல்லாது மக்கள் பணியாகச் செயற்படுகிறது



யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தனது 20 ஆவது வருட நிறைவை பூர்த்தி செய்கின்ற அதேவேளை இதனை ஆவணப் படுத்தும் வகையில் வெளியிடுகின்ற விசேட மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.வர்த்தகத்துறை சார்ந்த நிறுவனங்களாக செயற்பட்டு வருகின்ற பேக்கரிகள் எமது மக்களின் அத்தியாவசிய உணவுத்தேவைகளுக்கு தம்மால் இயன்ற பங்களிப்புக்களை வழங்கி வருகின்றன. குறிப்பாக யாழ் மாவட்டத்தில் கடந்த காலங் களில் ஏற்பட்டிருந்த அசாதாரணச் சூழ்நிலைகளின் போது எமது மக்களின் உணவுத் தேவையினை தம்மால் இயன்ற வகையில் பேக்கரிகள் பூர்த்தி செய்துள்ளமையை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.வெறுமனே வியாபார நோக்கத்தை மாத்திரம் கொண்டிராமல் மக்களின் பணியாகவும் கருதி யாழ். மாவட்ட பேக்கரிகள் பல செயற்பட்டு வருகின்றமை குறித்து எமது மக்கள் சார்பாக எனது நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரம் தொடர்ந்தும் இந்தக் கடமைப்பாட்டினை பேக்கரி உரிமையாளர்கள் கடைப் பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தனது 20 ஆவது வருடத்தை பூர்த்தி செய்கின்ற யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இந்த மலர் தயாரிப்பில் உழைத்துள்ள அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள் கின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா(நா.உ) செயலாளர் நாயகம் ஈ.பி.டி.பி
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர், இணைத்தலைவர்-யாழ் தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு.

## ஒன்றுபட வேண்டுகின்றேன்



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் வருடம் தோறும் தமது அளப்பெரிய சேவையை நினைவு கூறும் வகையில் ஆண்டு விழாவை இதய சுத்தியுடன் கொண்டாடி வருவது கண்டு நான் பெரும் மகிழ்ச்சி யடைகின்றேன். ஆண்டுதோறும் இந்த விழா இடம்பெற்று வருவது இந்த நிறுவனத்தின் விளைதிறனை பயனாளிகள், மற்றும் அனைவருக்கும் எடுத்தியம்புவதாக அமைவதும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூரத்தக்கதும் பெருமைக்குரியதாக நான் கருதுகின்றேன். அந்த வகையில் இந்த வருடமும் 20 ஆவது நிறைவு விழாவை கொண்டாட இருப்பதையிட்டு எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நான் பெருமையடைகின்றேன்.

1990 ஆம் ஆண்டு உருவாக்கம் பெற்ற இந்தச் சங்கம் பல்வகையிலும் வளர்ச்சி கண்டுள்ளது. மாவட்டத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் அங்கத்தவர்கள் அனைவரது அயராத உழைப்பினால் இந்தச் சங்கம் உருவாக்கப்பட்டது மிக சிறந்த அம்சம் ஆகும். இவர்கள் அனைவரதும் அளப்பரிய சேவையை நாம் என்றென்றும் மறந்து விட முடியாது. சிறந்த உற்பத்திகளை தயாரித்து, பயனாளிகள் தேவைகளை பூர்த்தி செய்வதில் இந்தச் சங்கம் முன்னணியிலிருந்து வந்ததை அனைவரும் அறிவர். இது இவ்வாறு இருக்க தற்போது இந்தச் சங்கம் இரண்டாக இயங்குவதை நினைக்கும் போது வேதனை தருகிறது. ஓர் அணியின் கீழ் இயங்கி மக்களுக்கு சேவை செய்து புகழின் விளிம்பில் நின்று நிலைத்த இந்த நிறுவனம் இவ்வாறான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமே.

எனவே தயவு கூர்ந்து இந்த நிலையை மாற்றியமைத்து ஒரு கொடியின் கீழ் அணியாக திரண்டு இந்த நிறுவனத்தை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை இதயசுத்தியுடன் இந்த நாளில் முன்வைக்க விரும்புகின்றேன். முன்னாள் மாவட்டத் தலைவர் என்ற வகையில் இந்த அன்பான வேண்டுகோள் முன்வைக்கப்படுகிறது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை கோரிக்கையாக எடுத்து விடாமல் எனது அன்பு கட்டளையாக ஏற்றுக் கொண்டு செயற் படுவீர்கள் என்று நம்புகின்றேன்.எல்லாம் வல்ல இறைவனுடைய ஆசி வேண்டி எனது நல் வாழ்த்துகளைச் சமர்ப்பித்து எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

த.சிவசுப்பிரமணியம், முன்னாள் மாவட்ட தலைவர்,
யாழ்.மாவட்டபேக்கரி உரிமையாளர் சங்கம்.

**விளம்பர அனுசரணை:**
**யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் மைந்தர்கள்.**

## மாவட்டத் தலைவரின் உள்ளத்திலிருந்து



1991ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 19 ஆம் திகதி அமைக்கப்பட்ட எமது சங்கம் இன்று ஆல விருட்சமாய் வளர்ந்து இரு தசாப்தங்களை அடைந்து புதுப்பொலிவுடன் விளங்குகின்றது பல்வேறுபட்ட துன்ப துயரங்களுக்கு மத்தியில் எமது மக்களின் அடிப்படைத் தேவைகளில் பாண் மிகவும் இன்றியமையாததாக அமைந்தது. அந்தவேளைகளில் எல்லாம் எமது சங்கமானது '' மக்கள் சேவையே மகேசன் சேவை'' என மனம் கொண்டு செயற்பட்டது. அவ்வாறு செயற்பட்டதனால் எமது சங்கம் 20 ஆண்டுகள் கடந்து வெற்றிக்கொடி கட்டி நிற்கின்றது.

எமது சங்கத்தின் நிதியில் ஒரு பகுதியை எமது சபையின் அனுமதியோடு சமூக சேவைகளுக்கும் வழங்கி வருகின்றோம். பல்வேறுபட்ட சமூகதேவைகளில் பயன்படும் எமது நிதியானது மக்களுடையதே. ஆகவே எமக்கு வரும் இலாபத்தில் ஒரு பகுதியை பயன்படுத்துவதையிட்டு எமது சபை மகிழ்கின்றது.

இவ்வாறான பல்வேறுபட்ட வழிகளில் செயற்பட்டு உயர்ந்து நிற்கும் சங்கத்துக்கு நான் தலைவராக இருப்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

இச்சங்கமானது அங்கத்தவர்களின் நலன்கருதி கடன் வசதிகளையும் கழிவுகளையும் காலத்துக்கு ஏற்ப வழங்கிவருகின்றது. அனைத்து அங்கத்தவர்களும் சங்கத்தை தமது குடும்பம் போல் நினைத்து தேவையான ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்க மென்மேலும் சங்கம் வளர உழைக்க வேண்டும் என வேண்டி எல்லாம் வல்ல இறைவனை பணிந்து நிறைவு செய்கின்றேன்.

இ.பேரின்பநாயகம்
மாவட்டத் தலைவர்,
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

## வங்கிச் சமூகத்தின் பாராட்டு

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்(JDMBA) தமது இருபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு எமது வங்கிச் சமூகம் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், மேலும் மேலும் தரமான தயாரிப்புக்களை மக்கள் சமூகத்துக்கு தொடர்ந்து வழங்கி நிலைத்திருக்க வேண்டும் என இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

திரு.த.தேவராஜன் ,
சிரேஷ்ட முகாமையாளர், கொமர்ஷல் வங்கி,யாழ்ப்பாணம்.

## பணிசிறக்க வாழ்த்துகின்றேன்

20 ஆண்டினை பூர்த்தி செய்து பெரு வளர்ச்சி கண்ட எமது யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தை வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

யாழ்.மாவட்டத்தினை பொறுத்தவரையில் இரு தசாப்த காலங்களிலும் பல்வேறு பட்ட இன்னல்கள், இடர்கள் வந்த போதும் அவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து அதனை ஒரு சவாலாக ஏற்று தனது அங்கத்தவர்களினது பூரண ஒத்துழைப்புடன் செயற்பட்டு யாழ்.குடா நாட்டு மக்களுக்கு நியாயமான விலையில் எமது தரமான உற்பத்திப் பொருளினை மூலப் பொருளாக கொண்டு தமது உற்ப பொருள்களை தேவைக்கேற்ப வழங்கிய அதேவேளை எமது அங்கத்தவர்களினதும்வளர்ச்சியில பெரும் பங்காற்றி இன்று வரை வளர்ச்சிப் பாதையினை நோக்கி நகர்ந்து அனைவரினதும் பாராட்டினைப் பெற்று அப்பணியில் திறம்பட ஈடுபட்டு கொண்டிருக்கும் சங்கம் 20 ஆம் ஆண்டை தொட்டு நிற்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எனது வாழ்த்தினை தெரிவிப்பதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்ததை இட்டு பெருமகிழ்வு அடைவதோடு சங்கத்தின் இந்த இரு தசாப்த கால பயணத்தில் சங்க செயற்பாடுகளை பொறுப்பேற்று வழி நடத்திய, வழிநடத்திக் கொண்டிருக்கும் தலைவர்கள், செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களையும் வாழ்த்துவதோடு இனிவரும் காலங்களிலும் இதே போன்று தங்களது பணி மேன்மேலும் வளர்ச்சி பெற்று யாழ்.குடாநாட்டு மக்களுக்கு தங்களின் அரிய சேவையினை வழங்க வாழ்த்துதோடு, தொடர்ந்தும் உங்களின் வளர்ச்சியில் ஒரு பங்காளர்களாக இருப்போம் என்ற நம்பிக்கையுடன் நிறைவு செய்கிறேன்.

இராதாகிருஸ்ணன் செந்தில்,
Field Sales Manager, Prima (Ceylon) LTD.

## எமது பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை மகிழ்வித்து...

நான் இந்த செய்தியை தங்கள் சங்கத்தின் தலைவர், செயலாளர், பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு தசாப்த காலமாக தங்கள் சங்கம் செய்த சேவைகள் அளப்பரியன. பிறிமா நிறுவனத்தின் கோதுமை மாவினை அங்கத்தவர்களுக்கு வழங்கி அதன் மூலம் தரமான பேக்கரி உற்பத்தி பொருள்கள் தயாரித்து தரம் வாய்ந்த பொருள்களை நுகர்வோருக்கு வழங்கி அவர்களின் ஆதரவினை பெற்றுக் கொண்டதனை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.உங்கள் பணி மேலும் தொடர்ந்து எமது பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை மகிழ்வித்து மேலும் முன்னேற்றம் காண்பீர்கள்.மீண்டும் எமது நன்றிகள் கூறிக்கொண்டு தங்கள் சங்கத்தின் இருபது வருட அளப்பரிய சேவையை வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் எனது ஆதரவு, ஒத்துழைப்புக்கள் எமது நிறுவனத்தின் மூலம் கிடைக்கும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

அன்றா டவுசன், விற்பனை சந்தைப்படுத்தல் கட்டுப்பாட்டாளர்,
பிறிமா சிலோன் லிமிட்டெட்.

## அங்கத்தவர் சார்பில்



எமது சங்கமானது கடந்த 20 ஆண்டுகளாக பல இன்னல்களுக்கு மத்தியிலும் குடா நாட்டு மக்களுக்கு மனநிறைவுடன் சேவையாற்றியுள்ளது. குறிப்பாக கடந்த 2006 குடாநாட்டு மக்கள் எதிர் நோக்கிய உணவுத் தட்டுப்பாட்டின் போது மக்களுக்கு நிறைவான சேவையை எமது அனைத்து பேக்கரி உரிமையாளர்களும் திறம்பட செய்துள்ளனர்.

இதேபோன்று இனிவரும் காலங்களிலும் எமது சங்கம் மேன்மேலும் சேவையாற்றி மக்கள் மத்தியில் நன்மதிப்பை பேண வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

சோ.பிரபாகரன், அம்மன் பேக்கரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ழ்.மாவட்ட
# ...மையாளர் சங்கம்
# ...வு விழாச் சிறப்புமலர் 19.09.2011

## உள்ளம் நிறைவோடு நன்றி கூறுகிறேன்



எங்களது சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு எம்மால் வெளியிடப்பட்ட மேற்படி நினைவு மலருக்கு தங்களது பொன்னான நேரத்தை ஒதுக்கி எமது சங்கத்தினதும் நிர்வாகத்தினதும் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களினதும் சிறப்பை மேன்மைப்படுத்தி தங்களது கருத்துக்கள் மூலம் எமக்கு மேன்மேலும் உத்வேகம் கொண்டு ஆசி கூறிய மதகுருமார்களுக்கும் எம் பணி தொடர வாழ்த்துக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் மற்றும் எமது உற்பத்தி மூலப் பொருளான கோதுமை மா உற்பத்தி நிறுவனத்தினருக்கும் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் வங்கி முகாமையாளர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எமது சங்கத்தின் சார்பாக எனது இதய பூர்வமான நன்றியைக் கூறி விளைவதுடன், மேற்படி எமது சங்கமானது 1991 ஆம் ஆண்டு அப்போது திட்டப் பணிப்பாளராக இருந்த பத்மநாதன் அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது எமது பிரதேசத்தில் கோதுமை மாவுக்கான தட்டுப்பாடு நிலவிய காரணத்தால் அன்றைய நிலைமையில் மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான உணவை சீரான விலையில் சகலருக்கும் கிடைக்கச் செய்வதே குறிக்கோளாக கொண்டு எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் கடந்த 20 ஆண்டுகளில் எமது மாவட்ட அரச அதிபரினதும் விலைக் கட்டுப்பாட்டு பகுதியினரதும் அறிவுறுத்தல்களை ஏற்று எமது இலாபத்தினை மட்டும் கருதாது செயறபட்டு வருகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது அங்கத்தவர்களாகிய பேக்கரி உரிமையாளர்கள் நிர்ணய விலையை மீறியது கிடையாது. எமது சங்கமானது அங்கத்தவர்களின் வளர்ச்சியிலும் நுகர்வோர்களினது திருப்தியிலும் அதிக அக்கறை காட்டியதோடு, சிறிய அளவிலான சமூக சேவையிலும் ஈடுபட்டு வருகிறது.

குறிப்பாக தரைவழிப்பாதை தடைப்பட்ட 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது சங்கமானது மாவட்ட செயலகத்துடன் இணைந்து எமது அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற உயரிய நோக்கோடு எமது வருமானத்தை மட்டும் எதிர்பாராது எமக்கு இலாபமளிக்கும் பணிஸ் மற்றும் கேக் போன்றவற்றை உற்பத்தி செய்யாது அந்த இக்கட்டான காலப்பகுதியில் மக்கள் நலன் கருதி எம்மிடம் மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்ட கோதுமை மாவில் பாண் மட்டும் உற்பத்தி செய்ததன் மூலம் அந்தக் காலப்பகுதியில் மக்களின் உணவுத் தேவையின் ஒரு பகுதியை பூரத்தி செய்த மன நிறைவுடனும் அதேவேளை இலங்கை தீவினிலேயே தனது உறுப்பினர்களுக்கு உற்பத்திக்காக மூலப் பொருள்களையும் மற்றும் உப மூலப் பொருள்களையும் கடந்த 20 ஆண்டுகளாக தொடர்ந்து வழங்கி வருவது எமது சங்கம் மட்டும் என்ற பெருமையுடனும் கோதுமை மா உற்பத்தி நிறுவனமான பிறிமா சிலோன் லிமிட்டெட்டின் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர் என்ற பெருமையும் எமது யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தொடர்ந்து 09 வருடங்களை பூர்த்தி செய்துள்ளது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்வதுடன் தொடர்ந்து எமது சங்கமும் அங்கத்தவர்களும் மக்கள் தேவைக்கு முன்னுரிமை கொடுத்து சட்டதிட்டங்களை ஏற்று சேவை செய்ய காத்திருக்கிறது. மேலும் எமது சங்கத்திலிருந்து விலகி நிற்கும் அனைவரையும் ஒரு கொடியின் கீழ் இணைந்து செயலாற்ற வருமாறு இந்த வேளையில் இருகரம் கூப்பி வரவேற்கிறேன். மேலும் எமது செயற்பாட்டுக்கு துணை நின்ற பணியாளர்களுக் கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றேன் அனைவரும் ஒன்றிணைவதன் மூலம் எமது எண்ணங்கள் விரைவில் நிறைவேற்ற இறையருள் வேண்டி மீண்டும் யாவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

கா.பாஸ்கரன், மாவட்ட செயலாளர்,
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

## பேக்கரி உரிமையாளர்களுக்கும், நுகர்வோருக்கும் ஆற்றிவரும் அளப்பரிய சேவையானது புகழத்தக்க அரும் பெரும் செயலாகும்



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த பத்து வருட கால கோதுமை மாவின் விற்பனையோடு நெருங்கிய தொடர்பை பேணி வந்துள்ளவன் என்ற வகையில் இந்தச் சங்கம் யாழ்.மாட்டத்தில் ஒரு விருட்சமாக திகழ்ந்து பேக்கரி உரிமையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் ஆற்றிவரும் அளப்பரிய சேவையானது புகழத்தக்க அரும்பெரும் செயல் ஆகும். கோதுமை மாவினை அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் உங்கள் சங்கத்தின் மீது நாம் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளோம். மேலும் நீங்கள் தொடர்ந்து உங்கள் நுகர்வோரையும் விற்பனையாளர்களையும் பராமரித்து முன்மாதிரி கையாளும் வகையில் தொண்டு செய்வீர்கள் என நம்புகின்றேன்.

நாங்களும் உங்களது எல்லா எதிர்கால முயற்சிகளிலும் வளர்ச்சியிலும் பணிபுரிந்து உண்மையாக உழைப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த காலங்களில் பல சிக்கல்களுக்கு மத்தியிலும் ஒழுங்கான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அதனூடாக பேக்கரியாளர்களுக்கு மாவினை பகிர்ந்தளித்து உயர்ந்த தரத்தில் பேக்கரி பொருள்களை பாவனையாளர்களுக்கு வழங்கி திருப்திப்படுத்தியுள்ளீர்கள்.

எனவே யாழ்.குடாநாட்டில் உங்கள் சேவைக்கு தொடர்ந்து எமது ஆதரவும், ஒத்துழைப்பும் என்றும் இருக்கும் என்பதோடு சங்கத்துக்கும், சங்க அங்கத்தவர்களுக்கும் உங்கள் எதிர்காலம் சுபீட்ச மானதாகவும், ஒளி மயமானதாகவும் அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அப்துல்காதர்,
விற்பனை சந்தைப்படுத்தல் கட்டுப்பாட்டாளர்,
செரண்டிப் மா கம்பனி.

## சிறந்த வாடிக்கையாளர்கள்



எமது மக்கள் வங்கிக் கிளையின் சிறப்பான வாடிக்கையாளர்களுக்குள் ஒன்றாகத் திகழ்ந்த, திகழ்ந்து கொண்டிருக்கின்ற யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடை கிறேன். எமது மக்கள் வங்கிக் கிளையில் 1997ஆம் ஆண்டிலிருந்து கணக்கினைப் பராமரித்து வருகின்ற இந்தச் சங்கமானது எமது சிறந்த வாடிக்கையாளர்களுள் ஒன்றாகச் சிறப்பாகப் பராமரித்து வருவதுடன், தன்னு டைய உறுப்பினர்களுக்கு உன்னத சேவையை வழங்கித் தனக்கென ஒரு சிறப்பான இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

தனது இருபதாவது ஆண்டின் நிறைவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கின்ற இந்தச் சங்கமானது மேன்மேலும் வளர்ந்து தன்னு டைய மகத்தான சேவையால் உறுப்பினர்க ளுக்கும், மக்களுக்கும் பணிசெய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மு.சிவசுப்பிரமணியம், முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிரதானவீதி.

## ஆயரின் ஆசிச் செய்தி



''அடுத்தவருடைய நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் செயறபட்டு அவர்களுக்கு உகந்தவர்களாக வாழுங்கள்(உரோ.15:2)'' என்ற இறை வார்த்தைக்கு அமைய கடந்த 20 வருடகாலமாக எமது யாழ். மாவட்டத்திலேயே மக்கள் சேவையை இலக்காக கொண்டு செயற்படும் யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கமானது தனது பணியில் 20 வருடங்களை வெற்றியோடு பூர்த்தி செய்யும் இந்த மகிழ்வான நேரத்தில் நானும் உங்களுடன் இணைந்து மகிழ்கின்றேன். மக்களின் அவசிய உணவுகளை குறிப்பாக எல்லோரும் தம் உணவாக நம்பிக்கையுடன் உட்கொள்ளும் பாண் உணவினை எமது பேக்கரிகள் உற்பத்தி செய்கின்றன. காலத்துக்கு காலம் பல உணவுகளை மக்களின் தேவைகளோடு சேர்த்து உற்பத்தி செய்து வழங்கும் உங்கள் சேவை பாராட்டுக்குரியது.கடந்த போர் காலங்களிலும் பல கஷ்டங்கள் மத்தியிலும் எல்லா பேக்கரி உரிமையாளர்களும் ஒரு சங்கத்தின் கீழ் ஒன்றித்து உழைத்து எம் மக்களின் பசி போக்க உழைத்துள்ளீர்கள்.

இனிவரும் நாள்களில் உங்கள் சேவை மேன்மேலும் எல்லா மக்களினதும் நலன்கருதி எல்லோரும் அடிப்படை உண்டிகளை பெற்றுக்கொள்ளும் முறையில் திட்ட மிட்ட நற்சேவையை இன்றுபோல் தொடர்ந்தும் வழங்க பேக்கரி உரிமையாளர் சங்க ஒவ்வொரு அங்கத்தவர்களையும் வாழ்த்தி இறை ஆசி வேண்டி நிற்கின்றேன்.

மேதகு.இ.தோமஸ் சவுந்தரநாயகம் யாழ்.ஆயர்.

## பேக்கரி உரிமையாளர்களின் தொழில் உற்பத்திக்கு உரமாக விளங்கியமை



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர்களின் தொழிற் சிறப்புக்கு உரமாக விளைந்த பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் வளர்ச்சி கண்டு பெரு மகிழ்வடைகிறேன்.அதன் இருபது ஆண்டுகள் சேவையும் அதனால் யாழ் மாவட்டம் பெற்ற பயன்களும் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்நாளில் மீள நினைவுறுத்தப்படுவதை வரவேற்கிறேன்.

மேலும் தொடரும் நாள்களில் முகிழ்க்கும் பணிகளில் சங்கம் எமது மக்களின் தேவையையும் சங்கத்தின் சிறப்பையும் என்றும்போல் மேம்படுத்தி உழைக்கும் என நம்புகின்றேன். நாமும் நமது மக்களும் உரிமையுடன் உலவுகின்ற எமது வாழ்வுக்காக ஒன்றிணைந்து உழைக்க உறுதியுடன் முன் நடப்போம்.சங்கம் 20 ஆவது ஆண்டு நிறைவில் நினைவாக வெளியிடும் விழா மலருக்கு யாழ்.மகன் என்ற உரிமையுடன் யாழ்.மாவட் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் செய்தி வழங்குவதில் உவப்படைகின்றேன்.சங்கம் தனது செயற்பாடுகளால் சிறப்புற்றுயரவும் சங்கத்தின் உயிர்ப்புறு சொத்தாக வெளிவரும் ஆண்டு மலர் மிளிரவும் வாழ்த்துகின்றேன்.

ஈ.சரவணபவன்(நா.உ) உதயன் நிர்வாகப் பணிப்பாளர்.

## சகல மக்களும் ஏற்றத்தாழ்வு இன்றி பேக்கரி பொருள்களை பெற்றனர்



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தனது இருபதாம் ஆண்டு நிறைவினைப் பூர்த்தி செய்தமையையும் அதனையிட்டு மலர்வெளியீடு செய்வதனையும் இட்டு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்.மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் தரைவழிப்பாதை தடைப்பட்டிருந்த காலப்பகுதியில் மாவட்ட செயலகத்தினால் கப்பல் மூலம் பொருள்கள் தருவிக்கப்பட்ட பொழுது யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தனது அங்கத் தவர்களுக்கு தேவையான கோதுமை மாவினையும், இதர பாண் உற்பத்திப் பொருள் களினையும் உரிய முறையில் பெற்று சீரான முறையில் வழங்கிய பணி சிறப்பானதாகும். யாழ்.மாவட்ட செயலகத்தினால் ஒவ்வொரு காலப்பகுதியிலும் பாணுக்கும், ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருள்களுக்கும் விலையினை நிர்ணயிக்கும் பொழுது அந்த விலை மாற்றத்தினை ஏற்று யாழ்.மாவட்டத்தில் பாணுக்கான சீரான விலையினை உடனுக்குடன் நடைமுறைப்படுத்தியமை சிறப்பானதாகும். மேலும் யாழ் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பேக்கரிகளை உள்ளடக்கி இந்தச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளமையால் அதில் அங்கத்துவம் பெறும் ஒவ்வொரு பேக்கரியும் அதனை தொழிலாக கொண்டு இயங்கும் குடும்பங்களும் நன்மை அடையும் அதேவேளை யாழ்.மாவட்டத்திலுள்ள சகல மக்களும் ஏற்றத்தாழவற்ற விலையில் பேக்கரி உற்பத்தி பொருள்களை கொள்வனவு செய்யக் கூடியதாக இருக் கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.தற்போதும் பாண், பேக்கறி உற்பத்தி பொருள்களையும் மாவட்ட மட்டத்தில் சிறந்த தரத்திலும் அதேவேளை ஒரே விலையிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய சூழல் நிலைத்திருப்பது பாராட்டத்தக்கது. யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் மென்மேலும் வளர்ச்சி அடைந்து யாழ்.மாவட்ட மக்களுக்கு மேலும் பல சேவைகளை ஆற்ற வேண்டும் என்றும் வாழ்த்துக் கூறுகின்றேன். ம.பிரதீபன், திட்டப்பணிப்பாளர்,
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## மக்களுக்காற்றிய பங்கு மகத்தானது



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் யாழ்.மாவட்ட மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்தி செயவதில் பெரும் பங்காற்றி வருகின்றது. குறிப்பாக அனர்த்த காலப்பகுதிகளில் இக்கட்டான சூழ்நிலைகளிலும் இச்சங்கம் மக்களுக்காற்றிய பங்கு மிகவும் மகத்தானது.ஏ 9 பாதை மூடப்பட்டிருந்த காலப்பகுதிகளில் கோதுமை மா போன்ற உற் பத்திப் பொருள்களை இச் சங்கம் கப்பல் மூலம் பெற்று யாழ்.மாவட்டத்தில் உள்ள பேக்கரி உரிமையாளர்களுக்கு விநியோகம் செய்து சிறப்பாக செயலாற்றியமை நினைவுகூரத்தக்கது.மேலும் யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் 20 ஆண்டினை நிறைவு செய்து இம் மலரினை வெளியி டுவதை யிட்டு மகிழ்ச்சியடை வதுடன் யாழ்.மாவட்ட மக்களுக்காற்றிய சேவைகளுக்கு வாழ்த்துத் தெரிவித்து மேன் மேலும் சிறப்புற சேவையாற்ற இறையாசீயையும் வேண்டி நிற்கின்றேன்.

திருமதி ரூபினி வரதலிங்கம், மேலதிக அரச அதிபர், யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்களின் ஆடைகளில் ஏன் இந்த மாற்றமோ?



தமிழ்ச் சமூகத்தின் பண்பாடுகளையும் கலாசாரங்களை யும் உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருந்தவர்கள் யாழ்ப்பாணத்து மக்களே. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத் துத் தமிழ்ப் பெண்கள் என்றே குறிப்பிடலாம். தமிழர்களின் முழு உருவமாய் விளங்கியவர்கள் அவர்கள். உயிருக்காக வாழாது சரித்திரத்துக்காவும், மானத்துக்காகவும் வாழ்ந்தவர்கள் இந்தப் பெண்கள். ஆனால் தற்காலத்தில் இந்தப் பெண் களின் பண்பாடு சிதறிச் சின்னா பின்னமாகிக் கொண்டிருப் பது கவலைக்குரிய விடயமாகும்.

இன்றைய இளமைப் பருவத்துப் பெண்கள் மேலைத் தேய நாடுகளைப் போல உடையணிவதையும் அந்த நாட்டுப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதையுமே நாகரிகம் என நினைத்து தமிழ்ப் பண்பாட்டைச் சிதைத்து வருவது வருந்தத் தக்கது. எல்லாப் பெண்களும் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்று கூறமுடியாது. ஆனால் சில பெண்கள் முற்று முழுதாகவே வெளிநாட்டு மோகத்துக்குள் சிக்கிச் சீரழிந்து வருவதை இன்று கண்கூடாகவே காணமுடிகிறது.

எமது ஆரம்பகாலச் சமுதாயக் கட்டமைப்பு முறையில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றங்களே இதற்குக் காரணம் எனலாம். தமிழர்களின் ஆரம்பகாலக் குடும்பக் கட்டமைப்பில் இளையவர்களை வழி நடத்து வதற்கு தாத்தா, பாட்டி மற்றும் குடும்பப் பெரியவர்கள் இருந்தார்கள். அவர்கள் தமது சமூகத்தின் கலாசாரங்களையும் பண்பாடுகளையும் அடிக் கடி கூறிக்கொண்டே இருப்பார்கள். குறிப்பாகப் பெண்கள் விடயத்தில் இன்னும் தீவிர அக்கறையெடுத்து அவர்களை வழி நடத்துவார்கள். இதன் காரணமாக அந்தக் கால இளம் பருவத்தினர் திசை திருப்பப்படுவது குறைவாக இருந்தது.

ஆனால் தற்காலத்தில் வீட்டில் நடைபெறும் விசேட நிகழ்வுகளின் போது கூடக் குடும்பத்தில் உள்ள அனைவரையும் ஒரே இடத்தில் காண்பது அரிது. அதுமட்டுமன்றி இன்றைய இளம் சமுதாயத்தினர் அமைதி பேணுதல், கீழ்ப்படிதல் போன்ற பண்புகளை சுதந்திரத்துக்கான கட்டுப்பாடுகள் எனக் கருதுகின்றனர். இதன் காரணமாகத் தாய் தந்தையரும் தமது மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளப் பிள்ளை களிடம் அதிகம் பேச மறுக்கின்றனர். இதனால் ஏற்படுகின்ற உச்சக்கட்ட விளைவை யாழ்ப்பாண சமூகத்தில் காணமுடிகிறது. சில குடும்பங் களில் பிள்ளைகளின் தவறுகளுக்குக் காரணம் பெற்றோர்களாகவும் இருக்கின்றனர். கலாசாரத்தைப் பேணும் ஆடைகளை அணிந்து வந்த தாய்மார் கூட ஆங்கிலக் கலாசாரத்துக்கு மயங்கியுள்ளனர். யாழ்ப்பாணப் பெண்கள் தற்போது அணியும் ஆடைகளின் மாற்றத்துக்குக் கார ணம் என்ன வென்றே புரியவில்லை. ஆதிகால மனிதன் தன்மானத்தைக் காக்க ஆடை அணிந்தான். பின்னர் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப அணிந்தான். ஆனால் இன்றைய பெண்கள் இறுக்கமான, ஆண்கள் அணிவது போன்ற ஆடைகளை அணிய வேண்டியதன் அவசியம் தான் என்ன? இங்கு வெய்யிலுக்குப் பதிலாகப் பனி பொழியத் தொடங்கிவிட்டதோ என்று கூட எண்ணத்தோன்றுகிறது. அந்தவகையில் எதற்காக ஆடை அணிகிறார்கள் என்ற அர்த்தமே இன்றி ஆடை யணியும் சில பெண்களை என்னவென்று கூறுவது?

## அன்புக் கரங்கொண்டு அள்ளியெடு....



பெண்மை அது மென்மை - நாம்
அதைப் பேணி காக்கும் வரை!!
பெண்மை அது வன்மை - நாம்
அதைச் சோதித்துப் பார்க்கும் வரை!!
பெண்மை அது வெறுமை - என
பிள்ளைகளற்ற தாயின் கூற்றை
உண்மை அல்ல ஒருபோதும் என
உரைத்திடவே யாம் வந்தோம்!!
பெண்மைக்குண்டு தாய்மை
அவள் பிறப்பனிலே!!
உண்மைக்கண்டு நாமும்
அதைப் போற்றிடுவோம்!!
பெற்றவருக்கு அவரவர் ...
பிள்ளைகள் மட்டும் தான்!!
உன் தாய்மைக்குச் சவாலாய்...
மொட்டுகள் வந்து முட்டும் பார்!!
பாசத்திற்காய் ஏங்கித் தவிக்கும்...
நெஞ்சங்கள் பல கோடி!!
அன்புக் கரங்கொண்டு அள்ளி...
அணைத்திடவே சென்றிடுவாய் நாடி!!
இனி உனக்கில்லை வெறுமை!!
எட்டிப் பறந்திடும் உன் தனிமை!!
அதைப் போக்க வந்த பெருமை!!
இனிப் போற்றப்படும் உன் தாய்மை!!

# பெண்கள் வேலைக்குச் சென்றால் என்ன...?




பொருளாதாரம் பற்றிய சிந்தனை, அது பற்றிய பயம் மிகைத்துக் காணப்படும் காலத் தில் நாம் வாழ்கிறோம். பெண் கள் வீட்டோடு இருந்தால் போதும் என்று கடந்த காலத்தில் நினைத் தவர்கள் பேசியவர்கள் எல்லாம் இன்று தமது நிலையை மாற்றிக் கொண்டு குடும்பத்துக்கு உழைக்க எனது இரண்டு கைகள் மட்டும் போதாது; குறைந்த பட்சம் மனை வியின் ஒரு கையாவது வேண் டும் என்று கேட்கும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

உழைப்பதற்கு ஆண்களும் செலவு செய்வதற்குப் பெண்க ளும் என்பது கடந்த காலங்க ளில், விஞ்ஞான, கல்வி, பொரு ளாதாரம் வளர்ச்சி பெறாத கால கட்டங் களில் வேண்டுமா னால் சரியாக இருக்கலாம். ஆனால் இன் றைய நிலையில் அது சாத்திய மில்லை என்பதை பெண்கள் வேலைக்குப் போகாத குடும்பங்கள் நிரூபித்துக் கொண்டி ருக்கின்றன. இவ்வாறு இல்லாமல் கணவன் மட்டுமே உழைக்க வேண்டும் என்று முடிவு செய்தால் அந்தச் சுமையை எல்லா ஆண்களாலும் சுமக்க முடி யுமா? என்பது கேள்விக்குறியே. எனவே பொருளாதார சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மனைவிமார்கள் தாங்களாக விரும்பி உழைக்க முன் வந்தால் அதைத் தடுக் கும் உரிமை யாருக்கும் இல்லை. மனைவியர்கள் விளை நிலத்துக்கு ஒப்பானவர்கள்.விளை நிலம் என்பதே ஒரு பொருளாதாரக் குறியீடாகும்.எனவே மனைவி முறை யான வழியில் உழைக்க விரும்பினால் கணவன் அனுமதிக் கலாம். பெண்கள் உழைக்க, வேலை செய்யத் தடையில்லை என்றாலும் வேலை, செய்யப்படும் இடம் இவற்றைப் பொறுத்து சில விதிகளைப் பெண்கள் கடைப் பிடிக்க வேண்டும். பெண்கள் பலரும் சேர்ந்து செய்யக் கூடிய பொது வான வேலை களைப் பெண்கள் தேர்ந்தெடுக் கலாம். மருத்துவப் பணி, ஆசிரியைப் பணி, ஓவியப்பணி, விவசாயம், தையற்கலை, விமானப் பணிப்பெண் கள், விற் பனையா ளர்கள் போன்ற வேலைகளில் தங்களுக்குத் தகுதி யானவற்றைப் பெண்கள் தேர்ந் தெடுத் துக்கொள்ளலாம்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

# பெண்களின் எதிர்காலத்துக்கு கல்வி மிகவும் அவசியம்



குடும்ப வளர்ச்சிக் குப் பெண் கல்வி மிகவும் அவசியம். எனவே, பெண்கள் அனைவரும் கல்வி அறிவு பெற வேண் டும். பெண் குழந் தைகள் பிறந்தால், அதைச் சுமையாகக் கருதாமல், ஆரோக் கியமாக வளர்த்து, படிக்க வைக்க வேண்டும். பெண்கள் படிக்கும் போது விழிப் புணர்வு ஏற்படும். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் பெண்கள் இருப்பார்கள் என்பது மாறித் தற்போது அனைத்து இடங்களிலும் பெண்களே முன்னணியில் உள்ளனர். கலங்கரை விளக்கைப் போன்றவர்கள் பெண்கள். அந்த விளக்கு வெளிச்சம் தந்தால் குடும்பம் பிரகாசிக்கும். குடும்பம் முன்னேறினால், கிராமம் முன்னேறும்; கிராமம் முன்னேறினால் நாடு முன்னேறும். அதுமட்டுமன்றி இன்றைய காலகட்டத்தில்பெண்கள் பல்வேறு வழிகளிலும் ஏமாற்றப்பட்டுத் துன்பப்பட்டுக் கொண்டிருகிறார்கள். இத் தகைய பெண்களுக்கு அவர்கள் கற்கும் கல்வி துடுப்பாக அமையும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. எத்தனை துன்பம் வந்தபோதிலும் கற்ற கல்வியும் அதன் மூலம் கிடைத்த கௌரவமும் உழைப்பும் மிகுதி வாழ்க்கையை நம்பிக்கையுடன் கழிக்கக் கூடிய திடத்தினை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக் கிறது. இன்னும் கல்வி கற்ற பெண்களின் அதிகரிப்பு நாட்டின் முன்னேற்றத்துக்கும் வழி வகுக்கும். கல்வியறிவு பெற்ற தமிழ் உணர்வு கொண்ட தமிழ்ப் பெண்களால்தான் நாடு முன்னேறும் என்ற கருத்தைப் பாரதிதாசன் அன்றே வலியுறுத்தியுள்ளார். இவற்றைக் கருத்திற் கொண்டு பெண் கல்வியை ஒவ்வொரு பெற்றோரும் ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாகத் தங்களுடைய பெண் குழந்தைகளைப் புறக்கணிக் காமல் ஆண்களுக்கு நிகரா கக் கல்வியில் சிறந்தவர்களாக உருவாக்கி விடவேண்டும். இது அவர்களது எதிர்காலத்துக்கு மட்டுமன்றி நாட்டின் முன்னேற்றத் துக்கும் வழிவகுக்கும் என்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவச்சாலையாகத் திகழ்ந்துவரும் யாழ். சிவதொண்டன் நிலையம்

ஆன்மிக ரீதியான பணிகளை முன்னெடுத்துவரும் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தின் ஆரம்ப பகாலத்தில் இருந்து சிவராத்திரி விரதம் முறையாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அடியவர்களின் எண்ணிக் கைகள் அதிகரிக்க வீடு, பாடசாலை, பொது இடங்கள், கோயில்கள் போன்ற இடங் களிலும் சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்பட்டது.

சிவராத்திரி விரதத்தின் மகிமையை எடுத்தியம்பும் நோக்குடன் தை, மாசி ஆகிய மாதங்களில் சிவராத்திரி விரதம் தொடர்பான தகவல்கள் அதனை எவ்வாறு அனுஷ்டிப்பது - அதனால் கிடைக்கும் பலாபலன்கள், அதன் வரலாறு, முக்கியத்துவம் தொடன்பான பல்வேறு தகவல்கள் அடங்கிய இதழ்கள் சிவதொண்டன் நிலை யத்தினால் வெளியிடப்பட்டு வருகின்றன.

சிவராத்திரி விரதமானது சிவதொண்டர் நிலையத்தில் இடம்பெறும் விழாக்களில் முதன்மையாது. சிவனை கடவுளாகப் பூசிக்கும் இந்த விரதத்தை சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த அடியார்கள் விரதம் இருப்பார்கள்.



அத்துடன் இந்த விரதத்தை முன்னிலைப்படுத்தி சிவதொண்டன் நிலையத்தின் ஆண்டு விழாவும் சிவராத்திரி விரதத்துடனே கொண்டாடப்படும் வழக்கமும் உள்ளது.

இது தற்போதும் நடைமுறைப்படுத் தப் படுகின்றது. சிவனுக்காகக் கொண்டாடப்படும் சிவ ராத்திரி விரதம் சிவதொண்டன் நிலையத்தினால் மாத சிவராத்திரிகளாகவும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் சிவ தொண்டன் நிலையத்தினால் பங்குனி மாதம் இரண்டாவது திங்கட் கிழமையில் ''திருவடிப் பூசை'' தினமும் - நவம்பர் மாதம் நான்காம் திகதியில் கால்கோள் விழாவும், மார்கழி மாதம் ''ஆருத்திரா அபிடேகம்'' எனும் விழாக்கள் சிவதொண்டன் நிலையத்தினால் அனுஷ்டிக்கப்படும் வேறு விழாக்களாகவும் உள்ளன.

யாழ்ப்பாணத்தின் சைவ மரபில் உதித்த யோக சுவா மிகளின் வழி காட்டலால் இத்தகைய விழாக்கள் யாவும் முன்னிலைப்படுத்தி இடம் பெற்று வருகின்றன.

யோக சுவாமிகள் இயற்றிய நற்சிந்தனைப்பாடல்கள் யாவும் உயர்ந்த தத்துவக் கருத்துக்களைக் கொண்டு அமைந்துள்ளமையால் விழாக்களும் விசேட பூசைகளிலும் யோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் பாடப்பட்டுவருகின்றன.

சிவதொண்டன் நிலையத்தில் யோக சுவாமிகளின் திருவடிகள் முன்பாக இத்தகைய நற்சிந்தனைகள் பாடப் படுவதுடன் ''விவேக சூடாமணி'' போன்ற ஞான நூல்கள் வாசிக்கப்ப டும் வழக்கமும் உள்ளது.

இத்தகைய ஞான நூல்கள் வாசிக்கப் படும் போது அது தொடர்பான விளக்கங்கள், கருத்துக்கள் என்பன விரிவாகக் கூறப்படும்.

ஞான நூல் போதனை என் பது யோக சுவாமிகள் கற்றுக் கொடுத்த பாடம் என்பதால் இதனை சிவதொண்டன் நிலையம் வழக்கமாகக் கொண்டு விட்டது. சிவதொண்டன் நிலையத் தைச் சேர்ந்த அடியவர்கள் அதிகமா னோர் நூல்களைப் பற்றி மிகவும் தெளிவாக அறிந்திருப்பவர்கள் என்பதால் இதனை போதிப்பதும் தொண்டர்களுக்கு இலகுவாக உள்ளது. செந்தமிழ் மொழியில் சமயக் குரவர்கள், சந்தான குரவர்கள். அருளிய தோத்திரங்கள், சாத்திரங்கள் யாவும் வேத சிவகாமங்களின் சாரமாய் அமைந்துள்ள மையினாலும் இவர்களின் தேவாரப் பதியங்களும் சிவ தொண்டன் நிலையத்தில் போதிக்கப்பட்டுவருகின்றன.

மிகவும் பக்தியுடனும் மன அமைதியுடனும் இத்தகைய பதிகங்கள் ஓதும் போது அது ஓர் எழில் ஞான பூசையாக அமைந்துவிட வேண்டும் என் பதே எதிர்பார்ப்பாகும். இதனால் மிகவும் ஆர்வத்து டன் பதிகங்கங்கள் ஓதப்படுவதால் இத்த கைய ஞான நூல் வகுப்புகள் உற்சாகத் துடன் இடம்பெறும்.

இத்தககைய வகுப்புகளை ஊக்குவிக் கும் பொருட்டே சிவதொண்டன் நிலையத்தில் ஒரு நூல் நிலையம் அமைக்கப்பட்டது. நூல் நிலையத்தில் இந்து சமயம் சார்ந்த அனைத்து பதிகங்கள் உள்ளதால் அதனை வாசிக்கும் அடியார்கள் மனங்களில் நற்சிந்தனைகளும், இறை பக்தியும் உண்டாக வாய்ப்பாக அமைந்தது.

இத்தகைய அரும்பணியை ஆற்றி வரும் சிவதொண்டன் நிலையம் வார இறுதி நாள்களில் இது தொடர்பான வகுப் புக்களை நடத்தி இன்னும் அடியார்களை இன்பத்தில் ஆழ்த்தி வருகின்றது. பூசைகள், விழாக்கள், சிந்தாந்த வகுப்புகள், ஞான நூல்கள் போதனை போன் றன சிவதொண்டன் வழங்கும் பணியாக உள்ளதால் சிவதொண்டன் நிலையம் ஒரு தவச்சாலையாகவும் விளங்குகின்றது.

### சோபனா

இந்த தவச்சாலையில் இடை விடாத வழிபாடு, எப்போதும் அமைதியுடன் கூடிய இறை சிந்தனை, இடைவிடாத தியானம் போன்றன தொண்டர்கள் மனதில் குடிகொண்டிருப்ப தால், சிவனுக்கு வழங்கும் தொண்டாக சிவதொண்டன் நிலையம் தனது சேவையை வழங்குகின்றது.

இவ்வாறு தன்னையறியத் தவமியற்று வோரை தாயைப் போல் ஆதரிக்கும் முகமாகவும் கண்டிப்பான ஒழுங்கு முறையுடனும் சிவதொண்டன் நிலையத்தினால் அடியவர்களுக்கு சேவைகள் நிறைவேற் றப்படுகின்றன. ''சிவதொண்டனைச் செம்மையாக நடத்துங்கள். முடியாவிட்டால் உடைத்துக் கொட்டிவிட்டுச் சும்மாயி ருங்கள் ஒரு நட் டமும் இல்லை'' என சுவாமி கூறிய வாசகமும் இந்த நிலையத்துக்கு ஓர் அச்சாணியாக உள்ளது. சிவ தொண்டன் நிலையத் தோற் றத்துடன் சிவ தொண்டன் நிர்வா கம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

(தொடரும்)


## மு/விசுவமடு மகா வித்தியாலயம்

விசுவமடு முல்லைத்தீவு

### பழைய மாணவர் சங்கக் கூட்டம்

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமானது இன்று 19.09.2011 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்குப் பாடசாலை அதிபர் திரு வி.ஸ்ரீகரன் தலைமையில் நடைபெற இருக்கிறது. இதில் புதிய அங்கத்தவர் தெரிவும் பிறவிடயங்களும் ஆராயப்பட இருக்கின்றன. இந்தக் கூட்டத்துக்கு பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது பிரதேச காரியாலயத்துக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

1. வரவேற்பாளர் (பெண்) -1
2. எழுதுவினைஞர் (பெண்) -1
3. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - 1
   (மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் கட்டாயம்)
4. இரவுக் காவலாளி - 1

விண்ணப்பதாரிகள் நாளை (20.09.2011) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்கு நேரில் வரவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

தொ.பே:
021 228 0065
021 228 0066

**உதயன் பணிமனை**
கரடிப்போக்கு சந்தி அருகில்,
ஏ-9 வீதி, கிளிநொச்சி.

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அந்தோனிப்பிள்ளை
அல்பிரட் யோகராஜா
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆண்டுகள் பல போனதே? அப்பா
ஆறவில்லை எம் காயம்
இன்றுவரை நம்ப முடியவில்லை - நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர் என்று
வாழ்ந்திடும் காலமெல்லாம் - நாம்
மறப்போமா உம் முகத்தை
வருந்தி நாம் அழைக்கின்றோம் - எம்முடன்
திரும்பவும் வந்து சேர்ந்திடுவீர்

தோற்றம்: 08.12.1948
மறைவு: 19.09.2000

பிரிவால் துயருறும் :
அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

2, இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 30.11.1954
உதிர்வு: 03.10.2007

அமரர் கந்தப்பிள்ளை
இராசரத்தினம்
(பலாலி)



கண்மூடித் திறக்குமுன்னே
நாலாண்டு சென்றதப்பா
கனிவான உங்கள்பேச்சும்
கண் கொள்ளாப் புன்னகையும்
கண் முன்னே வந்து
நிதம் எம்மை வாட்டுதப்பா
கடைசி மட்டும் ஒன்றாக சேர்ந்திருந்து
வாழ வழி காட்டினீர்கள்
காலங்கள் உள்ளவரை எம்மனதில்
நிலைத்திருக்கும் உம் நினைவுகள்

உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை
வேண்டி நிற்கும் :
குடும்பத்தினர்

தாவளை இயற்றாலை,
கொடிகாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மக்களுக்கு வெகு விரைவில் இரணைமடு தண்ணீர் வந்து சேரும்

## நாடாளுமன்றில் அமைச்சர் தினேஷ் அறிவிப்பு

கொழும்பு,செப்.19

யாழ்.மாவட்ட மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு இப்போது நிறைவேறப் போகின்றது. என்றுமே கிடைக்காது என்று கருதிய கிளிநொச்சி இரணைமடு தண்ணீர் வெகுவிரைவில் யாழ். மக்க ளுக்கும் வந்து சேரவுள்ளது. இதற்கென அரசு 2100 கோடி ரூபாவை செலவிடவுள்ளது.

இதற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியை கூறுகின்றார் ஆளும் கட்சிக் கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன.

ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் யாழ்ப்பாணம்- கிளிநொச்சி மக்களின் குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தொடர்பாக நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு அவர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் மேற்குறிப்பிட்ட செயற்றிட்டம் தொடர்பான கடன் ஒப்பந்தம் ஒன்று கைசாத்திடப்பட்டுள்ளது.

இதன்மூலம் 90 மில்லியன் அமெரிக்க டொலர் பெறப்படும்.

இரணைமடு - யாழ்ப்பாண குடி தண்ணீர் திட்டத்துக்கு மொத்த செலவினம் 164.04 மில்லியன் அமெரிக்க டொலர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் பெற்ற 90 மில்லியன் அமெரிக்க டொலர் நீங்கலாக எஞ்சிய தொகையை இலங்கை அரசும் பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனமும் செலவிடவுள்ளன.

இந்தத் திட்டம் பூர்த்தியடையும்போது மூன்று லட்சம் பேருக்கு நல்ல குடிதண்ணீர் வசதிகளையும் 80 ஆயிரம் குடும்பங்களுக்கு மலசலகூட வடிகால் அமைப்புக்கான நீரையும் பெறமுடியும்.

இதன்மூலம் பளை, பூநகரி, யாழ்ப்பாணம், கொடிகாமம், கரவெட்டி, சாவகச்சேரி, நாவற்குழி, கோப்பாய், அச்சுவேலி, சண்டிலிப்பாய், கட்டுடை, நவாலி, சங்கானை, நல்லூர், மூளாய், அராலி, வட்டுக்கோட்டை, காரைநகர், ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்கள் பயன் அடைவர்.

இவற்றைக் கூறும் போது அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஜனாதிபதி பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் பற்றியும் குறிப்பிடத் தவறவில்லை.

அதாவது வடக்கை அபிவிருத்தி செய்யும் தனது திட்டத்தின் கீழ் எந்தவிதமான தங்கு தடையும் இன்றி செயற்படுத்தப்பட வேண்டும் என்ப தில் ஜனாதிபதி உறுதியாகவே இருக்கிறார்.

இப்படியான நல்ல விடயங்கள் தொடர்பாகக் கூறும்போது கூட்டமைப்பினர் இந்தச் சபையில் இருந்து பாராட்ட வேண்டும்.

ஆனால் சபையில் இருந்த ஒரே உறுப்பினரான யோகேஸ்வரனும் சபையில் காணப்படவில்லை - என்றார்.

(ஒ-02)



யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மரநடுகை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ.வே. மணிவாசகர் மரக்கன்றுகளை நட்டுவைக்கின்றார்.

## மிருகங்களை வெட்டினால் கையை வெட்டுவேன்

### மேர்வின் அதிரடி

"எனது கண் முன்னால் மிருகங்களைக் கொன்றால் அதனைக் கொல்ல வந்தவனின் கையை வெட்டுவேன்." இவ்வாறு அதிரடியாகத் தெரிவித்திருக்கிறார். பொதுசனத் தொடர்பாடல்கள் அமைச்சர் மேர்வின் சில்வா. களனி தர்மாசோக்க வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எல்லா வகையான சத் துக்களையும் தரும் கோமாத[illegible]வைக்கொல்வது சரிதானா? கம்பஹா மாவட்டத்தில் மாடுகள் வெட்டப்படுவதை முற்றாக நிறுத்துவேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


நான்காவது பிறந்த தின வாழ்த்துகள்




அரவிந்தன் - ஜீவசரண்யா தம்பதியரின்
அருந்தவப் புதல்வன்
"அஜீசன்"

அகவை நான்கில் காலடி பதிக்கும் இன்றைய நாளில் "அஜீசன்" நோய் நொடிகள் ஏதும் இன்றி வளர்ந்து, கல்வியில் உயர்வடைந்து தீர்க்காயுளுடன் என்றும் சிரஞ்சீவியாக, ஆருயிர்த் தங்கை "மதுஷனா"வும் இனிது வாழ உறுதுணையாக நிறைந்த வாழ்வு வாழவேண்டுமென அந்தப் பரம்பொருளின் பெரும் கருணையை "குஹக்கிரகா", இறைஞ்சிநிற்கும் அன்புத் தாத்(தி)தா.

கட்டுடை,
மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

ஆசிரியர் தேவை

07/10 வயதுப் பிள்ளைகளுக்கு வீட்டில் மாலை நேரம் ஆங்கிலம், கணினிப் பாடங்கள் கற்பிப்பதற்கு ஆண் அல்லது பெண் ஆசிரியர் தேவை வல்வை நகரத்துக்குள்

தொடர்பு: 0757621331



சிவபார்வதி ஜோதிட நிலையம்

பண்டித்- மஞ்சுநாத சுவாமி
தொ.பே.இல: 0778949044

வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கப் போவது யாவையும் தெரிவிப்பதுடன் பரிகாரமும் செய்து கொடுப்பார்.

Skype Contect- PARAMASHIVAN 1
SANJAYA HOTEL 414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்: காலை 7 மணிமுதல் மாலை 7.30 மணி வரை அட்டவணை 101/

வீடு விற்பனைக்கு

பயன்தரு மரங்கள்,சுற்றுமதில்ஆகியவற்றுடன் கூடிய $1\frac{1}{2}$ பரப்பளவுக் காணியில் அமைந்த புதிய வீடு கோண்டாவில் கிழக்கில் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு: 0779633993

கடைகள், காட்சியறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் (பஸ் நிலையத்துக்குச் சமீபமாக) போதிய வாகனத் தரிப்பிட வசதியுடன் 12,000 க்கு மேற்பட்ட சதுர அடிகளில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் Shopping Complex இல் வியாபார நிறுவனங்கள்,காட்சியறைகள் அமைக்க விரும்புவோர், தொடர்பு கொண்டால் அவர்களுக்குத் தேவையான அளவில் அமைத்துத் தரப்படும்.

தொடர்புகளுக்கு: 0750 476034, 0773867222
e - mail K.Kumanan @ yahoo.Com

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவன்

தேவராஜ் கிறிஸ்ரி நிதர்சன்

2011ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்தும் மம்மி (பெரியதாய்), டடா (பெரியதகப்பன்), அப்பா, அம்மா, கிறிஸ்ரி நிலுஜன் (பெரியண்ணா- சுவிஸ்), கிறிஸ்டி ஜினுஜன் (சின்னண்ணா), கிறிஸ்ரி நிரோஜன் (அண்ணா), கிறிஸ்ரி நிரோஜினி (அக்கா), மாமாமார், அத்தைமார், அன்ராமார், சித்தப்பாமார், ஆகியோர் இவரைப் பல்கலையும் பெற்று வாழ வாழ்த்துகின்றனர் அத்துடன் யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர், கற்பித்த ஆசிரிய, ஆசிரியைகள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்
கிறிஸ்ரி நிலுஜன்
(பெரியண்ணா- சுவிஸ்)

பொதிகள் அனுப்பும் துரித சேவை



- உலகில் உள்ள முன்னணி வகிக்கும் கூரியர் நிறுவனங்களூடாக உங்கள் உறவினர் நண்பர்களுக்கு பொதிகள், ஆவணங்கள் குறைந்த விலையில் விரைவாக இருப்பிடம் தேடி கொடுக்கப்படும்.
- பொதிகள் ஒப்படைக்கப்படும் போது மேலதிக கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டா.
- 5kg பொதிகளுக்கு எங்கும் இல்லாதவாறு விஷேட கழிவுகள் வழங்கப்படும்.
- கடலுணவு வகைகளுக்கு மேலதிக கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டா.
- உள்நாட்டு சேவையாக கொழும்பு, வவுனியா, திருமலை, மன்னார், கிளிநொச்சி, யாழ் போன்ற இடங்களுக்கு பொதிகள், ஆவணங்கள் இருப்பிடம் தேடி கொடுக்கப்படும்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட திருமண, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்களைச் சிறந்த முறையில் பிரிண்டிங் செய்து பெற்றுக்கொள்ள எமது காட்சியறையை நாடுங்கள்

[illegible] என்ரபிறைசஸ்
021 4922853
பருத்தித்துறை வீதி
(சங்கிலியன் சிலைக்கு அருகில்)
நல்லூர், யாழ்ப்பாணம்.
075 0738704


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனையை எதிர்த்து மாநிலம் முழுவதும் பிரசாரம்

## கொளத்தூர் மணி நாளை ஆரம்பித்து வைக்கிறார்

சென்னை, செப்.19

மரண தண்டனைக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் சார்பில் மாநிலம் தழுவிய பிரசாரம் நாளை செவ்வாய்க் கிழமை ஆம்பமாகவுள்ளது என்று அந்தக் கட்சியின் தலைவர் கொளத்தூர் மணி தெரிவித்தார்.


இதுதொடர்பாக அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்:

உலகில் மூன்றில் இரண்டு பங்கு நாடுக ளில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில், மரணதண்டனைக்கு எதிராக தன் வாழ்நாளையே அர்ப்பணித்த மகாத்மாகாந்தி வாழ்ந்த இந்த நாட்டில் இன்னமும் மரண தண்டனை இருந்து வருகிறது.

இந்தியாவில் மரண தண்டனையை நீக்கக் கோரியும், 3 தமிழர்களின் உயிர்களைக் காக்கும் வகையில் அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைக் குறைக்கக் கோரியும் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நாளை மாநிலம் தழுவிய பிரசாரம் சென்னையில் ஆரம்பமாகவுள்ளது. இந்த விழாவில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ கலந்து கொள்கிறார்.

சென்னையில் ஆரம்பமாகி காஞ்சிபுரம், விழுப் புரம், புதுச்சேரி, மயிலாடுதுறை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி, விருது நகர், திண்டுக்கல், பழனி, கரூர், சேலம், திருப் பத்தூர் வழியாக ஒரு குழு வேலூரைச் சென்றடையும். மற்றொரு குழு உடுமலைப் பேட்டையில் புறப்பட்டு கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, ஒசூர், கிருஷ்ணகிரி வழியாக வேலூரைச் சென்றடைகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்ப மாகும் பிரசாரம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை வேலூரில் முடிவடைகிறது.



இந்த பிரசாரப் பயணத்தில் பல்வேறு கட்சித் தலைவர்கள் பல்வேறு இடங்களில் கலந்து கொண்டு பேசவுள்ளனர். தப்பு இசை, பாடல்கள், விழிப்புணர்வு நாடகங்கள், உரை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெறும்.

இந்த பிரசாரப் பயணத்தை பொதுச் செயலர்கள் விடுதலை ராஜேந்திரன், கோவை ராமகிருஷ்ணன் ஆகியோர் என்னுடன், ஒருங்கிணைத்து செயற் படுத்துவார்கள் - என்றார் அவர்.

# இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவில் 55 வீடுகள்

இந்தியாவின் கங்கைகொண்டானில் இலங்கைத் தமிழர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள புதிய வீடுகளை மாவட்டச் செயலர் இரா.செல்வராஜ் நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார்.

நெல்லைக்கு அருகே உள்ள தாழையூத்து நாரணம் மாள் புரத்தில் இலங்கை அகதிகள் முகாம் அமைக்கப்பட்டு இருந்தது. இந்தக் குடியிருப்பு நாளடைவில் பழுதடைந்து மோச மான நிலைக்கு வந்தது. இதனால் அங்கு தங்கியிருந்த இலங்கைத் தமிழர்கள் பல்வேறு சிரமத்துக்கு ஆளாகி வந்தனர்.

இதையடுத்து திருநெல்வேலி சமூக சேவை சங்கம் மற்றும் சென்னை சி.ஆர்.எஸ். அமைப்புகள் சார்பில் இலங்கைத் தமிழர்களுக்கு புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்க புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக நெல்லை மாவட்டம் கங்கை கொண்டானில் இடம் தெரிவு செய்யப்பட்டது.

அந்த இடத்தில் மொத்தம் 220 வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு ரூ.2 கோடியே 20 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டது. அதன்படி கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் கட்டமாக 96 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டு பயனாளிகளுக்கு வழங் கப்பட்டது. கடந்த 2010 ஆம் ஆண்டு 69 வீடுகள் அமைக் கப்பட்டு வழங்கப்பட்டன.

இந்த நிலையில் 3 ஆவது கட்டமாக 55 புதிய வீடுகள் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள் ளன. அந்த வீடுகளை பயனாளிகளுக்கு வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற் றது. மாவட்டச் செயலர் இரா. செல்வராஜ் புதிய வீடுகளை திறந்து வைத்து பயனாளி களுக்கு வழங்கினார்.

விழாவில் திருநெல்வேலி சமூக சேவை சங்க இயக்குநர் ஜோசப் கென்னடி, மறுவாழ்வுத்துறை தாசில்தார் சரஸ்வதி, இலங் கைத் தமிழர்கள் முகாம் தலைவர்கள் கனகலிங்கம், தியாகராஜன், மயில்வாகனன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மூதாட்டியின் மூக்கில் 2 மாதங்களாக குடிகொண்டிருந்த ஏராளமான புழுக்கள்!

வயதான பெண்ணின் மூக்குக்குள் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட உயிருள்ள புழுக்களை மருத்துவர்கள் அறுவைச்சிகிச்சை செய்து அகற்றியுள்ளனர். டில்லி, பல்வால் பகுதியைச் சேர்ந்த பகவதி தேவி (வயது-75) என்பருக்கே இந்த அறுவைச் சிகிச்சை இடம்பெற்றது.

கடந்த இரண்டு மாதங்களாக இவரது முகத்தின் வலது பக்கத்தில் கடுமையான வலி இருந்தது. அதைக் கண்டுகொள்ளாமல் வலியை சகித்தபடி வாழ்ந்து வந்தார்.

சில நாள்களுக்கு பின்னர் மூக்கில் இருந்து குருதி வழியத் தொடங்கியதும் பயந்துபோய் மருத்துவமனைக்குச் சென்றார். பரீதாபாத்தில் உள்ள போர்டிஸ் எஸ்கார்ட்ஸ் மருத்துவமனை மருத்துவர்கள் இவரை மருத்துவ பரிசோதனை செய்தனர். சோதனையின் போது, தேவியின் மூக்குக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட உயிருள்ள புழுக்கள் இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந் தனர். ஒவ்வொன்றும் 10.3 செ.மீ. அளவுடையதாக இருந்தது.

இதுகுறித்து மேற்படி மருத்துவமனையின் டாக்டர் சஞ்சீவ் சாவ்லா கூறுகையில்:

தேவியின் மூக்கை 'எண்டோஸ்கொப்பி' முறை மூலம் சோதனை செய்தோம். சிறிய கமராவை மூக்குக்குள் அனுப்பி, அதில் தெரிந்த காட்சியை பெரிதாக்கிப் பார்த்தில் மூக்குக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட உயிருள்ள புழுக்கள் நெளிந்துகொண்டிருந்தன. உடனே அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து அதனை அகற்றினோம் - என்றார்.



பெரியாரின் 133ஆ வது பிறந்ததினமான நேற்று முன்தினம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, அண்ணா மேம்பாலத்தில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# மருத்துவமனையில் குண்டுவெடிப்பு

ஆக்ராவில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று முன்தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் ஆறு பேர் காயம் அடைந்தனர்.

உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவில் அமைந்துள்ள ஜெய் மருத்துவமனையில் உள்ள வரவேற்பு அறைப் பகுதியில் கதிரைகளுக்குக் கீழே வைக்கப் பட்டிருந்த வெடிகுண்டு இரவு வெடித்தது.

இந்தச்சம்பவத்தில் ஆறு பேர் காயம் அடைந்தனர். இந்த குண்டு வெடிப்பு பயங்கரவாதச் சம்பவமா அல்லது சாதாரண வெடிகுண்டுச் சம்பவமா என்பது பற்றி தற்போது எதையும் தெரி விக்க முடியவில்லை என்று ஆக்ரா பொலிஸ் ஐ.ஜி பி.கே.திவாரி தெரிவித்துள்ளார்.

ஆரம்ப கட்ட விசாரணையில் வெடித்தது நாட்டு வெடிகுண்டு என்ற தெரியவந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். பயங்கரவாதத் தடுப்புப் படையினர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளதாக மற்றொரு உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# நரேந்திர மோடிக்குப் போட்டியாக காங்கிரஸார் உண்ணாவிரதம்

அகமதாபாத், செப்.19

குஜராத் முதல்வர் நரேந்திர மோடியின் உண்ணாவிரதத்துக்குப் போட்டியாக அகமதாபாத்தில் காங்கிர ஸார் உண்ணாவிரதத்தி ஈடுபட்டுள்ளனர். இதனால், அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு பரபரப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது.

குஜராத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு நடந்த மதக் கலவரத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இஷான் ஜாப்ரி கொல்லப்பட்ட வழக்கில், முதல்வர் நரேந்திரமோடி மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்த வழக்கில் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது என்று கூறிய உச்ச நீதிமன்றம், சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கை மீது அகமதாபாத் விசாரணை நீதிமன்றமே நடவடிக்கை எடுக்கலாம் என்று உத்தரவிட்டது.

இதையடுத்து, கலவரத்தைக் காரணம் காட்டி தன் மீது சுமத்தப் பட்ட பழி நீங்கியதாக நரேந்திர மோடி கூறினார். இதைத் தொடர்ந்து, அமைதி மற்றும் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி அகமதாபாத்தில் 3 நாள் உண்ணாவிரதத்தை நேற்று முன்தினம் அவர் ஆரம்பித்தார்.

மோடியின் உண்ணாவிரதத்துக்குப் போட்டியாக, குஜராத் மாநில காங்கிரஸ் தலைவர்கள் சங்கர்சிங் வகேலா, அருண் மோத்வாடி ஆகியோர் சபர்மதி காந்தி ஆசிரமம் எதிரே நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். இதனால், அகமதாபாத்தில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. நகர் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

மோடி உண்ணாவிரதம் குறித்து வகேலா கூறுகையில்:

ஏ.சி. வளாகத்தில் ஐந்து நட்சத்திரங்களின் அந்தஸ்துடன் மோடி உண்ணாவிரதம் இருக்கிறார். இதற்காக அரச பணம் கோடிக் கணக்கில் செலவிடப்படுகிறது. குஜராத்தில் நடந்துள்ள ஊழல்களில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே மோடி உண்ணாவிரதம் இருக்கிறார். லோக் மசோதாவை செயற்படுத்த விடா மல் ஊழல் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. குஜராத் அரசுக்கு ரூ.1.3 லட்சம் கோடி கடன் உள்ளது. இதைத்தான் முன்னேற்றம் என்று பேசுகிறார்கள் - என்றார்.

சிதம்பரத்தை கிருஷ்ணராகச் சித்திரிக்கும் போஸ்டர்

# நடவடிக்கை எடுக்கக் கோரி இந்து மக்கள் கட்சி முறைப்பாடு



சென்னை, செப்.19

இந்துக் கடவுளை இழிவு படுத்தி, போஸ்டர் ஒட்டி விளம்பரம் செய்த, சிதம்பரத்தின் ஆதரவாளர்கள் மீது, நடவடிக்கை எடுக்கக் கோரி, பொலிஸ் ஆணையாளரிடம் இந்து மக்கள் கட்சியினர் முறைப்பாடு அளித்துள்ளனர்.

மத்திய உள்துறை அமைச்சர் சிதம்ப ரத்தின் பிறந்ததினம், கடந்த இரு தினங்களுக்கு முன், காங்கிரஸைச் சேர்ந்த அவரது ஆதரவாளர்களால் கொண்டாடப் பட்டது.

பிறந்ததினத்தை ஒட்டி அவரது ஆதரவாளர்கள், காங்கிரஸ் தலைமையகமான சத்தியமூர்த்தி பவனுக்கு அருகில், விளம்பரப் பதாகையை வைத்துள் ளனர். இதில், இந்துக் கடவுள் கிருஷ்ணரின் உருவப்படத்தில், சிதம்பரத்தின் படத்தைப் பொருத்தி வைத்துள்ளனர். இதற்கு, இந்து மக்கள் கட்சி சார்பில், எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போஸ்டர் வைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி, இந்து மக்கள் கட்சி மாநில அலுவலகச் செயலர் குமரவேல், சென்னை பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

அதில், ''காங்கிரஸ் அலுவலகம் முன்பாக வைக்கப்பட்டுள்ள போஸ் டர், இந்துக் கடவுள்களையும், இந்துக்களின் உணர்வையும் புண்படுத்துவது போன்றுள்ளது. விளம்பரம் செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐ.நா. கூட்டத்தில் பங்கேற்க மன்மோகன் பயணம்

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற் பதற்காக பிரதமர் மன்மோகன்சிங் நாளை மறுதினம் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார். பிரதமருடன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மத்தாய், பிரதமரின் முதன்மை செயலாளர் டி.கே.ஏ.நாயர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவும் நியூயோர்க் செல்லவுள்ளது.

ஐ.நா. கூட்டத்தில் பங்கேற்க வரும் பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் பிரதமர் மன்மோகன் சிங் இருதரப்பு பேச்சு நடத்தவுள்ளார். எனினும் அங்கு அவர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் பாகிஸ்தான் பிரதமர் கிலானி ஆகியோரை சந்திக்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் படை பலங்களுக்கு இலங்கை அரசு ஒரு போதும் அஞ்சாது

## குணதாச அமரசேகர

கொழும்பு, செப்.19

ஜெனீவாவின் தீர்மானங்களுக்கோ ஐ.நா உட்பட அமெரிக்காவின் படைப் பலங்களுக்கோ இலங்கை அரசு ஒரு போதும் அஞ்சாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமர சேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ரொபேட் ஓ பிளேக் போர்க்குற்றச் சாட்டுக்களுக்கு அடிபணியவைக்கவும், உள்நாட்டில் அதிகாரப்பகிர்வின் ஊடாக நாட்டை துண்டாடவுமே இலங்கை வந்தார். எனவே அரசு உடனடியாக பிரிவினைவாதத்துக்கு ஏதுவான காரணிகளை தேசிய அரசியலில் தடை செய்ய வேண்டும்.

இந்த நடவடிக்கைகளுக்கு அஞ்சாமல் முகம்கொடுக்க வேண்டும். பிரிவினைவாதம் சர்வதேச சூழ்ச்சிக் காரர்களின் நோக்கம் இலங்கையை துண்டாடுவதே ஆகும் நிபுணர் குழு அறிக்கை 6 மாத காலத்துக்குப் பின்னர்பேசப்படும் என்றால் அது பெரிய ஆபத்தாகவே அமையும் என்றார். (எ)

# 70 வயதைக் கடந்த கைதிகளுக்கு பொது மன்னிப்பின் கீழ் விடுதலை

## மரண தண்டனைக் கைதிகள் விதிவிலக்கு

சிறைச்சாலைகளிலுள்ள 70 வயதைக் கடந்த சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை வழங்க அவரது அனுமதி கிடைத்துள்ளது.

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளைத் தவிர ஏனையவர்களுக்கு விடுதலை வழங்கப்படும்.

சிறுகுற்றங்களுக்காக அபராதம் செலுத்தமுடியாமல் வெலிக்கடை சிறையிலிருந்து நூறு கைதிகள் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டார்கள் என்று வெலிக்கடை சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பெரியளவிலான 29 குற்றச்சாட்டுகள் தவிர்ந்த ஏனைய சிறு குற்றங்களுக்குச் சிறைவாசம் அனுபவிப்பவர்கள் அவர்கள் விடுதலையாவதற்கு ஏழு நாள்களுக்கு முன்பே விடுதலையாவதற்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவை சர்வதேச விசாரணைக்கு எதிராகப் பயன்படுத்துகிறது


## குற்றம் சாட்டுகிறது மன்னிப்புச் சபை

இலங்கை மீதான போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு எதிரான பிரசாரத்துக்கான துருப்புச்சீட்டாகக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை அரசு பயன்படுத்தி வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் சாம்ஸரிபி தெரிவித்துள்ளதாவது:

இலங்கை அரசு அமைந்துள்ள நல்லிணக்க ஆணைக்குழுவானது நம்பகமான பொறுப்புடமையான பொறி முறை எனவும் நீதியை வழங்குவதுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் முடியு மென அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் யதார்த்தத்தில் அது ஆணைத் தொகுப்பு மற்றும் நடைமுறையென ஒவ்வொரு மட்டத்திலும் குறைபாடுகளைக்கொண்டுள்ளது.

இலங்கை ஏறத்தாழ கடந்த 2 வருடங்களாக நல்லிணக்க ஆணைக் குழுவைச் சர்வதேச விசாரணைக்கு எதிரான பிரவாரத்திற்கான துருப்புச் சீட்டாகவே பயன்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)



வட்டு, வடக்கு பிரமனாச்சி தோட்ட கற்பக விநாயகர் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருகின்றார்.

# உரிமை கோரப்படாத சைக்கிள்கள் நீதிமன்றில்

உரிமை கோரப்படாத இரு சைக்கிள்கள்இல. (65962775,56028930)மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றை அடையாளம் காட்டிப் பெறுமாறு நீதிமன்றப்பதிவாளர் அறிவித்துள்ளார்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவினரால் மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்தச் சைக்கிள்களை உரிமையாளர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளமுடியும். (உ-313)

# ஏழாலை ஸ்ரீமுருகன் பாடசாலைக்கு நிதி உதவி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் பன்முகப் படுத்திய வரவு, செலவுத்திட்டத்தின் நிதியில் இருந்து ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்துக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் நூலகத்துக்கு வேண்டிய புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்காக 50 ஆயிரம் ரூபா பன்முகப்படுத்திய நிதியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியால் பாட சாலை நூலகத்துக்கு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு வேண்டிய பல்வேறு நூல்களும் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-86)


யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

**பதவி வெற்றிடம்**

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக வேலை நாள்களில் ரூபா 10 செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 03.10.2011 ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகத் தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

1. பதவி : பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)
2. பதவி இல : 165/ 88 இன் படி சம்பள குறி இல. 101/06
3. சம்பளத் திட்டம் : 66/06 இன் படி 11950-155x10-180x10-15300

4. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 7 ஆம் சம்பளத் திட்டப் பதவி ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 8 ஆம் சம்பளத்திட்டப் பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 8 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இந்த எட்டு வருடகால அனுபவத்தில் 2 வருடங்களுக்குக் குறையாமல் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவி ஒன்றில் அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இந்தப் பத்து வருடகால அனுபவத்தில் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவியில் குறைந்தது 2 வருட அனுபவம்.

5. பொது நிபந்தனைகள்

1. வயது 03.10.2011 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்குச் சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தால் விதிக்கப்படும் ரொக்கப் பிணையும் ஆதனப் பிணையும் செலுத்துதல் வேண்டும்.
4. ஆள்சேர்ப்புச் செய்யப்படுபவர் இரண்டு வருடகால தகுதி காண் அடிப்படையில் பதவியில் அமர்த்தப்படுவர்.
5. கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தும் நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
6. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிக்கப்படும்.
7. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும் இணைப்புக்களும் உண்மையானதும் செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு, ஏதோனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்ட ஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதைத் தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தலைவர்



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

பிராந்திய காரியாலயம்

கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

**கேள்வி அறிவித்தல்**

கேள்வி இல. O&M/RM/JAF/KILI/2011/179

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டத்துக்கான பரந்தன் நீர்த்தாங்கி கோபுரம் போர்க்கால சூழலினால் இடிந்து விழுந்துள்ளது. அதனை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|
| இடிந்து விழுந்துள்ள பரந்தன் நீர்த்தாங்கியினை அகற்றுதல் | 3,000/- |

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும்
திகதி 2011.09.19 - 2011.10.03 மு.ப.10 மணி வரை

கேள்விப் பத்திரம் திறக்கப்படும்
திகதி 2011.10.03 காலை 10.05 மணி

குறிப்பு: பொறியியலாளரின் அறிவுறுத்தலுக்கமைய இடிபாடுகள் மற்றும் இரும்புக் கம்பிகள் தளத்திலிருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும். இடிபாடுகள் வில்சன் வீதியிலுள்ள எமது நீர்ப்பம்பி வளாகத் தினுள் கொட்டப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்குரிய கேள்விப் பத்திரங்களை சுயமாகத் தயாரித்து பூர்த்திசெய்து கடிதஉறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்ட வேலையின் கேள்விப் பத்திர இலக்கத்தை குறிப்பிட்டு பிராந்திய முகாமையாளர் (யா), பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே: 021 222 3742

பிராந்திய முகாமையாளர் (யா), பிராந்திய காரியாலயம்,
தே.நீ.வ.வ.சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

2011.09.19



**வீடு விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை , சங்கரத்தையில் 3 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு -0771950682

**மணமகன் தேவை**

முல்லை.இந்து கௌரவகுடும்பம், செவ்வாய்க் குற்றமற்ற, 28 வயது, மகநட்சத்திரம், சிங்கராசி, பொது நிறமுடைய மெல்லிய தோற்றமுடைய மணமகளுக்கு பொருத்த மான மணமகன் தேவை.

தொடர்பு: 0773105744

**வேலை ஆள்கள் தேவை**

கடை விற்பனையாளர்
பேக்கரி வேலை தெரிந்தவர்கள்

சம்பளம்நேரில்பேசித்தீர்மானிக்கப்படும்.

இடம்:றொலெக்ஸ்பேக்கரி (RolexBakeary)

தொடர்பு: 0212229402

118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

காலை -9.00 மணி முதல் மாலை 4.00 மணிக்குள் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**வேலையாள் தேவை**

மீசாலை புத்தூர் வீதி பூதவராயர் கோவிலடி சந்திக்கு அருகாமையில் அமைந்திருக்கும் எமது மின் ஒட்டுத் தொழிலகத்திற்கு முற்றும் தெரிந்த வேலையாள் தேவை. - தொடர்புகளுக்கு

T.P : 077-3456879 S.V.M நிமல்

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய்சந்திக்கும் மருதனார்மடம் சந்திக்குமிடையில் பிரதான வீதியோரமாக மூன்று கோயில் சந்திக்கருகில் உள்ள [illegible] உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: [illegible]

இராசநாயகம்-0725457989


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபிய இடைக்கால அரசு ஐ.நா. சபை அங்கீகாரம்

நியூயோர்க், செப். 19

லிபியாவின் இடைக்கால அரசுக்கு ஐ.நா. அங்கீகார மளித்துள்ளது. லிபியாவுக்கு எதிரான பொருளாதார மற்றும் இராணுவ ரீதியான தடைகளைக் களைய இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் போரால் சீரழிந்த லிபியா பொருளாதார மற்றும் அரசியல் ஒழுங்கில் மீண்டு வர முடியும்.

இதற்காக ஐ.நா. பாதுகாப்பு சபை 2009ஆம் ஆண்டுத் தீர்மாணம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. லிபிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, மனித உரிமைகளைக் காப்பது, ஜனநாயக அரசை உருவாக்குவது ஆகியவற்றுக்கான ஐ.நாவின் புதிய முயற்சிகளைப் பாதுகாப்புச் சபை முழுமையாக அங்கீகரித்தது.

193உறுப்பினர்களைக்கொண்ட ஐ.நா. பொதுக்குழுவில் கடாபி அரசை வீழ்த்திய லிபிய இடைக்கால அரசுக்கு ஐ.நாவில் இடமளிப்பதற்கு ஆதரவாக 114 வாக்குகள் கிடைத்தன. எதிராக 17 வாக்குகள் கிடைத்தன. இந்தியா இடைக்கால அரசுக்கு ஆதரவாக வாக்களித்தது.

இந்த வாக்கெடுப்பு முடிந்த சில மணி நேரங்களில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனை வரவேற்றுள்ள அமெரிக்கா, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நடவடிக்கைக்காக லிபிய மக்களைப் பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளது. பிரிட்டனும் இந்த நடவடிக்கையை வரவேற்றுள்ளது.

அதேநேரத்தில், சர்வதேச நிதியம், உலக வங்கி ஆகியன லிபிய அதிகாரிகளுடன் ஒத்துழைத்து நாட்டின் பொது நிதி மேலாண்மையை சீர்படுத்த உதவ வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

எனினும், லிபியாவின் சில பகுதிகளில் இன்னமும் சண்டை நடந்து வருவதால், தங்கள் படைகளைப் பயன்படுத்துவதற்கு நேசப் படைகளுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.

# லண்டன் ஆயுதக் கண்காட்சியில் பாகிஸ்தானின் கொத்துக்குண்டு

## அந்நாட்டு நிறுவனங்கள் வெளியேற்றம்

லண்டன், செப். 19

லண்டனில் நடந்த சர்வதேச இராணுவ தளபாட மற்றும், ஆயுத கண்காட்சியில் கொத்துக் குண்டுகளை (க்ளஷுஸ்டர் பாம்) கண்காட்சியில் வைத்ததாக பாகிஸ்தானின் இரு ஆயுத தயாரிப்பு நிறுவனங்கள் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டதால், அதன் நிறுவனங்கள் கண்காட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டன.

இராணுவ தளபாடங்கள் மற்றும் பாதுகாப்புத்துறை ஆயுதங்கள் தொடர்பான சர்வதேச கண்காட்சி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடந்து வருகிறது.

இந்தக் கண்காட்சியில் பாகிஸ்தானின் போர்க்கருவிகள் மற்றும் தளபாடங்கள் தயாரிப்பு நிறுவனம், ராணுவ பாதுகாப்பு ஏற்றுமதி அமைப்பு ஆகிய இருநிறுவனங்கள் கண்காட்சியில் கலந்து கொண்டன.

இதில் பாகிஸ்தான் 150 மி.மி தடிமன் கொண்ட கொத்துக் குண்டுகளை காட்சியில் வைத்துள்ளதாக சர்வதேச இராணுவ மற்றும் பாதுகாப்பு அமைப்பு முறைப்பாடு செய்தது.

கடந்த 2007 ஆம் ஆண்டு நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடந்த மாநாட்டில் கொத்துக்குண்டுகளை உபயோகிப்பதில்லை என பல்வேறு நாடுகள் கையெழுத்திட்டிருந்தன.

இதனை பாகிஸ்தான் மீறியுள்ளதாக கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து கண்காட்சியிலிருந்து பாகிஸ்தான் வெளியேற்றப்பட்டது.

(ஒ)

### சாகஸ நிகழ்வில் போர் விமானங்கள் மோதி அமெரிக்காவில் மூவர் பலி

ரெனோ, செப். 19

அமெரிக்காவின் ரெனோ நகரில் விமானங்களின் சாகச நிகழ்ச்சி நடந்தது. ஏராளமான பார்வையாளர்கள் கலந்து கொண்டு இதை ரசித்துப் பார்த்தனர். 2 போர் விமானங்கள் விண்ணில் பாய்ந்து ஒரே நேரத்தில் சாகஸத்தில் ஈடுபட்டன. அப்போது 2விமானங்களும் திடீர் என்று ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன.

இதைப்பார்த்து பார்வையாளர்கள் அதிர்ச்சியடைந்து தப்பி ஓட முயன்றனர். அவர்கள் மீது விமானங்கள் விழுந்து நொறுங்கின. இதில் ஒரு விமானத்தில் இருந்த 74 வயது விமானியும், மற்றும் இருவரும் பலியானார்கள். 56 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 15 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.



வியட்நாம் தலைநகர் ஹநோய்க்கு சென்ற இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை (இடது), ஜனாதிபதி ட்ருவாங் டன் சங் வரவேற்கிறார்.

# நேட்டோ வான் தாக்குதலில் 18 தலிபான்கள் உயிரிழப்பு

காபூல், செப். 19

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படையினர் நடத்திய வான் தாக்குதலில் 18 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். ஆப்கானிஸ்தானின் பர்காய்மெட்டால் மாவட்டத்தின் லோகால் பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருக்கின்றது என சர்வதேச பாதுகாப்புப் படையினருக்கும், நேட்டோ படையினருக்கும் இரகசிய தகவல் கிடைத்தது.

இதன்போது நேட்டோ படையினர் இந்தப்பகுதி மீது திடீர் வான் தாக்குதல் நடத்தினர். இதில் 18 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் அப்பாவி மக்கள் எவரும் பலியாகவில்லை என அந்த மாவட்ட பொலிஸ் அதிகாரி ஜாஹித் நௌரிஸ் தானி கூறினார்.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் தலிபான்கள் என தலிபான்கள் அமைப்பின் செய்தித்தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாகித் உறுதிசெய்துள்ளார்.

# சீனாவில் கடும் மழை

சீனாவில் பெய்து வரும் கனத்த மழையில் இதுவரை 9 பேர் பலியாகியுள்ளனர். சீனாவின் ஷான்சி மாகாணத்தில் கடந்த இரு வாரங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. வெள்ளத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. 50 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

ஏறக்குறைய 62 ஹெக்டேர் விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மழையினால் ஏற்பட்டுள்ள நட்டத்தின் மதிப்பு ரூ.500 கோடிக்கும் மேல் என்று கூறப்படுகிறது.

### நேபாளத்தில் நிலச்சரிவு ஏழு பேர் பரிதாபப் பலி

காத்மாண்டு, செப். 19

நேபாளத் தலைநகர் காத்மாண்டருகே சனிக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 7 பேர் இறந்தனர். 19 பேர் காயமடைந்தனர். இறந்தவர்களில் வயதானோர் இருவரும், 5 வயதுச் சிறுமியும் அடங்குவர்.

ரோல்கா மாவட்டம் மிஜ்ஜிங் கிராமத்தில் ஏற்பட்ட இந்த நிலச்சரிவில் அங்கிருந்த 8 வீடுகள், கடைகள் ஆகியவை தரைமட்டமாயின. ரூ.5 கோடி அளவுக்கு இழப்பேற்பட்டிருக்கலாமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மும்பை குண்டு வெடிப்பு வழக்கு நீதிபதி திடீரென மாற்றப்பட்டார்

இஸ்லாமாபாத், செப். 19

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் மும்பை குண்டுவெடிப்பு வழக்கின் நீதிபதி சனிக்கிழமை மாற்றப்பட்டார்.

2008ஆம் ஆண்டு 166 பேரை பலி கொண்ட மும்பை குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கு, பாகிஸ்தானின் ராவல்பிண்டியிலுள்ள தீவிரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

2009ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் இந்த வழக்கை விசாரித்து வந்த நீதிபதிகள் அனைவரும், வழக்கின் பல்வேறு நிலைகளில் மாற்றப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரிக்க 5ஆவது நீதிபதியாக ஷாகித் ரபிக் என்பவர் கடந்த ஜூலை மாதம் நியமிக்கப்பட்டார். வழக்கை விசாரித்து வந்த இவரும் சனிக்கிழமை மாற்றப்பட்டார்.

முன்பு பணிபுரிந்த குஜ்ரன்வாலா நீதிமன்றத்துக்கே இவர் மாற்றப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் வேறு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ள இந்த வழக்கு செப்ரெம்பர் 24ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த ஸகியுர் ரெஹ்மான் லக்வி, நீதிபதி ரபிக் மீது குற்றம் சுமத்தி மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில் ரபிக் பாகிஸ்தான் உள்துறை அமைச்சகம் மற்றும் இந்தியாவின் சார்பாக செயற்படுவதாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

### சிரியாவில் 15 பேர் சுட்டுக் கொலை

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்தை பதவி விலகக்கோரி மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். சனிக்கிழமை நாடு முழுவதும் கிளர்ச்சியில் ஈடுபட்ட 15 பேரை இராணுவம் சுட்டுக்கொன்றது. ஹமா நகரில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

ஹாம்ஸ் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 2 பேர் பலியாயினர்.

இதற்குத் துருக்கி பிரதமர் ரீசெப் தய்யிப் எர்டோகன் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

# இரு சூரியன்கள் உதிக்கும் புதிய கிரகம் கண்டுபிடிப்பு

வாஷிங்டன், செப். 19

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சமீபத்தில் ஹெப்லர் என்ற பெயர் கொண்ட விண்கலம் ஒன்றை விண்ணுக்கு அனுப்பினார்கள்.

இந்த விண்கலம் 2 சூரியன்கள் உள்ள கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளது. இந்தக் கிரகம் பூமியிலிருந்து 200 ஒளி வருடங்களுக்கு அப்பால் உள்ளது. ஒளி வருடம் என்பது ஒளி ஒரு வருடத்தில் கடக்கும் தூரமாகும். அதாவது ஒன்பதரை இலட்சம் கோடி கி.மீற்றராகும்.

2 சூரியன்களைச் சுற்றி வர இந்தக் கிரகம் 229 நாள்களை எடுத்துக்கொள்கிறது. இரு சூரியன்கள் இருந்தாலும் இவை ஒரே திசையில் இருப்பதால் பூமியைப் போலவே இந்தக் கிரகத்திலும் பகல்-இரவு இருந்து வருகிறது. இதனால் ஒரு நாளைக்கு இரண்டு சூரிய உதயங்களும், இரண்டு சூரிய அஸ்தமனங்களும் நிகழ்கின்றன.

இதில் ஓர் ஆச்சரியம் என்னவென்றால், இரண்டு சூரியன்களும் ஒன்றையொன்று சுற்றி வருகின்றன. இதனால் 20 நாள்களுக்கு ஒரு தடவை கிரகணம் ஏற்படுகிறது. சூரியன்கள் இரண்டும் நமது பூமியில் காணப்படும் சூரியனைவிடச் சிறியவை. ஒன்று ஒரேஞ் நிறத்திலும், மற்றொன்று சிவப்பு நிறத்திலும் தோன்றி மறைகின்றன.

ஒன்று நாம் காணும் சூரியனைவிட முக்கால் பங்கிற்கும் குறைவான அளவை உடையது. மற்றொன்று கால் பங்கிற்கும் குறைவானது.

இந்தப் பிரபஞ்சத்தில் பல வகை சூரியன்களும் (நட்சத்திரங்கள்), கிரகங்களும் உள்ளன என்பதையே இது காட்டுகிறது.

ஹெப்லர் விண்கலம் கண்டுபிடித்ததால் இந்தக் கிரகத்துக்கு ஹெப்லர் 16பி என பெயர் சூட்டப்பட்டுள்ளது என அமெரிக்காவின் கலிபோர்னியா கார்ல்சேகன் விண்வெளி ஆய்வு மைய விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

### ஒட்டிப் பிறந்தோரின் 50 ஆவது பிறந்தநாள்

லண்டன், செப். 19

டாக்டர்களின் ஊகங்களை முறியடித்து, தலை ஒட்டிப் பிறந்த ஆண், பெண் இரட்டையர்கள் தங்கள் 50ஆவது பிறந்த நாளை சமீபத்தில் கொண்டாடினர்.

ஜோர்ஜ், லோரி சேப்பல் என்ற ஆண், பெண் குழந்தைகள் இருவர் அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் பிறந்தனர். பிறக்கும்போதே, இருவரது தலைகளும் ஒட்டியே இருந்தன. அத்தோடு தலையின் முக்கிய நரம்புகளும், மூளையில் 30 சதவீதமும் இருவருக்கும் பொதுவாக இருந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரங்க தரப்படுத்தல் பட்டியலில் யாழ்.வீரர்கள்

யாழ்ப்பாணம், செப் 19

உலக சதுரங்க சம்மேளனத்தால் இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை வெளியிடப்படும் சர்வதேச சதுரங்க தரப்படுத்தல் புள்ளிகள் பட்டியலில் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்ட பட்டியலில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் இடம் பெற்றுள்ளனர்.

இதில் காங்கேயன் ஆதவன் 1940 புள்ளிகளைப் பெற்று இலங்கையில் 41 ஆவது இடத்தையும் சிவகுருநாதன் வித்தியாரணி 1901 புள்ளிகளைப் பெற்று இலங்கையில் 70 ஆவது இடத்தையும் (பெண்கள் பிரிவில் முதலாமிடம்),



வித்தியாரணி வித்தியாதரன் ஆதவன்

சிவானந்தன் வித்தியாதரன் 1700 புள்ளிகளைப் பெற்று இலங்கையில் 195 ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# கொக்குவில் ச.ச.நி. வெள்ளிவிழா கிரிக்கெட்

# ஜொலிஸ்ரார், கொக்குவில் மத்தி வெற்றி

யாழ்ப்பாணம், செப்.19

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட் டுக் கழகத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டக் கழகங்களுக்கு இடையே நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டங்களில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், கொக்குவில் மத்திய சன சமூக விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு அணிகள் வெற்றி பெற்றன.

காலையில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட் டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக் கழக அணி 24.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் வைகுந்தன் 29 ஓட்டங்களையும் தயாளன் 18 ஓட்டங்களையும் சுதர்ஷன் 15 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பாக சஞ்ஜீவன் 4.2 ஓவர்கள் பந்து வீசி, 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் லக்ஷ்மிகாந், 5 ஓவர்கள் பந்து வீசி, 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் பகீதரன் 5 ஓவர்கள் பந்து வீசி, 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 13.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பகீதரன் 47 ஓட்டங்களையும் மணிவண்ணன் ஆட்டம் இழக்காமல் 40 ஓட்டங்களையும், ஜெனார்ந்தனன் ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யூனியன் விளையாட்டுக்கழக அணி சார்பாக கரில்ராஜ் 3 ஓவர்கள் பந்து வீசி ஒரு விக்கெட்டையும் பிரசாந்தன் ஒரு ஓவர் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி8 விக்கெட்டுக் களால் வெற்றிபெற்றது.

நண்பகல் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணி 30 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது.

நிரஞ் 32 ஓட்டங்களையும், ராகுலன் 32 ஓட்டங்களையும், கோபி 29 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி சார்பாக பங்குயன் 3 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 38 விக்கெட்டுக்களையும் ரம்மிய ராகுலன் 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சாம்பவன், 6 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

182 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி 24.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

ராகுலன் 64 ஓட்டங்களையும் சாம்பவன் ஆட்டம் இழக்காமல் 35 ஓட்டங்களையும் உத்தமன் ஆட்டம் இழக்காமல் 24 ஓட்டங்களையும் பங்குசன் 24 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பாக நிக்சன் 5 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 33 விக்கெட்டுக்களையும் வாகீசன் 4 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் துஷாந் 3 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

(ம-23)

# கொழும்பு சென்.பீற்றர்ஸ் அணி யாழ்.இந்து அணியை வென்றது

யாழ்ப்பாணம், செப்.19

இலங்கை பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியில் 15 வயது பிரிவு III இற்கான கிரிக்கெட் ஆட்டத் தொடரின் ஆட்டம் ஒன்றில் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி 76 ஓட்டங்களால் யாழ்.இந்துக் கல்லூரி அணியை வெற்றிகொண்டது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பீற்றர் கல்லூரி அணி 47.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

நவீன் 43 ஓட்டங்களையும் லவிஸ்கா 23 ஓட்டங்களையும் கரிஸ் பொன்சேகா 24 ஓட்டங்களையும் பெர்ணான்டோ ஜோயல் 35 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பாக வைகரன் 10 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பிரணவன் 10 ஓவர்கள் பந்துவீசி 44 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பார்த்தீபன் 5 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பார்த்தீபன் 5 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை யும் வளுதி 6 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கிரிசாந் 10 ஓவர்கள் பந்து வீசி 47 ஓட்டங்களுக்கு35 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

213 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 39.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் கிரிசாந் ஆட்டம் இழக்காமல் 35 ஓட்டங்களையும் ஜெவஸ் ச.சர்மா 24 ஓட்டங்களையும் டானியல் 23 ஓட்டங்களையும் வளுதி 15 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர். பந்து வீச்சில் சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி சார்பாக பண் டார 10 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களுக்கு5 விக்கெட்டுக்களையும் ஜோயியல் 10 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நவின் 8.2 ஓவர்கள் பந்துவீசி 20ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மிசான் 6 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். 76 ஓட்டங்களால் சென். பீற்றஸ் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டது.

(ம-23)



வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரம் சுற்றுப்போட்டியில் வவுனியா வடக்கு சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற வீராங்கனைகள், அதிபர் மற்றும் ஆசிரியர்கள். (எ)

# தாச்சிப் போட்டி இன்று

பரந்தன், செப்.19

யாழ்.சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகம் சர்வதேச சமாதான தினத்தையொட்டி தாச்சிப் போட்டியினை நடத்தவுள்ளது. கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலய விளையாட்டு அரங்கில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆட் டங்கள் ஆரம்பமாகவுள்ளன.இந்தப் போட்டியில் பளை, கரைச்சி மற்றும் பரந்தன், பூநகரிக் கோட்டங்களைச் சேர்ந்த தரம் 9, 10 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-160)

# திருக்குடும்ப கன்னியர்மடம் கால் இறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், செப்.19

இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கைப் பாடசாலை 19 வயதுப் பெண்கள் பிரிவுப் பிரிவினருக்கான தேசிய மட்ட கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட அணி வெற்றி பெற்று கால் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

நேற்று நுகேகொட சென். ஜோசப் பாலிகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட அணியை எதிர்த்து குருநாகல் மல்லிகாதேவி மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை அணி 38:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கால் இறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (எ-23)

# பருத்தித்துறை லீக் அணி வெற்றி

யாழ்ப்பாணம்,செப். 19

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் இன்ரலீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தில் மட்டக்களப்பு உதைபந்தாட்ட அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது. தத்தமது அணியே வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கோடு இரு அணிகளும் களம் இறங்கினர். முதல்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 10 நிமிடத்தில் மட்டக்களப்பு அணி வீரன் சுபோஸ்குமார் தனது அணிக்காக முதலாவது கோலினை போட்டார். இதைத் தொடர்ந்து ஆட்டம் சூடு பிடித்தது.

இரண்டு அணி வீரர்களும் எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் நுழைந்தபோதும் கோல் போட முடியாத அளவுக்கு பின்கள வீரர்களால் முறியடிக்கப்பட்டது. முதலாம் பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்டபோது மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் நின்றது.

இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட முதலாம் பாதி ஆட்டம் இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமானபோது இரு அணிகளும் மேலும் கோல்கள் போடவேண்டும் என்ற நோக்கோடு களம் இறங்கினர்.

இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியது. இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கி 4 ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வீரன் சாரங்கன் தனது அணிக்கான முதலாவது கோலினை போட்டார். அதனைத் தொடர்ந்து 16 ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணிக்கான கோலினை கியூட் போட்டார்.

மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக் அணிக்கு 18 நிமிடத்தில் தண்டனை உதை கிடைக்கப்பெற்றது. அதனை கோலாக்கினர். இரண்டு அணிகளும் மாறி மாறிக் கோல்களைப் பெற்ற வண்ணம் இருந்தன. 23 ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வீரன் கியூட் அணிக்கான மூன்றாவது கோலினைப் போட அதனைத் தொடர்ந்து 28 நிமிடத்தில் றஞ்சித் நான்காவது கோலினைப் போட்டார்.

ஆட்ட முடிவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி 4:2 என்ற கோல் கணக்கில் மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக் அணியை வெற்றி கொண்டது. (எ-23)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆஸிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில்

# வலுவான நிலையை நோக்கி இலங்கை





**ஆஸிக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி வலுவான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. நேற்றைய ஆட்டநேர முடிவில் 428 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்துள்ளது. இதன் மூலம் ஆஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் பெற்ற ஓட்ட எண்ணிக்கையை விட 112 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. அஞ்சலோ மத்தியூஸ் 85 ஓட்டங்களுடனும், எரங்க 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.**

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் 3 டெஸ்ட் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. இதில் காலியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆஸி அணி வெற்றிபெற்றது. பல்லேகளவில் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இந்த நிலையில் கொழும்பில் 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் 16 ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 316 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மைக்கல ஹஸி 118, மார்ஷ் 81, பொன்டிங் 48, ஹடின் 35 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். இவர்களைத் தவிர மற்ற வீரர்கள் எல்லோரும் ஒற்றை ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திரும்பினர். பந்து வீச்சில் இலங்கை சார்பில் இந்த டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகமான எரங்க 4 விக்கெட்டுக்களையும், வெலகெதர 3 விக்கெட்டுக்களையும், லக்மால் 2, ஹேரத் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் பலமான அடித்தளத்துடன் சிறப்பான இலக்கை நோக்கி முன்னேறியது. நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் 166 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து இலங்கை அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தது. பரணவிதாரன 46, திரிமனே 28 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்திருந்தனர். சங்ககார 61 ஓட்டங்களுடனும், மஹேல 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

நேற்றைய தினம் ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்தில் மஹேல 117 பந்துகளில் தனது 40 ஆவது டெஸ்ட் அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். 3 ஆவது விக்கெட்டுக்காக 101 ஓட்டங்களை சங்கா - மஹேல ஜோடி பகிர்ந்து கொண்டநிலையில் மஹேல 51 ஓட்டங்களுடன் வொட்ஸனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். மஹேல வெளியேறிய பின்னர் மேலதிகமாக 12 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சங்காவின் விக்கெட்டை சிடில் சரித்தார். சங்கா 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 210 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்தது.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த டில்ஷான் - மத்தியூஸ், ஆஸியின் பந்து வீச்சை சமாளித்து இலங்கை அணியின் இலக்கை வலுப்படுத்தினர். தொடர்ச்சியாக சிறப்பான 'போர்ம்' இன்றி தவித்து வந்த டில்ஷான் நேற்றைய தினம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். அத்துடன் வேகமாகவும் ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். சிறப்பாக ஆடிய டில்ஷான் 75 பந்துகளில் தனது 18 ஆவது டெஸ்ட் அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். 5 ஆவது விக்கெட்டுக்காக 121 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் டில்ஷானின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 131 பந்துகளில் 14 பவுண்டரிகள் அடங்கலாக 83 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹோப்லண்டின் பந்து வீச்சில் டில்ஷான் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இருந்தும் மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த மத்தியூஸுக்கு, பிரசன்ன ஜெயவர்தன நல்ல ஒத்துழைப்புக் கொடுத்து ஆடினார். 119 பந்துகளை சந்தித்த மத்தியூஸ் தனது 5 ஆவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இவர்களது இணைப்பாட்டத்தின் உதவியுடன் இலங்கை அணி 400 ஓட்டங்களைக் கடந்தது. பிரசன்ன, லயோன் வீசிய ஓவரில் அடுத்தடுத்து இரண்டு சிக்ஸர்கள் அடித்து அசத்தினார். இருப்பினும் 47 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹோப்லண்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இறுதியில் நேற்றைய ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 428 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மத்தியூஸ் 85, எரங்க 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். பந்து வீச்சைப் பொறுத்த வரையில் ஹோப்லண்ட், சிடில் தலா 2 விக்கெட்டுக்களையும், ஜோன்ஷன், வொட்ஸன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றியுள்ளனர். இன்று ஆட்டத்தின் நான்காவது நாளாகும்.

(15)

# சம்பியன் லீக் கொண்டாட்டம் இன்று ஆரம்பமாகின்றது

சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் எதிர்வரும் 23 ஆம் திகதி பெங்களூரில் தொடங்குகின்றது. இதில் மொத்தம் 10 அணிகள் கலந்து கொண்டு மோதுகின்றன. இதற்கான தகுதிச் சுற்று இன்று ஆரம்பமாகின்றது.

போட்டிகள் சென்னை, பெங்களூர் மற்றும் கொல்கத்தாவில் நடக்கிறது. ஐ.பி.எல்லில் விளையாடிய சென்னை சுப்பகிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் மற்றும் ஆஸ்திரேலியாவை சேர்ந்த வாரியர்ஸ், தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவின் கிங் கோப்ராஸ், இங்கிலாந்தின் நியுசவுத் வேல்ஸ் ஆகிய 7 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மீதியுள்ள 3 இடங்களுக்கு 6 அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்த 6 அணிகள் மோதும் தகுதி சுற்று ஆட்டங்கள் இன்று ஹைதராபாத்தில் தொடங்குகின்றது. கொல்கத்தா நைட்ரைடர்ஸ், டிரினிடாட், அக்லாந்து, சோமர்செட், லீசெஸ்டர்ஷயர், இலங்கையின் ருகுன ஆகிய அணிகள் தகுதி சுற்றில் பங்கேற்கின்றன.

தகுதி சுற்று எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நடக்கிறது. இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் டிரினிடாட் - இலங்கையின் ருகுன அணிகளும், மற்றொரு ஆட்டத்தில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - அக்லாந்து அணிகளும் மோதுகின்றன. தகுதி சுற்று ஆட்டங்கள் அனைத்தும் ஹைதராபாத்தில் நடக்கிறது.

புள்ளிகள் அடிப்படையில் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் பிரதான சுற்றுக்கு தகுதி பெறும். பிரதான சுற்று போட்டி 23 ஆம் திகதி பெங்களூரில் கோலாகலமாக தொடங்குகிறது. தொடக்க ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் - வாரியர்ஸ் அணியை எதிர்கொள்கிறது. டோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் தனது முதல் ஆட்டத்தில் 24 ஆம் திகதி சச்சினின் மும்பை இந்தியன்ஸை எதிர்கொள்கிறது. இறுதிப் போட்டி ஒக்டோபர் 9 ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறுகிறது.

(15)

# வருகிறது சோதனை



## சாதிப்போம் என்கிறார் குக்

ஒரு நாள் தொடரில் இங்கிலாந்து அணி ஆதிக்கம் செலுத்தி இருக்கலாம். ஆனால் அடுத்த மாதம் இந்தியாவில் விளையாட உள்ள 5 ஆட்டம் கொண்ட ஒரு நாள் தொடரில் தான் உண்மையான சோதனை காத்திருப்பதாக இங்கிலாந்து தலைவர் குக் கூறியுள்ளார்.

இந்திய துணை கண்டத்தில், ஒரு நாள் போட்டிகளில் நாங்கள் பெரிய அளவில் சாதித்தது இல்லை. எனவே இன்னும் நாங்கள் நிறைய கற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது. இருப்பினும் எங்கள் மீது மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

கடைசியாக 2008 ஆம் ஆண்டு இந்தியா சென்ற போது நாங்கள் ஒரு ஆட்டத்திலும் வெற்றி பெறவில்லை. எனவே அடுத்த இரண்டு மாதங்கள் எங்களுக்கு சவால் காத்திருக்கிறது என்றார். இந்தியா இங்கிலாந்து இடையிலான 5 போட்டி கொண்ட ஒரு நாள் தொடர் ஒக்டோபர் 14 ஆம் திகதி ஹைதராபாத்தில் தொடங்குகிறது.

(15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 செப்ரெம்பர் 2011 திங்கட்கிழமை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி சிவனேஸ்வரன் - கமலாதேவி தம்பதியரின் செல்வப்புதல்வன்

**சஞ்சீவன்**

யா/ இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் 2011 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்றமையையிட்டு சஞ்சீவனை மனதார வாழ்த்துவதுடன் இவருக்கு கல்வியறிவூட்டிய வகுப்பாசிரியர் மற்றும் அதிபர் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாவற்குழி.

வாழ்த்துவோர்
அன்ரி, அண்ணன்மார்,அக்கா

## பதவி வெற்றிடம்
## பனங்காமம் பற்று பல நோக்குக் கூட்டுறவு சங்கம், வவுனிக்குளம்.

மேற்படி சங்கத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை சுயமாக தயாரித்து தலைவர், பனங்காமம் பற்று பலநோக்குக்கூட்டுறவு சங்கம், பாலிநகர், வவுனிக்குளம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 15.10.2011 பிற்பகல் 4.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும் வண்ணம் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய பெயர் எழுதப்பட வேண்டும்.

வயது எல்லை:-

- சங்கப்பணியாளர்களாயின் வயதெல்லை கணிக்கப்படமாட்டது.
- தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாயின் 18-45 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

01. பதவி: பொது முகாமையாளர்:- 101:07

சம்பள அளவுத்திட்டம் (66/2006ன்படி) 11450-145x10 -150x10-14500

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-

- கூட்டுறவுப் பணியாளர் 08 ஆவது சம்பளத்திட்டப் பதவி ஒன்றில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டப்பதவி ஒன்றில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
- அல்லது
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்டப் பதவி ஒன்றின் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
- அல்லது
- கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்டப் பதவி ஒன்றின் 08 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

குறிப்பு:- கணினி, ஆங்கில அறிவு, அனுபவம் முக்கியமாக கவனிக்கப்படும்.

முக்கிய குறிப்பு:-
சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சங்கப்பணியாளர்களாயின் கடமையாற்றும் சங்கத்துக்கு ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

தலைவர்.
பனங்காமம் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
வவுனிக்குளம்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
04 ✱ 05 ✱ 1929

ஆண்டவன் அடியில்
21 ✱ 09 ✱ 2008

அமரர்
**திருமதி சரஸ்வதி சோமசுந்தரம்**

திதி: அபரபக்க ஸப்தமி

அன்போடும் பண்போடும் அவனியில் பிறந்து
ஆர்வமுடன் அன்பாக எமை ஏந்தி அறிவூட்டி
இன்முகத்துடன் இடும்பை நீக்கி வாழ இனிய வழிகாட்டி
பார்போற்ற பாராட்டி சீராட்டி வளர்த்தெடுத்த எம் அன்னையே
எமை விட்டு நீங்கள் பிரிந்து சென்று
மூன்றாண்டுகள் சென்றாலும்
எம் உள்ளக் கமலத்தில் ஒளிவீசும்
அணையா விளக்காக வாழ்ந்துகொண்டிருக்கின்றீர் அம்மா.

சரவணை கிழக்கு,
வேலணை.

உங்கள் நினைவோடு வாழும்
குடும்பத்தினர்.

# களமிறங்கும் 'சுதந்திர ஊடகக் குரல்'
# யாழில் புதிய ஊடக அமைப்பு உதயம்

கொழும்பு, செப். 19

'சுதந்திர ஊடகக்குரல்' எனும் புதிய ஊடக அமைப்பு யாழில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள் மீது தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்டு வரும் வன்முறைகளை அடுத்து சுதந்திரமான புதிய செயற்றிறன் கொண்ட ஊடகவியலாளர் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியின் பயனாக 'சுதந்திர ஊடகக் குரல்' அமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு ஆரம்பிப்பதற்கான நிகழ்வு நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது அமைப்பிற்கான நிர்வாகத் தெரிவு இடம்பெற்று அமைப்பின் யாப்பும் வெளியிடப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் சுமார் எண்பதுக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

நாட்டில், ஊடகவியலாளர்கள் மீது தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை அடுத்து சுதந்திரமானதும் புதிய செயற்திறன் கொண்டதுமான ஊடகவியலாளர் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற கருத்து ஊடகவியலாளர்கள் மத்தியில் எழுந்தது.

அதன் அடிப்படையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி யாழ்பாடி விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது அமைப்பைத் தோற்றுவிப்பதற்கான விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய நேற்று ஊடக அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதற்கு 'சுதந்திர ஊடகத்தின் குரல்' எனவும் பெயர் சூட்டப்பட்டது.

## பசுவைக் காணவில்லை

யாழ்.நகரப் பகுதியில் NS என வயிற்றுப் பகுதியில் குறி இடப்பட்ட செம்மண் நிறமுடைய பசுவைக் காணவில்லை. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். T.P. : 0776282739

## மரண அறிவித்தல்



**கிருஷ்ணர் வல்லிபுரம் (வல்லி)**
**(லொறிச்சாரதி )**

பலாலியைப் பிறப்பிடமாகவும் 161/1, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் வல்லிபுரம் நேற்று (18.09.2011) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

161/1, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### இலங்கை மீனவர்கள் 6 பேரை மீட்டது இந்தியக் கடற்படை

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள காக்கிநாடு கடற்பிராந்தியத்தில் வைத்து 6 இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த படகு, இயந்திரக்கோளாறு காரணமாகச் செயலிழந்த நிலையிலேயே இந்தியக் கடற்படையால்காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த ஓகஸ்ட்மாதம் 18ஆம் திகதி இலங்கையில் இருந்து தொழிலுக்காக சென்ற நிலையில், இயந்திரம் செயலிழந்ததை அடுத்து, நேற்றுமுன் தினம் வரை கடலில் சிக்கியிருந்தனர்.

மீட்கப்பட்ட இலங்கை மீனவர்களை, இலங்கைக்கு மீள அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.

## முதலாம் ஆண்டு நினைவில்...



**Dr.வேலுப்பிள்ளை துரைராஜா**

(சித்த ஆயுள்வேத வைத்தியர் - அகஸ்தியர் வைத்தியசாலை. உரிமையாளரும் ஸ்தாபகரும் - அகஸ்தியர் வைத்தியசாலை & மருத்துவசாலை, முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் - யாழ். போதனா வைத்தியசாலை)

அன்னை மடியில்
21.01.1949

ஆண்டவன் அடியில்
30.09.2010

ஓராண்டு சென்றபோது
ஆறவில்லை எம் துயரம்
அன்பும் பண்பும் நிறைந்த
எங்கள் குல விளக்கே
எங்கள் உயிருக்குள்ளே உயிராக
வாழ்ந்து கொண்டிருக்கும் அப்பா
உங்கள் புன்சிரிப்பையும்,கோபத்தில்
துடிக்கும் உங்கள் மீசையையும் எங்களால்
என்றுமே மறக்கமுடியாது. மறக்கவும்மாட்டோம்.
அம்மாவும் நாங்களும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய வேண்டுமென்று
சுட்டிவேரகத்து அம்பாளைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

மனைவி,
பிள்ளைகள்.

## பின்னல் வேலை

சிறந்த முறையில் கதிரைகள் பின்னிக் கொடுக்கப்படும்.


தொடர்பு இலக்கம்: 0770310476


## வீடு வாடகைக்கு

2 or 3 பேர் கொண்ட சிறிய குடும்பம்/ அலுவலக தேவைக்குப் பயன்படுத்தக்கூடிய சிறிய வீடு இல.13/2, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உடனடியாக வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0212226236, 0777246723

## ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிடம்





இந்தியாவிலிருந்து வந்துள்ள
பிரபல ஜோதிடர்
K.M.றாஜீ சுவாமிஜி
இவர் வெளிநாடுகளிலும் மக்களது
பல பிரச்சினைகளைத் தீர்த்துள்ளார்.
கைரேகை, கல்வி, உத்தியோகம்,
தொழில், குழந்தைப் பாக்கியம்
அனைத்துப் பிரச்சினைகளும் தீர்த்துத்
தரப்படும்.
தொ.பே: 072 3811189, 075 2551018
([illegible])
இல.[illegible] [illegible] வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் மு.ப. 8.00 - பி.ப. 7.00 வரை.

## மரண அறிவித்தல்



**சின்னப்பு சிவப்பிரகாசம்**
(ஓம் வீராட் விஷ்வப் பிரம்ம ஸ்ரீ )

காளிகோயிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு சிவப்பிரகாசம்17.09.2011 சனிக்கிழமை சுவிற்சர்லாந்தில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு (மலேசியா பென்சனியர்) - மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவனேசனின் (இந்தியா) அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான தர்மலிங்கம்,பாலச்சந்திரன் மற்றும் புஸ்பராணி (சங்கானை),துரைச்சாமி(சங்கானை),காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் தில்லைராணி(டென்மார்க்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் ரவீந்திரன் (டென்மார்க்), புஸ்பவதி,மாசிலாமணி காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
சங்கானை.

தகவல்:
சின்னப்பு துரைச்சாமி
(சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழு, ஐ.நா. அறிக்கைகளை 2012 ஜெனிவாக் கூட்டத்தில் சமர்ப்பிக்க கோரிக்கை

கொழும்பு, செப் 19

ஜெனீவாவில் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள 19ஆவது மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையும், ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை 16 சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தலைவராக உள்ள உருகுவேயின் லாரா டிப்பூ லெஸ்ஸரியிடம் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பில் 16 அரச சார்பற்ற அமைப்புகளும் கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பியுள்ளன.

அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

2009 ஆம் ஆண்டு மே 23 ஆம் திகதியன்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூனும் வெளியிட்ட அறிக்கையில், சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு ஏற்ப, வன்முறைகள் தொடர்பில் இலங்கை அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற வசனம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை அரசு தமது கடமையை நிறைவேற்ற வேண்டும். இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் தமது நல்லிணக்கக்குழுவின் அறிக்கையை வெளியிடவேண்டும்.

ஏற்கனவே 17 மனித உரிமைகள் பேரவை கூட்டத்தின்போது இலங்கை எதிர்வரும் நவம்பர் மாதம் நல்லிணக்கக்குழுவின் அறிக்கை வெளியாகும் என்று தெரிவித்திருந்தது.

இதன் அடிப்படையில் அந்த அறிக்கையும் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையும் 19 வது செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அரச சார்ப்பற்ற அமைப்புக்கள் கோரியுள்ளன. என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க ஜனநாயக அமைப்பு, சர்வதேச மன்னிப்பு சபை, மனித உரிமை மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆசிய அமைப்பு, ஆசிய சட்டவாக்க நிலையம், கெய்ரோ மனித உரிமைகள் கற்கை மையம், பொதுநலவாய மனித உரிமைகள் அமைப்பு, கிழக்கு மற்றும் ஆபிரிக்க மனித உரிமைகள் பாதுகாப்பு திட்டம், ஜேர்மன் மனித உரிமைகள் அமைப்பு, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச ஜூரிமார் ஆணைக்குழு, சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சம்மேளனம், இனத்துவேசம் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான சர்வதேச அமைப்பு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவை, சர்வதேச கத்தோலிக்க புத்திஜீவிகள் அமைப்பு மற்றும் சித்திரவதைக்கு எதிரான உலக அமைப்பு என்பனவே இந்த வலி யுறுத்தலை விடுத்துள்ளன. (சி)

# ஐ.தே.கவிலிருந்து பிரிந்து சென்ற மு.கா எதைச் சாதித்தது - ரணில்

கொழும்பு, செப் 19

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டதைத் தவிர இந்தப் பிரதேசங்களில் என்ன அபிவிருத்திகளை மேற்கொண்டனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கேள்வியெழுப்பினார்.

கல்முனை மாநகர சபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று சாய்ந்தமருது, கல்முனைக்குடி, பாண்டிருப்பு, மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் தேர்தல் காரியாலயங்கள் திறந்துவைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டங்களும் இடம்பெற்றன.

குறித்த பிரதேசங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு-

நாட்டில் காணப்படும் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டுமானால் அனைத்து மக்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

அரசுடன் இணைவதன் மூலமே அம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் போன்று முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியும் எனக் கூறி எம்மிடமிருந்து பிரிந்து சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மக்களுக்கு எதுவும் செய்ய முடியாது போயுள்ளது.

அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டதைத் தவிர இந்தப் பிரதேசங்களில் என்ன அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளனர். இன்னும் கல்முனை நகர் சுடுகாடு போல் காட்சியளிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது - என்றார். (சி)

## இலங்கை....

நடைபெற்ற காலப்பகுதியிலும் இந்தியக் கடற்படை இலங்கைக் கடற்படையுடன் போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்ட போதும், இன்று ஆரம்பமாகும் ஒத்திகை பெரியளவிலானது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் இந்தியப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, போர் ஒத்திகையில் பங்கேற்பதற்காக இலங்கை வரும் இந்தியப் போர்க் கப்பல்களில் இருக்கும் படையினர் திருகோணமலை நகருக்குள் வந்து நல்லெண்ண நடவடிக்கைகள் சிலவற்றிலும் ஈடுபடவுள்ளார்கள் என்று உள்ளூர் அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர். (உ)

## ரயில்-லொறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நோக்கிச் சென்ற 'ரஜரட்ட ரஜனி' ரயில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற லொறியுடன் மோதியுள்ளது.

பாதுகாப்புக் கடவை மூடப்படாத நிலையில் முன்னால் சென்ற வாகனத்தைப் பின் தொடர்ந்து லொறி சென்ற வேளை இந்த அனர்த்தம் இடம் பெற்றதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

அநுராதரபுரம் மதவாச்சி வீதியிலுள்ள யாழ்ப்பாணம் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றது. லொறியின் உதவியாளர் லொறியிலிருந்து பாய்ந்து தப்பிவிட்டார். இவர் கொட்டியைச்சேர்ந்த எஸ். சந்திரகுமார் என்பவராவார்.

இந்த விபத்துக் குறித்து அநுராதபுரம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ-10)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுடன் சமரசம் பேசும் பிளேக் இலங்கைக்கு வெளியே சென்றுதான் வீரவசனம் பேசுகின்றார். அரசியல் தீர்வு விடயம் தொடர்பாக அடிக்கடி பேசும் இவர், எப்பொழுதாவது பொலிஸ் காணி அதிகாரம் வழங்கப்படவேண்டும் எனக் கூறியுள்ளாரா?

தமிழர் விடயம் தொடர்பாக எதையாவது பேச வேண்டும் என்பதற்காகவே ரொபேர்ட் ஓ பிளேக் அவ்வாறு கூறியுள்ளார். இந்தியாவும் அது தொடர்பில் அலட்டிக்கொள்ளாது. ஏனென்றால், மஹிந்த அரசுதான் அவர்களுக்கு முக்கியம்.

அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையே முறிவடைந்திருந்த பேச்சுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. இந்த நிலையில், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கும் முயற்சிகளும் தீவிரமாக நடைபெறுகின்றன. எதை நாம் நம்புவது என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே, அரசின் பொறிக்குள் கூட்டமைப்பு சிக்காமல், கவனமாகச் சிந்தித்து பேச்சுகளை முன்னெடுக்கவேண்டும். அதேவேளை பேச்சுகள் மீண்டும் ஆரம்பமானதை நான் வரவேற்கின்றேன் - என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இதேவேளை, போர்க் காலத்தில் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கி மஹிந்த அரசைக் காப்பாற்றிய அமெரிக்காவும் இந்தியாவும் இப்பொழுது வேறு வடிவில் மஹிந்த அரசைக் காப்பாற்ற முனைகின்றன என்று குற்றஞ்சாட்டுகிறார் ஜனநாயக சோஷலிச கட்சித் தலைவர் ஸ்ரீதுங்க ஜெயசூரிய.

''புலம்பெயர் தமிழர்கள் இன்று அரசுக்கு எதிராகவும், அரசியல் தீர்வை வலியுறுத்தியும் போராடுகின்றனர். இந்த நிலையில், உள்நாட்டில் நாமும் போராட்டங்களை முன்னெடுத்தால்தான் உரிமைகளை வென்றெடுக்க முடியும். மாறாக அமெரிக்காவையும், இந்தியாவையும் நம்பினால் அது பகல் கனவாகும்.

''இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றோம் என்ற போர்வையில் அமெரிக்க அரசு மஹிந்தவைக் காப்பாற்றும் நாடகத்தைத் தொடங்கியுள்ளது என்பது தெட்டத்தெளிவு. ஏனென்றால், மஹிந்த அரசு வளர்வதற்கு வித்திட்டதே அமெரிக்காதான்.

''இவ்வாறான ஓர் நாட்டின் அதிகாரியான ரொபேர்ட் ஓ பிளேக் பிரதான பாத்திரத்தை ஏற்று நடிக்கின்றார். அதுவும் இலங்கை அரசின் வலது கையாகச் செயற்படும் இந்தியாவால்தான் இந்த நாடகம் அரங்கேற்றப்படுகின்றது என்பதை நினைத்தாலே நகைச்சுவையாக உள்ளது'' - என்றார் ஜனநாயக சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய. (உ-சி)

## ஐ.நா.பொதுச்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி உரையாற்றுகிறார்.

ஐ.நா. பொதுச்சபையில் 22 ஆம் திகதி ஜனாதிபதி உரையாற்ற உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க வரும் பல்வேறு நாடுகளின் தலைவர்களை நேரில் சந்தித்துப் பேசுவதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

பல்வேறு நாடுகளின் தலைவர்களையும், வெளிவிவகார அமைச்சர்களையும் ஜனாதிபதி தனித்தனியாகச் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொது செயலாளர் பான் கீ மூனையும் ஜனாதிபதி இந்தப் பயணத்தில் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் இருவருக்கும் இடையில் நடைபெறும் நேரடிச் சந்திப்பாக இது அமையும்.

நிபுணர் குழுவின் அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையாக மனித உரிமைகள் சபையில் தாக்கல் செய்யப்பட்டமை குறித்து தமது அதிருப்தியை ஜனாதிபதி அப்போது நேரில் வெளியிடுவார்.

இதேவேளை, வெளிவிவகார துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஐக்கிய நாடுகள் பொது சபையின் 66 வது அமர்வில் பங்கேற்பதற்காக நேற்று நியூயோர்க்கைச் சென்றடைந்தார். (உ)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு எதிராகவும், தமிழ் மக்கள் விவகாரத்தில் கரிசனையுடனும் செயற்படும் நாடுகளின் தூதரகங்களுக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. அத்துடன், சர்வதேச அனுசரணையுடன் நடத்தப்பட்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சர்வதேச அமைப்பு நிலையங்கள் ஆகியவற்றுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அரசு உடனடியாக ரத்துச் செய்யவேண்டும் என இனவாதமுடைய சிங்கள அமைப்புகள் அரசைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், முறிவடைந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகளை அரசு மீண்டும் ஆரம்பித்துள்ளது. 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் தீர்வு காண்பதற்கு இரு தரப்புக்களும் இணங்கி உள்ளன.

இதனால் கடும் சீற்றம் கொண்ட இந்த அமைப்புகள், சில அரசியல்வாதிகளுடன் இரகசியமாகப் பேச்சுகளை நடத்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகரவிடம் கேட்டபோது, ''அதிரடியாகப் பல விடயங்கள் விரைவில் நடத்தவுள்ளோம். அது என்ன வென்று இப்போது கூறமுடியாது. இறுதி முடிவை செவ்வாய்க்கிழமை அறிவிப்போம்'' - என்றார்.(உ-சி)

## அதிகாரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை ஏற்றுக்கொண்டு செயற்பட்டால் இலங்கையில் ஆட்சி ஸ்திரமற்றுப் போய் விடும். இந்த நிலைமையைப் பயன்படுத்தி சர்வதேச போர்க் குற்ற விசாரணையை நடத்த சர்வதேச நாடுகள் முயல்கின்றன. எனவே, எமது நாட்டையும் எமது தலைவர்களையும் காப்பாற்றுவது எமது பொறுப்பு. 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் ஒரு திருத்தத்தை வரவே விடமாட்டோம்'' என்று கூறினார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் இது குறித்து நேரடிப் பேச்சு நடத்தவும் இந்த அமைச்சர்மார் தயாராகியிருக்கின்றனர். (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயில் அழகுக்கலை நிலையம்
## வீடியோ அன் போட்டோ

**(The Academy of Beauty Therapy & Hair dressing)**

=> குறுகியகால புதிய பயிற்சி வகுப்புக்கள் 24.09.2011 அன்று ஆரம்பமாக உள்ளன.

=> அழகுக்கலை(Beauty culture & Hair Dressing)

=> நவீன ஒப்பனையும் தலையலங்காரங்களும்(Advanced Bridal makeup &Hair dressing)

=> பல வகையான சாறி கட்டும் முறைகள்

★ பயிற்சிகளில் சேரவிரும்புவோர் அனைவரும் உடன் தொடர்புகொள்ளவும்

Teacher
Mrs.Kayalvily Rameshkumar
Diploma in High Beauty Therapy, Advanced Bridal makeup
(India-Srilanka)

இல: 137, தபால் பெட்டி சந்தி
பலாலி வீதி,
திருநெல்வேலி.

T.P:- 021 4922023
0774749107
0776914123

## ஆண்டு விழா நிறைவு

யாழ்ப்பணாம், செப்.19

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு விழா இன்று நடைபெற உள்ளது.

### கட்டட வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை

கட்டட நிறுவனத்துக்கு அனுபவமுள்ள மேசன்மார்கள், உதவியாளர்கள் தேவை.

தொடர்பு:
0773836123
Jaffna.

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிரதான வீதி, உயர்நீதிமன்றம், சுப்பிரமணியம் பூங்கா என்பவற்றுக்கு மிகவும் அண்மையில் இரண்டாம் குறுக்குத் தெருவில் 3 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணறு, சுற்று மதில் என்பவற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0775112005

## Diploma Course fee Free 5

Ms Office, DTP,Hardware & Networking
Accounting,Web Design,Business English

6 கற்கைநெறிகளில் ஏதாவது ஒரு கற்கைநெறியை தேர்வு செய்து ஏனைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிகட்டணமின்றி பயிலும் வாய்ப்பு

இன்றே உங்கள் <Name>,<Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்

MCS
Supported By
UNDP/JRRP

இலங்கை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
324,Palaly Road,Parameswara Junction



## விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி

இந்தியாவின் முதற்தர டிரக்டர் ஆகிய
***Swaraj*** டிரக்டர் தற்போது யாழ்.நகரில்....

முதலாவது டிரக்டர் கொள்வனவாளருக்கு
★ பதிவு இலவசம் ★ துவிச்சக்கரவண்டி இலவசம்

தொடர்பு: **ஆர்க் என்ட பிறைசஸ்**
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## பொருளியல்
## NB. கஜீதரன்

A/L - 2012, 2013
MoDeL PaPeR ClAsS
(புதிய பாடத்திட்டத்திற்கமைவானது)

| NEC (யாழ்நகர்) | BPI (குருநகர்) |
|---|---|

* வாரத்தில் 4 வகுப்புக்கள்
* நேர அட்டவணை அலுவலகத்தில்.

## தேவை

T.V, DVD palyer, Radio மற்றும் மின் உபகரணப் பொருள்கள் திருத்தும் திருத்துநர் தேவை.
சுயவிவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கரன் வேக் சொப்
No.2(10) ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4332

## SAAMSON ENGLISH 3 மாத ஆங்கில பயிற்சி நெறி

### எமது ஆங்கில பயிற்சி எவ்வாறானது?

* எழுத்துப் பயிற்சி இல்லை
* இலக்கணக்கற்றல் இல்லை
* C,D புத்தகக் கற்றல் இல்லை

ஆங்கிலத்தில் உள்ள அனைத்து வசன அமைப்புக்களையும் விளக்கி, மாணவர்களை ஒருவரோடொருவர் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் மட்டுமே நாம் ஆங்கிலத்தை பழக்கப்படுத்துகிறோம்.

**புதிய பயிற்சிப்பட்டறை ஆரம்பம் 24.09.2011**

சனி, ஞாயிறு பிரிவுகள்:- 08 - 10, 10 - 12, 01 - 03, 03 - 05
வார நாள் (திங்கள், புதன்) :- 08 - 10, 10 - 12, 01 - 03, 03 - 05

* ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டும் அனுமதி
* முதல் நாள் பயிற்சிப்பட்டறையில் எவரும் இலவசமாக பங்குபெறலாம்.

SAAMSON ENGLISH | 279, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்
TEL:077 621 4567

## Win Tech

187/1,Parameswara Junction, Palaly Road Jaffna. TP : 031 [illegible]68 9418.

5ம் ஆண்டு புலமை பரிசில் பரிட்சையில் சித்தியடைந்த உங்கள் பிள்ளையினை ஊக்குவிக்க உங்கள் பிள்ளைக்கு எதிர்கால கல்விக்கு உதவியாக ஒரு கணணியினை அன்பளிப்பு செய்யுங்கள்

### இதோ ஒரு அரிய சந்தர்ப்பம்....

Intel 3.0 Ghz (2M)
Astrock G31
1 GB DDR II
160 GB Sata
16" LCD View Sonic
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
32000.00

Intel 3.0 Ghz Dual core
Astrock G31MS
1 GB DDR II
500 GB Sata
16" LCD View Sonic
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
38000.00

Intel 3.0 Ghz Dual core
Astrock G41/Biostar D41D3B
2 GB DDR III
500 GB Sata
19" LCD ASUS/Dell
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
41000.00

**Life Time Service Free**

Intel 3.0Ghz Dual core
ASUS P5G41T-MLX
2 GB DDR III
500 GB Sata
19" LCD Dell/Asus
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
44000.00

Intel i3 3.06Ghz
Astrock H61M-HVS
2 GB DDR III
500 GB Sata
19" LCD Dell/Asus
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
50000.00

Intel i3 3.06Ghz
Asus P7H55-MLX
2 GB DDR III
500 GB Sata
19" LCD Dell/Asus
UPS DCP
Keyboard
Mouse
ATX Casing
DVD Writer LITEON
53000.00

**Computer Sales&Repairing**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org